வெளியீடு 24-8-2000 Issued 24-8-2000

68
2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, நவம்பர் 22, 1999 தொகுதி 85 – எண் 2

**Monday the 22nd November, 1999 – Volume 85 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

D
V211,31'N99
N99.85.2
2,21,203

[Price Rs. 3.00

**22-11-1999**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்-விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 415-454 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பத்தாவது பட்டியல்) .. | 454-489 |
| 2. தகவல் கோரல்— | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 490 |
| 3. சிறப்புக் கவன ஈர்ப்பு— | |
| பொது விநியோகத் திட்ட கடைகளில் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவது | 491-515 |
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 491-494, 498 |
| * திரு. கே. சுப்பராயன் .. .. | 494-495, 499 |
| * திரு. சொ. கருப்பசாமி .. .. | 495-497, 513 |
| திரு. ஐ. கணேசன் .. .. | 497-502 |
| திரு. ஜி. நிஜாமுதீன் .. .. | 502 |
| * திரு. லா. சந்தானம் .. .. | 502-504 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. .. | 504-406 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி .. .. | 506-507 |
| திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் .. | 507-508 |
| * மாண்புமிகு திரு. கா.நா. நேரு .. | 508-513 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. | 513, 514-515 |

பக்கங்கள்


4. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு .. .. 515

(ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. 515-516

(இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. .. 516

5. அறிவிப்பு—

தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 (ஆசெ.) 516

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1999 516-517

(ஆ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1999 517-518

(இ) தமிழ்நாடு இந்துசமய அறநிலையக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999 518-519

7. மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1999-2000 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1998-99 விவாதமும் பதிலுரையும் 519-580

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 523-524, 525, 534, 536-537, 539, 541, 542, 544-545, 546, 547-548, 549, 552, 553, 555-580


2,21,2 03



பக்கங்கள்


திரு. ச. அழகிரி .. 519-526, 527, 566, 571, 572

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 526, 527

திரு. கு. மனோகரன் .. 527-530

திரு. பி.என். வல்லரசு .. 530-533

திரு. ஜே. ஹேமச்சந்திரன் .. 533-540

திரு. அ. வெங்கடாசலம் .. 540-542

டாக்டர் க. கிருஷ்ணசாமி .. 542-545

* திரு. கே. சுப்பராயன் .. 545-550

திரு. மு. அப்பாவு .. 551-555

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 580-582


D
V2'',3'N99
N99. 85.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**கார்த்திகை 6, பிரமாதி —திருவள்ளுவர் ஆண்டு 2030,**
**1999 நவம்பர் 22, திங்கட்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*'கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)*
*உரிமை உடைத்(து) இவ்வுலகு'*

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**21—**

**ஊக்க ஊதியம்**

***7719—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசால் வழங்கப்படும் **ஊக்க ஊதியம்**, உடற்கல்வித் துறை ஆசிரியர்கள் மற்றும் இயக்குநர்களுக்கு வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலையாசிரியர் / பட்டதாரி ஆசிரியர்/தமிழாசிரியர் மற்றும் முதுகலைப் பாட ஆசிரியர்கள் உயர் கல்விக்கு ஊக்க ஊதிய உயர்வு பெற்று வருவது போன்று உடற்கல்வியாசிரியர்கள் B.P.Ed.-க்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வும், M.P.Ed.-க்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வும், ஆக 2 ஊக்க ஊதிய உயர்வுகளும், B.P.Ed. தகுதியுடன் பட்டதாரி ஆசிரியர் ஊதிய விகிதத்தில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர்கள் M.P.Ed. கல்வித் தகுதிக்கு ஒரு ஊக்க ஊதிய உயர்வும், அரசாணை எண் 95, கல்வி, நாள் 21-1-1980 மற்றும் அரசாணை எண் 324, கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் (இ2) துறை, நாள் 25-4-1995-ன்படியும் பெற்று வருகின்றனர். முதுகலைப் பாட ஆசிரியர்கள் ஊதிய விகிதத்தில் M.P.Ed. தகுதியுடன் உள்ள மேல்நிலைப் பிரிவில் பணிபுரியும் உடற்கல்வி இயக்குநர்கட்கு மட்டும் எந்த ஊக்க ஊதிய உயர்வும் அளிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மதிவாணன், இருக்கையில் இல்லை. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றி ஏற்கெனவே ஊக்க ஊதிய உயர்வு பெற்று வந்த ஆசிரியர்களுக்கு கடந்த ஜூன் மாதம் முதல் திறந்தவெளி பள்ளி, தொலைதூர கல்வியிலே P.Ed. படித்ததாக பல காரணங்களால் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பெற்றவர்களுக்கு, தொடர்ந்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 22, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.





22—

## கிளை நூலகங்கள்

***26527—திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டங்களில் நூலக ஆணைக் குழுக்களை அமைப்பதன் வாயிலாக கி.பி.2000-க்குள் அனைத்துக் கிராமங்களிலும் கிளை நூலகங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்டங்களில் நூலக ஆணைக் குழுக்களை அமைப்பதன் வாயிலாக கி.பி. 2000-க்குள் அனைத்துக் கிராமங்களிலும் கிளை நூலகங்கள் அமைப்பது சாத்தியமன்று-இயல்வதும் அல்ல. அந்தந்தக் கிராம மக்கள் தரும் ஒத்துழைப்பைப் பொறுத்தும், மாவட்ட நூலக ஆணையத்தின் நிதி வசதிக்கேற்பவும் வேண்டப்படும் கிராமங்களில் பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நூலகங்கள் அமைக்கப்படுகின்றபொழுது குறிப்பிட்ட காலம், குறிப்பிட்ட தூரம் இவையெல்லாம் இருக்க வேண்டும் என்று அரசு ஆணை இருப்பதாகக் கூறப்படுகிறது. கிளை நூலகங்கள் தொடங்கப்பட வேண்டுமென்று அதற்குரிய நிபந்தனைகளை எல்லாம் பூர்த்தி செய்தும்கூட 3 ஆண்டுகள், 4 ஆண்டுகளாகியும் பல கிராமங்களில் பகுதிநேர நூலகமோ, கிளை நூலகமோ தொடங்கப்படவில்லை. சென்னை மாவட்டத்திலே மாவட்ட ஆணைக் குழு இயங்குகிறது. அதே போன்று மாவட்ட ஆணைக் குழுவை பிற மாவட்டங்களிலே அமைப்பதற்கு அரசுக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளை நூலகங்கள் இருக்கிற இடத்திலேயிருந்து பகுதிநேர நூலகங்கள் எவ்வளவு தொலைவில் இருந்தால் அவர்களால் அந்தப் பகுதிநேர நூலகங்களையும் முறையாக நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற அடிப்படையில் தூரம் கருதப்படுகிறது. நீண்ட

[1999 நவம்பர் 22

தொலைவாக இருக்குமானால், பகுதிநேர நூலகங்கள் செயல்படுவது கடினம். மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் அமைப்பதைக் குறித்து ஆலோசித்தபோது அவர்களுக்குப் போதுமான அளவுக்கு அதிகாரம் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அதிகாரம் இல்லாமல் குழுக்களை மட்டும் அமைத்து என்ன செய்வது என்ற அடிப்படையில், ஏனென்றால், பெரும்பகுதி அரசு நிதியைக் கொண்டு மத்திய நூலக ஆணைக் குழுவினுடைய மேற்பார்வையில் புத்தகங்கள் தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படுகின்றன. அதில் சில மாவட்டங்களில் நிதி மிகப் பற்றாக்குறையாக இருக்கிறது. அந்த மாவட்டங்களில் நிதி கிடைப்பதற்கு வழி இல்லை. எனவே, மாநில அரசினுடைய உதவியில் நடைபெறுகிற அந்தக் காரியங்களைப் பங்கிட்டு வழங்குவதன் மூலமாக மாவட்ட நூலகப் பணி ஓரளவு நடைபெறுகிறது.

முற்பகல் 9-35

கிராமப்புறக் கிளைகள் தோற்றுவிக்க வேண்டுமென்றால் அந்தந்த மாவட்ட நிதியும் அதற்கு ஓரளவு கை கொடுக்க வேண்டும். அந்தவகையில் சில மாவட்டங்களில் அதற்கான வாய்ப்பு சற்றுக் குறைவாக இருக்கிறது. மேலும் சில மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட கிராமப்புற நூலகங்களைத் தொடங்குவதற்கான சூழ்நிலையில்லாமல் மாற்றி வழங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிமன்றத் தலைவர்கள் வாக்களித்து மாவட்ட நூலகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய மாவட்டமான திருவள்ளூர் மாவட்டத்திலே நூலக ஆணைக் குழுத் தலைவர் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை; நியமனம் செய்யப்படவில்லை. அதேபோல கடந்த காலங்களிலே நூலகக் குழுத் தலைவருக்கு செயலகமாகப் பணியாற்றி மிகுந்த அதிகாரம் உள்ள அமைப்பாக மாவட்ட நூலக ஆணைக் குழு இருந்தது. அத்தகைய நிலையை மீண்டும் தோற்றுவிக்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாவட்ட நூலக ஆணைக் குழுவுக்கு அந்தந்த மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது பேரூராட்சிகள் மற்ற அமைப்புகள்,



1999 நவம்பர் 22]

உள்ளாட்சி அமைப்புகள் தருகிற cess நிதியிலேயிருந்துதான் அந்த மாவட்ட ஊராட்சி ஆணையங்கள் செயல்பட வேண்டிய நிலை இருக்கிறது. சில மாவட்டங்களிலே cess நிதி மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, அவர்களுக்கும் சேர்த்து மத்திய அளவிலே புத்தகங்கள் வாங்குவதிலே ஓரளவு விகிதாச்சார பங்கை அதிகப்படுத்தி வழங்குகிற ஒரு நிலை இருக்கிறது. இவற்றை எடுத்துவிட்டால் சில மாவட்டங்களில் இந்த நூலக இயக்கம் இயங்குவது கடினமாக இருக்கும். எனவே, விதிமுறைகளை மாற்ற முடியுமா என்று ஆலோசனை செய்யும்படி நான் செயலாளரைக் கேட்டிருக்கிறேன். விதிமுறைகளை மாற்றுவதென்றால் ஒருவேளை சட்டம் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டிய நிலை இருக்கும். ஏனென்றால் இப்போது அதிகாரமே இல்லாத மாவட்ட நூலக ஆணைக் குழுக்களை நாம் அமைப்பதிலே அர்த்தம் இல்லை என்று நான் அந்தத் துறைக்குத் தெரிவித்திருக்கிறேன். உரிய பரிசீலனை முழு அளவில் இன்னும் செய்யப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்பகுதிகளிலும் அதுபோன்று நகரப் பகுதிகளிலும் இந்த நூலகங்களை அமைக்கின்றபோது சில பிரச்சினைகள் உருவாகின்றன. குறிப்பாக குழித்துறை நகராட்சிப் பகுதியிலே ஒரு நூலகத்தை அமைப்பதற்கான நகராட்சி ஒப்புதலைப் பெற்றுச் செல்கின்றபோது நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை இந்தத் துறைக்கு ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அது நகராட்சிகளினுடைய இடத்தைக் கொடுக்க இயலாது என்று சட்ட விதிமுறைகள் இருக்கின்றன. அதிலே ஒரு தளர்வை ஏற்படுத்தினால் நகராட்சியும் கொஞ்சம் பணத்தைப் போட்டு, அரசாங்கம் தருகின்ற நிதியையும் வைத்து ஒரு நூலகத்தை ஒழுங்காக நடத்துவதற்கு வாய்ப்பு வரும். அந்த அடிப்படையில் அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான நிதியை அரசு தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழு என்ற அடிப்படையில் எந்தக் கட்டடம் கட்டினாலும் அந்தக் கட்டடம் நூலகத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும், நூலக ஆணைக் குழுவிற்கு நகராட்சிக்குச் சொந்தமான இடத்திலே கட்டடம் கட்டினால் நூலக ஆணைக் குழுவினுடைய உரிமை நகராட்சி மன்றத்தை அடையக்கூடிய

[1999 நவம்பர் 22

நிலை ஏற்படும். எனவே, இதிலே ஒரு சின்ன சட்டச் சிக்கல் இருப்பது உண்மை. ஆனால் நூலக ஆணைக் குழுவினுடைய நிதியை நூலக ஆணைக் குழுவுக்கு அப்பாற்பட்ட அமைப்புகளுக்கே செலவிடுவதற்கு நூலக ஆணைக் குழுவிற்கு உரிமை இல்லாத நிலை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து மேலும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம்பேட்டையில் நூலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். இடம் கொடுத்தால் கட்டித்தரப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு சொல்லியிருந்தார்கள். நான் மாவட்ட நூலகர் பெயருக்கு இடத்தைக் கொடுத்து பெயர் மாற்றம் பத்திரம் எல்லாம் செய்து கொடுத்துவிட்டேன், ஓராண்டு ஆகிறது. ஆனால், நிதியில்லை என்று இன்னும் கட்டித்தராமல் இருக்கிறார்கள். எனவே, இடத்தைக் கொடுத்துவிட்ட காரணத்தினால், உடனடியாக அங்கே புதிய நூலகக் கட்டடம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவில் உள்ள நிதியைப் பங்கிட்டு அந்த மாவட்ட நூலகக் கிளைகளுக்குக் கட்டடம் கட்டுகிற அந்தப் பணிதான் நடைபெறுகிறது. அந்த மாவட்ட நூலக ஆணைக் குழுவினுடைய அதிகாரத்திற்குட்பட்ட நிதிவசதியைப் பொறுத்து விரைவாகச் செய்ய முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னிங்டன் என்ற Collector நெல்லையில் இருந்தார். அவர் பொதுமக்களிடம் வசூல் செய்து ஸ்ரீவில்லிபுத்தூரில் பென்னிங்டன் நூலகம் என்ற ஒரு நூலகத்தை ஆரம்பித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதற்குத் தலைவர். ஆனால் அதிலுள்ள Director-கள்



1999 நவம்பர் 22]

எல்லாம் செயல்படாமல் இறந்து போய்விட்டார்கள். ஆகவே, அது நகராட்சியுடன் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானம் எல்லாம் போட்டிருக்கிறோம். ஆகவே, தனியார் நூலகத்தை, அரசினுடைய சொத்தை, Collector பொதுமக்களிடம் வசூல் செய்து திறந்த அந்த நூலகத்தை Municipality-யிடம் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சியர் பொறுப்பில் அந்த நூலகம் இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். நகராட்சி மன்றம் கேட்கிறது. இடையிலே எனக்கு வேலையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**23—**

## வட்ட அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம்

***24761—திரு. அ. சுடலைமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் வட்ட அலுவலகம் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அரசு சார்பில் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தனியார் கட்டடத்தில் தற்போது இயங்கிவரும் போடிநாயக்கனூர் வட்ட அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

[1999 நவம்பர் 22

**திரு. அ. சுடலைமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நான்காவது முறையாக பதவியேற்ற பிறகு, 'தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொல்லியதற்கேற்ப மதுரை மாவட்டத்தைப் பிரித்து தேனி மாவட்டத்தை உருவாக்கி போடி நாயக்கனூரை மையமாக வைத்து வட்டாட்சியர் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. அதற்காக என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, 1999-2000 ஆம் ஆண்டில் எந்தெந்தப் புதிய வட்ட அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டப்பட உள்ளன, எத்தனை வட்ட அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வரும் வட்ட அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பது என்பது அரசின் கொள்கையாகும். தற்போதுள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில் 175 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதியுள்ளவற்றில் 1998-99 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் பின்வரும் ஏழு வட்டாட்சியர் அலுவலகங்களுக்குக் கட்டடம் கட்ட நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த ஏழு இடங்கள்: (1) ஒட்டன்சத்திரம் (2) சிவகாசி (3) கடலாடி (4) அம்பத்தூர் (5) தாம்பரம் (6) திருவையாறு (7) ஆரணி. போடிநாயக்கனூர் உள்ளிட்ட இதர 24 வட்ட அலுவலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு, இனிவரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உங்களுக்கு என்ன துணை வினா? சரி, கேளுங்கள்.

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 ஆண்டு காலக் கோரிக்கையாக நீலகிரி மாவட்டத்தில் புதிய தாலுகா அமைக்கக் கோரப்பட்டு, நம்முடைய அரசு வந்தவுடன், நீலகிரி மாவட்டத்தில் கூடலூரைப் பிரித்து, பந்தலூர் தாலுகாவும், உதகையைப் பிரித்து, குந்தா தாலுகாவும் ஏற்படுத்தப்பட்டன. அந்த



1999 நவம்பர் 22]

இரண்டு தாலுகாக்கள் உருவாவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாகவே தனிக் கவனம் செலுத்தி அந்த உதவியைச் செய்தார்கள். ஆனால், இன்னும் அங்கு புதிய கட்டடங்கள் கட்டப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் 24 தாலுகாக்களுக்கு இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்படவிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அந்த 24 தாலுகாகளில் நீலகிரி மாவட்டத்திலுள்ள அந்த இரண்டு தாலுகாவிற்கான கட்டடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா இல்லையென்றால் அவற்றையும் இணைத்துக்கொள்ள முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. சி.இரா. இராமச்சந்திரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**24—**

## பேரூராட்சிக்கு சிறப்புத் திட்டம்

***2075—திரு. சி.இரா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட சங்கனூர், கணபதி ஆகிய பழைய பேரூராட்சிப் பகுதிகளின் அபிவிருத்திக்காக அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1999 நவம்பர் 22

(அ) மற்றும் (ஆ) மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட சங்கனூர் மற்றும் கணபதி பழைய பேரூராட்சிப் பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்காக அரசிடம் சிறப்புத் திட்டம் ஏதும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. இரா. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் 25, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

25—

## கழிவு நீர் மற்றும் குடிநீர்க் குழாய்கள்

***8323—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகப்பேர் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் பூமிக்கடியில் கழிவுநீர்க் குழாய்களும் மற்றும் குடிநீர்க் குழாய்களும் பழுதடைந்துள்ளதால் குடிநீரோடு கழிவுநீர் கலந்து சுகாதாரக்கேட்டை ஏற்படுத்துவதால், உடனடியாக அப்பகுதியில் உள்ள அனைத்துக் கழிவுநீர் மற்றும் குடிநீர்க் குழாய்களை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை இங்கே அளிக்கின்றேன். அம்பத்தூர் நகராட்சிக்குட்பட்ட முகப்பேர் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தால் குடிநீர்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணி தொடங்கப்பெற்று நடைபெற்று வருகிறது. முகப்பேர் மேற்கில், பணி மேற்கொள்ளப்பட்ட 8 பகுதிகளில் 7 பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள ஒரு பகுதியிலும், அனைத்துப் பணிகளும் 31-12-1999-க்குள் முடிக்கப்பட உள்ளன. முகப்பேர் கிழக்கில் பணி மேற்கொள்ளப்பட வேண்டிய 8 பகுதிகளில் 1 பகுதியில் பணி நடைபெற்று வருகின்றது. இதர பகுதிகளில் உள்ள அனைத்துப் பணிகளும் 31-8-2000-க்குள் முடிவுபெறும்.



1999 நவம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை.

வினா எண் 26, திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

26—

## விதை சுத்திகரிப்பு நிலையம்

***26451—திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதியில் விதை சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதியில், சிறிய விதை சுத்திகரிப்பு நிலையம் ஒன்றினை நடப்பு ஆண்டில் ஏற்படுத்த அரசு ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதி விவசாயப் பெருமக்களின் நீண்டகாலக் கோரிக்கையான விதை சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்த ஆணை வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி விரைவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டிலேயே இந்த விதை சுத்திகரிப்பு நிலையம் ரூ. 3 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[1999 நவம்பர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, திரு. கே. தங்கமணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**27—**

**அரசுப் பேருந்து இயக்குதல்**

***23733—திரு. கே. தங்கமணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலிருந்து சென்னைக்கு நேரடியாக அரசுப் பேருந்து இயக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சாயல்குடியிலிருந்து சென்னைக்கு மானாமதுரை வழியாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலம் 4 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பரமக்குடி-சென்னை மற்றும் கீழக்கரை-சென்னை வழித்தடங்களில் மானாமதுரை வழியாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலம் 4 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இதுவே போதுமானதாகும். மானாமதுரையிலிருந்து சென்னைக்கு நேரடியாக அரசுப் பேருந்து இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி, இருக்கையில் இல்லை. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 300 கிலோமீட்டருக்கு மேல் அதிகமாகச் செல்லும் வழித்தடங்களில் 50 சதவிகிதப் பேருந்துகளை சொகுசுப் பேருந்துகளாக மாற்றும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதியை சொகுசுப் பேருந்துகளாக மாற்ற வேண்டுமானால், அதிலே பயணம் செய்யும் பயணிகளினுடைய அடர்வைப்



1999 நவம்பர் 22]

பொறுத்துத்தான் அது முடிவு செய்யப்படுகிறது. பயணிகளுடைய அடர்வு எந்தப் பகுதியிலே அதிகமாக இருக்கின்றதோ அந்தப் பகுதியிலே ஓடுகின்ற பேருந்துகளில் 25 சதவிகிதம் அல்லது 15 சதவிகிதம் பேருந்துகளை இதுபோன்று அதிவேகப் பேருந்துகளாக, சொகுசுப் பேருந்துகளாக இயக்க அரசு தீர்மானித்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**28—**

**சொகுசுப் பேருந்து**

***26488—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூரிலிருந்து பெங்களூருக்கு சொகுசுப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலப் போக்குவரத்துக் கழகத்திலிருந்து மதுரைக்கு தினமும் இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டு அவை வந்து செல்கின்றன. ஆனால், அந்தப் பேருந்துகள் கரூருக்குள் வந்து செல்வதில்லை. By pass சாலை வழியாக அவை சென்று விடுகின்றன. கரூரிலிருந்து தினமும் ஏராளமான பயணிகள் பெங்களூருக்குச் சென்று வருகின்ற காரணத்தால், கரூரிலிருந்து ஒரு பேருந்து பெங்களூருக்கு இயக்கப்படுமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலிருந்து பெங்களூருக்கு 9 பேருந்துகளும், தூத்துக்குடியிலிருந்து பெங்களூருக்கு 2 பேருந்துகளும், திருநெல்வேலியிலிருந்து பெங்களூருக்கு 6 பேருந்துகளும், செங்கோட்டையிலிருந்து பெங்களூருக்கு 2 பேருந்துகளும், நாகர்கோவிலிருந்து பெங்களூருக்கு 4 பேருந்துகளும்,

மார்த்தாண்டத்திலிருந்து பெங்களூருக்கு 2 பேருந்துகளும், திருவனந்தபுரத்திலிருந்து பெங்களூருக்கு 2 பேருந்துகளும், கம்பத்திலிருந்து பெங்களூருக்கு 2 பேருந்துகளும், ஆக, 29 பேருந்துகள், 32 வழித்தடங்களில் கரூர் வழியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஆகவே, 32 வழித்தடங்களில் இயங்குகிற இந்தப் பகுதியிலே, கரூரிலிருந்து தனியாக பெங்களூருக்கு பேருந்து விடும் சாத்தியக்கூறுகள் எதுவும் இப்போது இல்லை.

முற்பகல் *9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொகுசுப் பேருந்துகளை இயக்குவதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத்தொடரிலே அறிவித்தார்கள். 400 கிலோ மீட்டருக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மட்டும் இயக்கப்படும் என்ற அறிவிப்பையும் நேற்று முன்தினம்கூட இந்தச் சட்டப் பேரவையிலே அறிவித்தார்கள். இப்படி 400 கிலோ மீட்டர் வரையிலுமுள்ள ஊர்களுக்கு மட்டும் சொகுசுப் பேருந்துகளை இயக்குவது என்ற அந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிறேன். காரணம், பல மாவட்டங்கள் 300 கிலோ மீட்டர், 325 கிலோ மீட்டருக்கு உள்ளாகத்தான் இருக்கின்றன. அரசுப் பேருந்துகளை இயக்குவதன் மூலமாக அந்த வசதி வாய்ப்புகள் கிடைக்குமா என்ற அச்சம் இருக்கிறது; இப்போதுகூட இயக்கப்படுகிறது. பல இடங்களிலே அது நின்று போய் விடுகிறது. ஆகவே இந்த 400 கிலோ மீட்டர் என்பதை 300 கிலோ மீட்டர் வரையிலுமுள்ள ஊர்களுக்கும் இயக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

அதோடு என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட மன்னார்குடியிலிருந்து சொகுசுப் பேருந்து இயக்கப்படுகிறது. இரவு நானும் நம்முடைய ஒரத்தநாடு சட்டமன்ற உறுப்பினரும் அதிலே வந்தோம். அநேகமாக விடியற்காலம் நாங்கள் வந்து இறங்குகிற வரையிலும் எங்களுக்கு தூக்கமே இல்லை. காரணம், பேருந்து முழுவதும் ஒழுகுகிறது. பழைய பேருந்தாக இருக்கின்றது. அதனாலே பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாக வேண்டிய நிலை இருக்கிறது. இப்படி பல இடங்களிலே இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே மன்னார்குடி சொகுசுப் பேருந்தினை புதிய பேருந்தாக மாற்றித் தருவதற்கான முயற்சியினை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது போக்குவரத்துக் கழகங்களிலே நிதிநிலை தட்டுப்பாட்டிற்கு காரணமே, மற்ற போக்குவரத்துக் கழகங்களுக்கும், விரைவுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் பல இடங்களிலே ஏற்படுகிற போட்டி. குறிப்பாக, விரைவுப் போக்குவரத்துக் கழகங்கள் அதிக தூரத்திலே இயங்குகிற தடங்களிலே மட்டும் இயக்கப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்து அதற்காக ஒரு குழுவை நியமித்து அதை reorganise செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள் பரிசீலிக்கப்படும். பேருந்துகள் சீராக இல்லை என்ற குற்றச்சாட்டினையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். விரைவுப் பேருந்துகளைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு புதியதாக 100 பேருந்துகளை விட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு கலைஞர் அவர்கள் கன்னியாகுமரியில் டிசம்பர் 31-லே விழா நடத்துகிறபோது விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும், 100 புதிய பேருந்துகள் - நல்ல புதிய வடிவிலே வடிவமைக்கப்பட்டு- இயக்கப்படும் என்பதையும் அவருக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் துணை வினாக் கேட்கும்போது, மூல வினாவிற்குக் கொஞ்சமாவது தொடர்பு உள்ளதாகக் கேட்க வேண்டும். பெங்களூருக்குப் பேருந்து விடுவதைப் பற்றி மூலவினா இருந்தால் மன்னார்குடி-சென்னை பேருந்து பற்றிப் பேசுகிறீர்களே. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூரிலிருந்தும் பம்பாயிலிருந்தும் கொடைக்கானலுக்கு நிறையப்பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் கொடைக்கானலிலிருந்து பெங்களூருக்கு, வத்தலகுண்டு, திண்டுக்கல் வழியாக ஒரு விரைவுப் பேருந்தினை விடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூருக்குப் பேருந்து விடுவது என்பது மாநிலங்களுக்கிடையேயான (Inter-State) உடன்படிக்கையைப் பொறுத்தது. கடந்த முறை, மாநிலங்களுக்கிடையேயான உடன்படிக்கையின்படி, எந்தெந்தப் பேருந்துகள்

[1999 நவம்பர் 22

ஏற்றுக்கொள்ளப்பட்டனவோ அவைதான் இயக்கப்படுகின்றன. மீண்டும் புதிய பேருந்துகளை விட வேண்டுமென்று சொன்னால், இதுபற்றி அவர்களிடம் எடுத்துச் சொல்லி அந்த உடன்படிக்கையிலே அனுமதி வாங்கியபிறகுதான் இயக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரிலிருந்து ஐதராபாத்திற்கு ஒரு விரைவு பேருந்து விட வேண்டுமென்று வியாபாரிகள் மனு செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அங்குள்ள வியாபாரிகளுடைய சௌகரியத்தைக் கணக்கிட்டு, Inter-State வண்டி என்ற முறையிலே ஒரு விரைவுப் பேருந்தை ஐதராபாத்திற்கு கரூரிலிருந்தோ அல்லது சென்னையிலிருந்து நேரடியாக ஐதராபாத்திற்கோ விடுவதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முந்தைய கேள்விக்குப் பதிலைச் சொன்னதுபோல Inter-State--மாநிலங்களுக்கிடையேயான உடன்படிக்கையின் அடிப்படையிலே-இந்தப் பேருந்துகளை இயக்க முடியும். நம்முடைய மாநில அரசுக்கு கேரளா, கர்நாடகா மாநிலங்களோடு உடன்படிக்கை ஏற்பட்டது. ஆந்திர மாநிலத்தோடு இன்னும் உடன்படிக்கை ஏற்படவில்லை. அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும் அந்த அரசு முன்வரவில்லை. ஆகவே, அதற்கான சாத்தியக்கூறுகள் சமீபத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், மதுரையிலிருந்து பெங்களூருக்கு 9 பேருந்துகள் விடப்படுகின்றன என்று சொன்னார்கள். அவை மிகக் குறைவான பேருந்துகளாக இருக்கின்றன. அவற்றைக் கூடுதலாக விடுவதற்கு அரசு பரிசீலிக்குமா? மேலும் சென்னை, மதுரை போன்ற இடங்களுக்கு எல்லாம் இரவு நேரங்களைத் தவிர பகல் நேரங்களிலும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதுபோல, பகல் நேரங்களில் மதுரையிலிருந்து பெங்களூருக்குப் பேருந்துகள் இயக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



1999 நவம்பர் 22]

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பது பேருந்துகள் இயக்கப்பட்டாலும், அவை 12 முறைகள் இயக்கப்படுகின்றன. அந்தப் பேருந்துகளிலே இருக்கின்ற அடர்வுகளைக் கருத்தில் கொண்டு, அதிலே வசூலாகின்ற கட்டணத்தைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை வருங்காலத்தில் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் பேசிய அனைவரும் மூலக் கேள்வியிலிருந்து கொஞ்சம் விலகிக் கேட்டிருப்பதால், நானும் என்னுடைய தொகுதியைப் பற்றி பேச விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே, காலையிலே ஏராளமான குழந்தைகளும், அதுபோல தொழிலாளர்களும் திருப்பூர் நகருக்கு வர வேண்டியிருக்கிறது. அந்த நேரத்திலே விவசாயிகள் காய்கறிகளை ஏற்றிக் கொண்டு வருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, காய்கறிகளுக்காக காலை நேரத்தில் ஒரு பேருந்து விட வேண்டுமென்று சொல்லி, சென்ற கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர்களும் கனிவுடன் கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இதுவரை எந்தவிதமான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விவசாயச் சந்தை ஆரம்பியுங்கள். அப்போது காய்கறிகள் இலவசமாகப் பேருந்தில் செல்லும். இப்போது உட்காருங்கள். (சிரிப்பு) இறுதியாக திருமதி வாசுகி முருகேசன்.

**திருமதி வாசுகி முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கரூர் வழியாக பெங்களூருக்கு 29 பேருந்துகள் 32 வழித்தடங்களில் இயக்கப்படுகின்றன என்ற தகவலைக் கூறினார்கள். ஆனால் அந்தப் பேருந்துகள் அனைத்தும் கரூர் நகரத்திற்குள் வந்து செல்வதில்லை. மேலும், தனியாக இருக்கைகள் கரூருக்கு என்று ஒதுக்கப்படுவதில்லை. ஆகவே, அந்தப் பேருந்துகளிலாவது, கரூருக்கு என்று தனியாக இருக்கைகளை ஒதுக்கிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடன்படிக்கை இல்லாத காலங்களில் கூட கரூரிலிருந்து பெங்களூருக்குப் பேருந்துகள் விட முடியும். ஆனால் அதற்கு Double Point Tax இரட்டை வரி கட்ட வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே, கரூரிலிருந்து செல்லும் பயணிகளின் அடர்வு அதிகமாக இருக்கும் என்று சொன்னால் தனிப் பேருந்துகள் விடுவதற்குக்கூட அரசு பரிசீலிக்கலாம். அது விரைவுப் பேருந்துகள் என்று இல்லாவிட்டாலும், திருச்சியிலே இயங்குகிற போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும். அதற்கான அடர்வுகள் இருக்குமானால் திருச்சி போக்குவரத்துக் கழகத்தின்மூலமாக இயக்கப்பட வேண்டுமானால், விரைவுப் பேருந்துக்குரிய கட்டணத்தை வசூலிப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று சொன்னால், அதை இயக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. அதையும் இந்த அரசு பரிசீலிக்கும். இருக்கை ஒதுக்கீடு பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும் இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**29—**

### புதிய இரயில்வே மேம்பாலம்

***21224—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகர் பெரியார் பேருந்து நிலையம் அருகேயுள்ள இரயில்வே மேம்பாலம் பழுதுபட்டுள்ளதை அகற்றி புதிய இரயில்வே மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மதுரை மாநகர் பெரியார் பஸ் நிலையம் அருகே உள்ள இரயில்வே மேம்பாலம் பழுதுபட்டுள்ளதை அகற்றி புதிய இரயில்வே மேம்பாலம் அமைப்பதற்கு அரசு முடிவு எடுத்திருக்கிறது.





(ஆ) மைய அரசின் ஒப்புதல் இப்போது கிடைத்திருக்கிறது. விரைவில் அந்தப் பாலத்தின் கட்டுமானப் பணி தொடங்கப்படும்.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13-11-1999 ஆம் தேதி மதுரா கோட்ஸ் நூற்பாலை முன்பாக புதிதாக அமைக்கப்பட்ட இரயில்வே மேம்பாலத்தினை தங்களுடைய மேலான தலைமையின்கீழ், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில், நம்முடைய ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். மதுரை மக்களுடைய நீண்ட நாள் கனவு நனவு ஆனதுபோல இருந்தது. அதுபோலவே, இந்தப் பாலமும் இருக்கிறது. இது மிகவும் பழமையான பாலம். நூறாண்டுகளுக்கு மேலாக இருக்கும் என்று கருதுகிறேன். போக்குவரத்து நெரிசலான அந்த இடத்திலே, இப்போது அமைக்கப்படவிருக்கும் பாலம் எப்போது கட்டப்படும், கட்டுமானப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும், அது எவ்வளவு தொகையில் கட்டப்படும் போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பாலத்தினைப் புதுப்பிப்பதற்காக மைய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறைக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டு திட்டத்திலேயே இந்தப் பாலம் கட்டுவதற்கான அனுமதி கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டே அதற்கான tender விடப்படும். விரைவில் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**30—**

### மேற்குக் கடற்கரைச் சாலை

***22571—திரு. ஆர். சக்ரபாணி:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 22

(அ) மேற்குக் கடற்கரைச் சாலை உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்குக் கடற்கரைச் சாலை கன்னியாகுமரியிலிருந்து நீரோடி வரை செல்லும் 71.1 கி.மீ. நீளமுள்ள சாலையாகும். இச்சாலையை மேம்பாடு செய்ய ரூ. 22.39 கோடி செலவில் NABARD திட்டம் 3-ன் கீழ் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

முற்பகல் 10-00

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை எந்தெந்த ஊர்கள் வழியாகச் செல்கிறது என்பதை அறிய விரும்புவதுடன், இந்தப் பணி எப்போது முடிவடையும்? அதேபோல கிழக்குக் கடற்கரைச் சாலை கடலூர்வரை போடப்பட்டுள்ளது. அது கன்னியாகுமரிவரை எப்போது போடப்படும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குக் கடற்கரைச் சாலை கன்னியாகுமரியிலிருந்து தொடங்கி இராஜாக்கமங்கலம், குளச்சல், கருங்கல், தேங்காய்பட்டினம், கணபதியான் கடவு, பழைய உச்சக்கடை, நீரோடி இத்தனை கிராமங்களையும் இணைத்து இந்தச் சாலை போடப்படவுள்ளது. இதனுடைய மொத்த மதிப்பீடு ரூ. 22.39 கோடியாகும். இது 6 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு tender விடப்பட்டிருக்கிறது. ஐந்து பகுதிகளுக்கு tender முடிக்கப்பட்டு பணி இப்போது நடைபெறுகிறது. இரண்டாவது பகுதியான ராஜாக்கமங்கலத்திலிருந்து குளச்சல்வரை உள்ள சாலைக்கு யாரும் tender போடாததால் இப்போது மீண்டும் அதைப் பிரித்துப் பிரித்து tender கேட்கப்பட்டிருக்கிறது. tender-கள் பெறப்பட்டிருக்கின்றன. பரிசீலனையில் இருக்கின்றன. 2001 மார்ச்சுக்குள்ளாக இந்த மேற்குக் கடற்கரைச் சாலை முழுமையாகப் போட்டு முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 நவம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குக் கடற்கரைச் சாலையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, கணபதியான்கடவு பகுதியிலே ஒரு பாலம் அமைக்கப்படவிருக்கிறது. மிக்க நன்றி. அது என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதி. அந்தப் பால வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன். அதைப்போல, அதற்கு இரண்டு கிலோமீட்டர் மேல் பகுதியில் எஸ்.டி. மங்காடு என்கிற பகுதியில் ஒரு பாலம் அதே தாமிரபரணி ஆற்றிலே இருந்தது. இந்த அரசு வந்த பிறகு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கு அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு கட்டுமானப் பிரிவு இருந்த பாலத்தையும் உடைத்து, இப்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் இரண்டு பக்கமும் போக முடியாத ஒரு துர்பாக்கியமான சூழ்நிலையிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கணபதியான்கடவு பாலம் கட்டுவது போல - இதற்குப் பாதி வேலை முடிக்கப்பட்டுவிட்டது. அரசு பணம் வரவில்லையென்று காரணங்களைக் காட்டி தமிழ்நாடு கட்டுமானப் பிரிவு அதை நிலுவையிலே போட்டிருக்கிறது. மிகக் கொடுமை. மக்கள் நடந்துகூட செல்ல முடியாது. 100 அடி நடப்பதற்கு 15 கிலோமீட்டர் சுற்றி வருகின்ற ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை. — உடனடியாக நீங்கள் அதில் கவனம் செலுத்தினால், உடனடியாக நடைபெறும் என்பது தெரியும். எனவே, தயவுசெய்து, அந்த எஸ்.டி. மங்காடு பாலத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கட்டித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேற்குக் கடற்கரைச் சாலையிலே கணபதியான் கடவு பாலம் மட்டுமல்ல, மூன்று பாலங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதித்திருக்கிறது. ஒன்று கீழ்மணக்குடி — மேல்மணக்குடி இடையே பாளையாற்றில் ஒரு பாலம். இன்னொன்று, இரணியல்-ராஜாக்கமங்கலம் சாலையில் ஒரு பாலம். மூன்றாவது, தாமிரபரணியில், கணபதியான்கடவில் ஒரு பாலம். இந்த மூன்று பாலங்களுக்கும் அரசு அனுமதி அளித்து tender-கள் விடப்பட்டு, கல்கத்தாவைச் சார்ந்த ஒரு நிறுவனம் அதற்கான tender-களை எடுத்திருக்கிறது. அந்தப் பாலங்கள் விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 நவம்பர் 22

இன்னொரு பாலத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதில் அடிக்கடி தண்ணீர் போய்க் கொண்டிருப்பதால், அந்தப் பால வேலை நடைபெறுவதிலே சற்றுத் தாமதம் ஏற்பட்டது உண்மை. பொதுமக்கள் போவதற்கு வசதியாக ஒரு நடைபாதைப் பாலம் போடுவதற்குத் தனியாக அனுமதிக்கப்பட்டு அது இப்போது போடப்பட்டுக்கொண்டு வருகிறது என்று நான் அறிகிறேன். ஆகவே, அந்தப் பாலமும் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு உறுதியளித்துக் கூறிக்கொள்கிறேன்.

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: தொடர்பு இல்லாமல் கேள்வி கேட்பீர்கள். (குறுக்கீடு) மேற்குதான், வேறு யாருக்கும் கேள்வி கேட்க அனுமதி கிடையாது.

வினா எண் 31, திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**31—**

**இட ஒதுக்கீடு**

***11489—திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் மற்றும் இதர அலுவலர்கள் நியமனத்தில் இட ஒதுக்கீடு முறையாக பின்பற்றப்பட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், இருக்கையில் இல்லை.



1999 நவம்பர் 22]

வினா எண் 32, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு உணவு, பொதுவிநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**32—**

**பணி நிரந்தரம்**

***17178—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாழையூத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குச் சொந்தமான நவீன அரிசி ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டத்தில் இயங்குகின்ற தாழையூத்து நவீன அரிசி ஆலையில் பணிபுரியும் அனைவரும் நிரந்தரமானவர்கள் என்பதால், இந்நவீன அரிசி ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களை நிரந்தரமாக்குதல் என்ற கேள்வி எழாது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலையில் 86 தொழிலாளர்கள் கடந்த 15, 20 ஆண்டுகளாக நிரந்தரமில்லாத ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் பணி நிரந்தரமாக்கப்படும் என்று கடந்த ஆண்டு தங்கள் துறையின் மூலம் தபால் வந்து இருக்கிறது. நான், அவர்களுக்குத்தான் எப்போது நிரந்தரமாக்கப்படும் என்று கேட்கின்றேன். அந்த 86 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்திலே 15, 20 ஆண்டுகளாக வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு அந்த ஆலையிலே நிரந்தரப் பணியிடங்கள் அளிக்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கின்ற 23 நவீன அரிசி ஆலைகளிலே

பணிபுரிகின்ற அத்தனை தொழிலாளர்களும் நிரந்தரமான தொழிலாளர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுமைதூக்கும் தொழிலாளர்களைப் பற்றி குறிப்பிடுகின்றார்கள் என்று கருதுகின்றேன். அந்தச் சுமை தூக்கும் தொழிலாளர்களிலேகூட 1033 பேர்களை நிரந்தரப்படுத்தி நம்முடைய முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். மீதம் உள்ள, அந்த நவீன அரிசி ஆலைகளிலே பணியாற்றுகின்ற ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கின்ற மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 600 பேர்களுக்கு மேற்பட்டவர்களுக்கு இப்போது முன்மொழிவு அனுப்பப்பட்டு இருக்கிறது. 10 ஆண்டுகள் பணி புரிந்தவர்கள், அவர்களுடைய வயதை சரியானபடி எங்களுக்குத் தெரிவிக்காத காரணத்தால், அதை சான்றிதழ்களோடு தெரிவிக்க முடியாத காரணத்தால், பல இடங்களிலே அவர்களை நிரந்தரப்படுத்துவதிலே தாமதம் இருக்கிறதேயொழிய, அரசைப் பொறுத்த அளவில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றுகின்ற மூட்டை தூக்கும் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு முழு முயற்சியும் எடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதை உடனடியாகச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம். ஒவ்வொரு தொழிலாளரும், தான் 10 ஆண்டுகள் தொடர்ந்து பணி புரிந்ததை ஆதாரத்துடன் எங்களுக்குத் தெரிவிக்காத காரணத்தால், அதிலே சிறிது தாமதம் ஏற்பட்டு இருக்கிறது. அதையும் இப்போது ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். விரைவிலே அந்தப் பணியும் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**33—**

### அடுக்குமாடி வீடுகள்

***22558—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சீர்காழி நகராட்சிக்குட்பட்ட இரயிலடி ஆதிதிராவிடர் தெருவிலுள்ள குடும்பங்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*



**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைக்கு இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி நகராட்சிக்கு உட்பட்ட இரயிலடி தோப்புத் தெருவில் 50-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அவர்கள் இரயில்வேயில் porter-களாகவும், கடைவீதியில் கூலித் தொழிலாளர்களாகவும் தொழில் செய்து வருகிறார்கள். மிகக் குறுகலான, சிறிய இடத்திலேயே அந்த 50-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருந்து வருகின்றன. எனவே, அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டித் தருவதற்கு ஆவன செய்வார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இக்குடிசைப் பகுதி அமைந்துள்ள நிலம், சீர்காழி சட்டநாதர் திருக்கோவிலுக்குச் சொந்தமானதாகும். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஒரு மனை நிலத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் மட்டுமே கொடுக்க இயலும். எனவே, இந்த மதிப்பில் அறநிலையத் துறையிடம் நிலம் கோரி கருத்துரு ஒன்று அனுப்பப்படும். அறநிலையத் துறையால் நிலம் வழங்கப்பட்டால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டித் தருவது குறித்து பரிசீலிக்கப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்புடைய துணை வினாவாக இருக்க வேண்டும். அப்படியிருந்தால் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியிலே குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அடுக்குமாடி வீடுகள் கட்டிக்

[1999 நவம்பர் 22

கொடுப்பதற்கான அனுமதியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அதற்குரிய இடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு முன்மொழிவுகள் எல்லாம் அந்த நகராட்சி மூலமாக அனுப்பப்பட்டு, நிலுவையில் இருக்கின்றன. ஆகவே, அதை விரைவுபடுத்தி அந்த நகராட்சியிலே அடுக்குமாடி வீடுகளைக் கட்டுவதற்கான முன்முயற்சிகளை விரைவாக அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை, நிதிநிலைக்கு ஏற்ப அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரின் வேண்டுகோளிற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

வினா எண் 35, திரு. சி. வேலாயுதன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**35—**

### கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுமதி

***29454—திரு. சி. வேலாயுதன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்தில் பாரத மாதா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காஞ்சிபுரத்தில் பாரத மாதா பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க காஞ்சிபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி இசைவு



1999 நவம்பர் 22]

தராததால், இச்சங்கம் அமைக்க அரசு அனுமதி வழங்க வழிவகையில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு என்று சொன்னாலே, காஞ்சிபுரம் அனைவருக்கும் ஞாபகம் வரும். காஞ்சிபுரத்தில் பாரத மாதா பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைப்பதற்கு அரசாங்கம் சொல்லக்கூடிய அனைத்து சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு பல ஆண்டுகளாக விண்ணப்பித்துக் கொண்டு இருக்கிறார்கள்; எனவே, இடையூறுகளை அகற்றி, அவர்களுக்கு அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் பாரத மாதா மொத்த பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்ற பதிவு, திரு. டி.பி. வர்த்தமான் அவர்களை முதன்மை அமைப்பாளராகக் கொண்டு செயலாற்றியது. அதனைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தமது இசைவினை வழங்கிவிட்டது. ஆனால், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி, தன்னுடைய இசைவை வழங்கும் சூழ்நிலை இல்லாத காரணத்தால்தான் இந்தச் சங்கம் மீண்டும் செயல்படுவதற்கோ பதிவு செய்யப்படுவதற்கோ அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த விவரம் முதன்மை அமைப்பாளருக்கு 2-2-1999-ல் தெரிவிக்கப் பட்டுள்ளது. மீண்டும் முதன்மை அமைப்பாளர் இதுகுறித்து மேற்கொண்டு எந்தக் கோரிக்கையையும் வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் இல்லாத காரணத்தால்தான் அதிலே தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் அந்த முதன்மை அமைப்பாளர் தொடர்பு கொண்டபின்பு, நிச்சயம் தக்க முறையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

[1999 நவம்பர் 22

36—

**கால்நடை மருத்துவமனை**

***28225—திரு. டி. அமரமூர்த்தி:**

*மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அரியலூர் தொகுதி, சுண்டக்குடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்குவதற்கு அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரியலூர் தொகுதி, சுண்டக்குடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்குவதற்கு தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இந்தப் பதிலைச் சொல்வார் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். சுமார் 20 கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள அந்தக் கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதிகூட சரியாக இல்லை. பெரும்பாலும் நிறைய கால்நடைகள் இருக்கிற கிராமங்கள்தான் அங்கே அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசிலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அமரமூர்த்தி அவர்கள் கோரியிருக்கின்ற அந்த சுண்டக்குடி கிராமத்தில் ஏற்கெனவே ஒரு கால்நடைக் கிளைநிலையம் செயல்பட்டு வருகிறது. அவர் சொல்வதைப் போல, மருத்துவமனை தூரத்தில் இருக்கிறது. ஆனால், அவர் கேட்கிறபடி கால்நடை கிளை நிலையமாக இருப்பதை உடனடியாக மருத்துவமனயாகக் கொண்டுவரமுடியாது — மருந்தகமாக மாற்றித்தான் மருத்துவமனையாகக் கொண்டுவரமுடியும். நிதிநிலைமைக்குத் தக்கவாறு அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1999 நவம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், நீங்கள் கேட்க இருப்பது அரியலூர் தொகுதி தொடர்பான துணைக் கேள்வியா?

**திரு. சி. ஞானசேகரன்:** ஆமாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதிக்கு உட்பட்ட கால்நடை மருத்துவமனையானாலும் சரி, தமிழகத்தில் இருக்கிற மருத்துவ மனைகளில் அரசு மருத்துவர்கள் தடையின்றி ஒழுங்காகப் பணியாற்ற வேண்டுமென்று சொன்னால், அவர்கள் கேட்கிற ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இன்றுகூட மத்திய அரசுக்கு இணையான ஊதியம் கேட்டு தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை அரசு கால்நடை மருத்துவமனைகளின் டாக்டர்கள் எல்லாம் கோட்டையை நோக்கி பேரணி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை வழங்குவதற்கு முன்வருவார்களா, அதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல, இன்றையதினம் அவர்கள் பேரணி நடத்தினாலும், ஏற்கெனவே ஊதியக் குழுவின் முன்பாக அவர்களுடைய கோரிக்கை வைக்கப்பட்டபோது, வேளாண்மைத் துறையைச் சேர்ந்த வேளாண்மை அலுவலர்கள், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த பொறியாளர்கள் ஆகியோரின் பதவித் தகுதியிலே கால்நடை உதவி மருத்துவர்களும் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கெல்லாம் நிதிநிலைமைக்குத் தக்கவாறு பரிசீலிக்கப்படும்போது, இதுவும் பரிசீலிக்கப்படும் என்று நிதித் துறையால் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அந்த நேரத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

37—

**வருமான வரம்பு**

*** 21679—திரு. கே. சுப்பராயன்:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தற்போது திருமண உதவித் திட்டத்தில் உதவி பெற நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பு என்ன?

(ஆ) அதை உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) எட்டு வகையான திருமண உதவித் திட்டங்கள் தமிழக அரசின் சார்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒரு கை அல்லது கால் இழந்தவரை ஊனமில்லாதவர் திருமணம் செய்துகொண்டால், நிதியுதவி வழங்குகிற திட்டத்தில் ஆண்டு வருமானம் ரூ.24,000-க்குக் குறைவாகவும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களுக்கும் ஆண்டு வருமானம் ரூ.12,000-க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் விதவைகள் மறுமணத் திட்டம், பார்வையற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் பார்வையுள்ளோருக்கு நிதியுதவி வழங்கும் திட்டம், பேசும் திறனற்ற, காது கேட்காதவரைத் திருமணம் செய்துகொள்ளும் பேச்சுத் திறனும் காது கேட்கும் திறனும் உடையோருக்கு நிதி வழங்கும் திட்டம் போன்ற இந்தத் திருமணத் திட்டங்களுக்கு வருமான வரம்பு எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) மேலும், ஊனமுற்றோரை ஊனமில்லாதவர் திருமணம் செய்து கொள்கிற நிதி வழங்கும் திட்டத்திற்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திட்டங்கள் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்புகளை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 10-15

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளுக்கு நாள் பணத்தின் மதிப்பு அரிபட்டுக் கொண்டேயிருக்கிறது. பணம் அதனுடைய நிஜ மதிப்பிலிருந்து சரிந்து விழுந்து கொண்டு இருக்கின்ற காரணத்தினால், அடிக்கடி இத்தகைய வருமான வரம்புகளை மாற்ற வேண்டியது அவசியம் என்பது இந்தியாவின் இன்றைய பொருளாதார கட்டமைப்பின் தவிர்க்க முடியாத விளைவாகும். எனவே, மாநில அரசு பகுத்தறிவு வழிப்பட்ட சிந்தனைக்கு உட்பட்ட ஓர் அரசு என்பதால் பகுத்தறிவோடு சிந்தித்து, பண வீக்கம் அதிகரித்து வருகின்ற காரணத்தால், அதனுடைய நிஜ மதிப்பு குறைந்து விடுகிறது என்பதை உள்ளூர உணர்ந்து உண்மையிலேயே அறிவித்திருக்கின்றவர்களுக்கு ஓரளவுக்காவது பலன் கிடைக்கின்ற வகையில் வருமான வரம்பை வருகின்ற நிதியாண்டிலாவது பரிசீலித்து, தளர்த்தி உயர்த்த முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவு சிந்தனையுடன் நாள்தோறும் பணியாற்றிவருகின்ற அரசுதான் இந்த அரசு. இந்த வருமான வரம்பிலேயே அதிகமான பேர் பயன்களைப் பெற்று வருகிறார்கள். குறிப்பாக, ஊனமுற்றோர்களுக்கு கடந்த ஆண்டு 145 பேர்களுக்கு திருமண உதவி வழங்கப்படுமென்று குறியீடு இருந்தது. அந்தக் குறியீடு நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல மற்ற திருமண உதவித் திட்டங்களுக்கு இருக்கின்ற வருமான வரம்பிற்கு உட்பட்டு ஏராளமான பேர் அந்தக் குறியீட்டை நிறைவு செய்கின்ற அளவுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்குமே அந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது என்ற காரணத்தினால், இந்தத் திருமண நிதியுதவித் திட்டத்திலே பயன்பெறுகின்ற எவரும் விடுபடக்கூடிய நிலையில் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன். வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு தமிழக அரசு, உணவுப் பொருள் வழங்கிட, குடும்ப அட்டை வழங்குவதற்கு, 12,000 ரூபாய் என்று நிர்ணயித்திருப்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். எனவே, அந்த அடிப்படையிலே நலிவுற்ற குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அரசின் உதவி நியாயமான முறையிலே போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவே இந்த வருமான வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. இதை உயர்த்தும் எண்ணம் அரசிற்கு தற்போது இல்லை.

[1999 நவம்பர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின்மூலம் கலப்புத் திருமணம் செய்கின்றவர்களுக்கு திருமண உதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்படுகிறது. அப்படி திருமண உதவி தேவையென்று விண்ணப்பம் செய்யும்போது கலப்புத் திருமணத்தை எதிர்க்காத சாதியைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு சான்றிதழ் கேட்கிறார்கள். அப்படி அரசு ஓர் உத்தரவினையிட்டிருக்கிறதா? அப்படியானால் அந்தச் சாதிச் சான்றிதழை சட்டமன்ற உறுப்பினர்களும் வழங்கலாமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்கிறவர்கள் எந்தெந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரத்தைக் காண்பித்தாலே போதுமானது. இதற்கு மாறான வேறு சான்றிதழ் எதுவும் அரசின் தரப்பிலே கேட்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தன்னுடைய பதிலுரையில் கூறும்போது வருமான வரம்பையெல்லாம் உயர்த்தக்கூடிய நோக்கம் அரசிற்கு இல்லை என்ற கருத்தின் அடிப்படையிலே கூறினார்கள். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள், ஏழையெளியவர்களெல்லாம் தையல் இயந்திரம் வாங்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில் 6,000 ரூபாய் வருமானம் என்று சான்றிதழ் வாங்க வேண்டுமென்று கூறுகின்றபோது, அங்கே இலஞ்சம், யார் யாரெல்லாம் கொடுக்கின்றார்களோ அவர்கள் இந்தச் சான்றிதழைப் பெற்று, இந்த உதவியைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறதேயொழிய, உண்மையான ஏழைகளுக்கு இந்த உதவிகள் கிடைக்காத சூழ்நிலை நிலவுகிறது. ஆகையால், இந்த 6,000 ரூபாய் 12,000 ரூபாய் என்றிருப்பதை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கூறியதுபோல, கண்டிப்பாக வரும் ஆண்டிலே உயர்த்தினால்தான் இந்தச் சமூக நலத் துறையின் மூலம் கிடைக்கும் உதவிகள் முழுமையாக ஏழைகளுக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உண்டாகும். அப்படி இல்லையென்றால், இந்த வாய்ப்பு வசதிகள், அதிகாரவர்க்கத்திலே செல்வாக்கு உள்ளவர்களுக்கு.......



1999 நவம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விவாதம் அல்ல, வினாவாகக் கேளுங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதல்வர் அவர்களை அமைச்சரவையிலே கலந்து பேசி, கண்டிப்பாக இனி வரும் ஆண்டிலே இந்த வருமான வரம்பை, குறைந்தபட்சம், 24,000 ரூபாயாக எல்லா உதவிகளுக்கும் உயர்த்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 12 ஆயிரம் ரூபாய் வரம்பு இருக்கின்றபொழுதே மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் நிலுவையில் இருந்த 8-வது வகுப்பு படித்த பெண்களுக்கும் சேர்த்து கிட்டத்தட்ட 1,38,000 பேர் இந்த நிதி உதவியைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிகின்றபோது, தகுதி வாய்ந்தவர்களுக்கு எந்தவிதமான தடங்கலுமின்றி இந்த அரசு நியாயமான நிதியுதவியை திருமண உதவித் திட்டத்திலே வழங்கி வருகிறது என்பது வெள்ளிடைமலை. எனவே, வருமான வரம்பை உயர்த்துகின்ற எண்ணம் அரசுக்குத் தற்போது இல்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமண திட்டத்தில் ஓர் இந்துவுக்கும் முஸ்லீமுக்கும், இந்துவுக்கும் கிறிஸ்துவருக்கும் இடையே திருமணம் நடந்தால் இந்த நிதி மறுக்கப்படுகிறது. அதாவது மதம் மாறியவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டால் இந்த உதவி இல்லை என்று சொல்கிறார்கள். இதைத் திருத்தி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் என்பது தகுதி அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர், பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் அல்லது தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர், முற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் அல்லது

[1999 நவம்பர் 22

முற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர் என்ற அளவிலே இந்த கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. மதத்தின் அடிப்படையில் கிறிஸ்துவர்களுக்கோ அல்லது இந்துக்களுக்கோ அல்லது இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கோ இந்தத் திருமணம் நிகழ்வதாக இருந்தால் அவர்கள் அந்தந்த மதத்திலே, எந்த இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்து அதற்கேற்ப இந்தத் திருமண உதவி வழங்கப்பட்டு வருகிறது. இதில் ஏதேனும் திருத்தங்கள் வேண்டுமென்று நீங்கள் கருதுவீர்களானால், அதைக் குறிப்பிட்டு எங்களுக்குத் தெரிவிப்பீர்களானால், அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எம். விஜயகுமார்.

**திரு. கே.எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவி திட்டத்திலே ரூபாய் 12 ஆயிரம் வருமான வரம்பு என்று விதிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி வருமான வரம்புக்கு உட்பட்டு இருந்தாலும்கூட, கிராமப்புறங்களில் வசிக்கின்ற தகுதி வாய்ந்த நபர்கள் நிலப்பட்டா உடையவர்களாக இருக்கின்ற காரணத்தால் அவர்களுக்கு அந்த உதவி மறுக்கப்படுகிறது.

எனவே, நிலப்பட்டா இருக்கின்றவர்களுக்கும், அதாவது விவசாய நிலம் உடையவர்களுக்கும் வருமான வரம்புக்கு உட்பட்டு இருந்தால் அவர்களுக்கும் திருமண உதவித் திட்டத்தின் பயன் கிடைக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். இதன்படி நகர்ப்புறங்களிலே வாழ்பவர்கள் வருமான அடிப்படையிலே மட்டும் அவர்களுக்குச் சொந்தமான வீடு மற்றும் சொத்துக்கள் இருந்தாலும்கூட பயனடைகிறார்கள். கிராமங்களில் உள்ள ஏழை, விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அந்தப் பயன் மறுக்கப்படுகின்ற காரணத்தால், விவசாய நிலம் உள்ளவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் பயன் கிடைக்கச் செய்ய இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி. எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுதுள்ள விதிமுறைகளின்படி மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தை ஏற்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



1999 நவம்பர் 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 38, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

38—

### வேலை வாய்ப்புகள்

***27930—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் குடிபுகும் ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கு வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தித் தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் குடிபுகும் மக்களுக்கென்று வேலைவாய்ப்பு ஏற்படுத்தித்தர தனியே திட்டங்கள் ஏதுமில்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் வாழ்கின்ற மக்கள் சுமார் 10 கி.மீ. சுற்றளவில் இருந்து அங்கே வந்து வாழ்கின்றனர். எனவே, அவர்களுக்கென்று ஒரு வேலைவாய்ப்பு அல்லது பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற திட்டத்தை நாம் கண்டிப்பாக செய்தாக வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். எந்தெந்த வழிகளில் அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்? அதற்காக தனி நிதியொதுக்கீடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ண உணர்வுகளை இந்த அரசு நன்றாகப் புரிந்து இருக்கிறது. சமத்துவபுரத்தைக் கட்டிக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், சமத்துவத்தையும் வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டு அந்த மக்களுடைய பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாவட்ட

[1999 நவம்பர் 22

ஆட்சித் தலைவர், மாவட்ட அமைச்சர்கள் மாதந்தோறும் அந்த சமத்துவபுரத்தை ஆய்வு செய்து அந்த மக்களுடைய வாழ்க்கையின், பொருளாதாரத்தின் முன்னேற்றத்திற்காக அங்குள்ள மக்கள் சுய வேலை செய்வதற்கும், அங்குள்ள மக்கள் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டத்தின் மூலம் செயல்படும் திட்டத்தையும், தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் தொடங்க மானிய விளிம்புத் தொகை மற்றும் கடன் வசதிகள் செய்து கொடுப்பதையும், மாவட்ட தொழில் மையத்தின் மூலம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தொழில் தொடங்க மானியத்துடன் கடன் வழங்கப்படுவதையும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம், வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் ஆகியவற்றின் கீழும், ஏழைக் கூலித் தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறவும், மற்றும் கறவை மாடுகள் வாங்கி வளர்க்க பால் பண்ணை அமைத்து, அவர்கள் வாழ்வில் பால் பொங்கிடவும் வேண்டும் என்பதற்காகவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒவ்வொரு சமத்துவபுரக் குடியிருப்பில் குடியிருப்பவர்களும் பயனடையும் வகையில், அந்தத் திட்டம் பயன்படக்கூடிய நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, சமத்துவபுரத் திட்டத்தின் மூலமாக அந்த மக்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வேண்டிய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரத்தில் இடம்பெறும் பயனாளிகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; அவர்களுக்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்; அப்படித் தேர்ந்தெடுக்கப்படும்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரால் கலந்தாலோசிக்கப்படுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கென்று தனியாக ஒரு குழு நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்குத் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும், பஞ்சாயத்துத் தலைவர் மற்றும் ஆதிதிராவிட பஞ்சாயத்து உறுப்பினர், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர், நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் ஆகியோர்



1999 நவம்பர் 22]

உறுப்பினர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். அதிலும் குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சமத்துவபுரத்தில் பயனாளிகளாக இருக்கின்றவர்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்கின்ற மக்களாக இருக்க வேண்டும்; ஆதிதிராவிட மக்களாக இருக்க வேண்டும்; பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்க வேண்டும்; மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. இந்தத் தகுதிகள் இருந்தால், சமத்துவபுரத்திலே குடியிருப்பதற்கு வழி ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

39—

### கதர் கிராமத் தொழில்

***28202—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் கதர் கிராமத் தொழில்களைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தைச் சார்ந்த நார்த்தம்பள்ளியில் இரண்டு கிராமிய நூற்பு நிலையங்களும், இவைதவிர பெண்ணாகரம் தொகுதியில் நான்கு கதர் கிராமத் தொழில் அலகுகளும், நான்கு கதர் கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், ஒரு தேனீப் பண்ணையும் இயங்கி வருகின்றன. ஆகவே, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் புதிய கதர் கிராமத் தொழில் தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1999 நவம்பர் 22

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரம் தொகுதி என்பது, தொழில் வசதி இல்லாத மிகவும் பின்தங்கிய பகுதி. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒகேனக்கல்லிலே ஒரு தேனீ வளர்ப்பு மையத்தைத் தொடங்குவதாக இங்கே வாக்குறுதி அளித்து, அது இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, நல்லம்பள்ளி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிற காரணத்தினாலே, அங்கே ஒரு கதர் கிராமத் தொழிலை அவசியம் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்வதோடு, நடப்பு ஆண்டில் அதற்கு ஆவன செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயங்கி வருகின்ற தேனீப் பண்ணையை விரிவுபடுத்தவும், பென்னாகரம் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் 52 நபர்களுக்கு சிறுதொழில் தொடங்குவதற்காக ரூ.3.57 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. எனவே, புதிதாகத் திட்டங்கள் தொடங்குவதற்கு எதுவும் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**40—**

**குளிரூட்டும் நிலையம் புதுப்பித்தல்**

***24271—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியதாழை பகுதியிலுள்ள மீன் குளிரூட்டும் நிலையத்தைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரியதாழை பகுதியில் மீன் குளிரூட்டும் நிலையம் அமைக்கவோ, புதுப்பிக்கவோ சாத்தியக் கூறுகள் இல்லை.



1999 நவம்பர் 22]

(ஆ) எழவில்லை.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தொகுதியிலே, பெரியதாழை பகுதியிலே உள்ள கடலோரப் பகுதியில், ஏறத்தாழ 3,000 மீனவக் குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களுடைய வாழ்க்கை கடலிலே வருகின்ற வருமானத்தை வைத்துத்தான் நடந்து கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு அந்த ஊரிலே மூன்று கஷ்டங்கள் இருக்கின்றன. ஒன்று, அந்தப் பகுதியிலே மழைக் காலங்களிலே அதிகமாக சுழல் காற்று வீசுகிறது. கடலுக்குப் போகும்போது, சுழல் காற்றினால் வருடத்திற்கு ஏறத்தாழ பத்திலிருந்து பதினைந்து உயிர்கள் பறிக்கப்படுகின்றன. அதற்காக தூண்டில் பாலங்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, அங்கே ஆய்வுகளெல்லாம் நடந்து முடிந்துவிட்டன. அடுத்ததாக மணல் பாறை என்று ஒன்று கடல் ஓரத்திலே வளர்ந்துகொண்டிருக்கிறது. அந்த மணல் பாறை வளர்த்திருக்கின்ற காரணத்தினால், அந்த மக்கள் படகுகளைக் கடலுக்கு எடுத்துச் செல்வதற்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பாறைகளையும் அகற்றித் தரவேண்டும். அதுமட்டுமல்ல, இவ்வளவு கஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு, அவர்கள் மீன்களைக் கொண்டு வந்து..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினா இல்லை. இது ஒரு speech. முடித்துக் கொள்ளுங்கள். அமைச்சர், பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நான்கு, ஐந்து கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்கக்கூடாது. (குறுக்கீடு) அப்பாவு, சும்மா இருக்க மாட்டீர்களா? (குறுக்கீடு) திரு. மணி நாடார், ஒரே மூலக்கேள்வியில் இது நான்காவது துணைக் கேள்வி. சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

*முற்பகல் 10-30*

பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டதூரம் சென்று கடலிலிருந்து மீனைப் பிடித்துக் கொண்டு வந்தால் அதைத் தேக்கி வைத்து நல்ல விலைக்கு விற்பதற்கு, அதைச் சேமித்து வைப்பதற்கு குளிர்பதன அறைகளை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டு, அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டு பெரியதாளையில் மூன்று டன் பனிக்கட்டி உற்பத்தியும், இரண்டு டன் கொள்ளளவு கொண்ட

குளிர்பதன அறையும் அடங்கிய பனிக்கட்டி நிலையம் அங்கே அமைக்கப்பட்டது. ஆனால், அந்த நிலையம் சரிவர இயங்கவில்லை. அந்தப் பகுதியில் மின் தடை இருந்ததன் காரணமாகவும், நல்ல சுத்தமான உப்பில்லாத நீர் கிடைக்காததன் காரணமாகவும் அது அங்கே சரியாக இயங்கவில்லை. ஆகவே, அரசாணை எண் 1143, வனம் மற்றும் மீன் துறை, நாள் 8-11-1985 அன்று வெளியிடப்பட்டது. அதில் எல்லா பனிக்கட்டி நிலையங்களையும் ஆய்வு செய்து எந்த நிலையம் சரிவர இயங்கவில்லையோ அதை மூடும்படியும் அல்லது அரசே நடத்தும்படியும் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமோ, தனியார் மூலமோ நடத்த வேண்டும் என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையின் அடிப்படையில் பெரியதாளையில் 3 வருட ஒப்பந்தத்திற்கு 1986 ஆம் ஆண்டு தனியாருக்கு விடப்பட்டது. தனியாருக்கு விடப்பட்டும், அவர்களால் நடத்த முடியாத காரணத்தால் 1987 ஆம் ஆண்டு அது ரத்து செய்யப்பட்டது. 1987 ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டு 1989 ஆம் ஆண்டு அதிலுள்ள இயந்திரங்கள் எல்லாம் விற்கப்பட்டு இன்று மூடியிருக்கின்ற நிலையில் உள்ளது. மேலும், அந்த அரசாணையில் புதிதாக எந்த நிலையமும் தொடங்க அரசுக்குக் கருத்துரு ஏதும் அனுப்ப வேண்டாம் என்றும் அதில் ஆணையிடப்பட்டிருந்தது. மற்றபடி அந்தப் பகுதியில் உள்ள மீனவர்களுக்குத் தனியார் மூலமும், வாகனங்கள் மூலமும் அங்கே பனிக்கட்டி வந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். பெரியதாளையில் புதிதாக ஒரு பனிக்கட்டி நிலையம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதையும் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (பத்தாவது பட்டியல்)

**1—**

### காவல் நிலையத்தைப் புதுப்பித்தல்

**வினா 18062—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், காளைப்பாளையம் காவல் நிலையம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

(ஆ) ஆம் எனில், அதனை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம் காளைப்பாளையம் காவல் நிலையம் 1950 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

(ஆ) இக்காவல் நிலையக் கட்டடம் மிகவும் பழுதுபட்டுள்ளதால், அதனை புதுப்பிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதனை தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் புதுப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2—**

### தொழில் துறையில் பின்தங்கிய பகுதி

**வினா 19414—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி, கந்திலி ஆகிய வட்டத்தில் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள நாட்ராம்பள்ளி மற்றும் கந்திலி ஊராட்சி ஒன்றியங்கள் முன்பு பின்தங்கிய பகுதியாக அரசு அறிவித்திருந்தது. அரசு வட்டத்திற்கு பதிலாக ஊராட்சி ஒன்றியங்களை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கும்போது நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் தொழிலில் பின்தங்கிய பகுதியாகவும், கந்திலி ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாகவும் அறிவித்துள்ளது.

[1999 நவம்பர் 22

நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை அப்பகுதியில் உள்ள மக்கள் தொகையில் 0.25 சதவீதத்திற்கு அதிகமாக இருப்பதால், மேற்கண்ட ஊராட்சி ஒன்றியம் அரசு ஆணை (நிலை) எண் 41, தொழில் துறை, நாள் 18-3-1996-ல் மிகவும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படவில்லை.

3—

**காவல் நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்**

**வினா 19683—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகரில் உள்ள காவல் நிலையம் சுற்றுச்சுவர் இல்லாமல் இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சுற்றுச்சுவர் அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட 1999-2000 ஆம் ஆண்டிற்கான பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் அரசு ஆணை எண் 763, உள் (காவல்.10) துறை, நாள்: 1-6-1999-ல் ஒப்பளிக்கப்பட்டு கட்டுமானப் பணிக்காக ஒப்பந்தப்புள்ளி பொதுப்பணித் துறையினரால் கோரப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணியில் சுற்றுச்சுவர் அடங்காது. எனவே சுற்றுச்சுவர் கட்டுவது குறித்து புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டபின் அரசின் நிதிநிலைக்கேற்ப பின்னர் பரிசீலிக்கப்படும்.

4—

**காவல் நிலையங்களுக்குக் கட்டடம்**

**வினா 19695—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 22]

(அ) தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் காவல் நிலையங்கள் எத்தனை?

(ஆ) இந்த நிதியாண்டில் அரசுக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 356.

(ஆ) அரசின் நிதிநிலைக்கேற்பவும், காவல் நிலையம் கட்டத் தேவையான நிலம் இருப்பதைப் பொறுத்தும், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து காவல் நிலையங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படுகிறது. தற்போது 76 காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

5—

**பதவி உயர்வு**

**வினா 22279—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீண்ட காலமாக பதவி உயர்வு பெறாத காவலர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பத்து ஆண்டுகள் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமலிருக்கும் இரண்டாம் நிலைக் காவலர்களை முதல் நிலைக் காவலர்களாகவும், ஐந்து ஆண்டுகள் முதல் நிலைக் காவலர்களாகப் பணி முடித்தும் பதவி உயர்வு பெறாமலிருக்கும் முதல் நிலைக் காவலர்களைத் தலைமைக் காவலர்களாகவும் பதவி உயர்வு செய்ய அரசு 1997 ஆம் ஆண்டு ஆணை பிறப்பித்துள்ளது.

[1999 நவம்பர் 22

இதன்படி, 1997 ஆம் ஆண்டில் 10106 இரண்டாம்நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும், 1998 ஆம் ஆண்டில் 9000 முதல்நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும், 1999 ஆம் ஆண்டில் 6500 இரண்டாம் நிலைக் காவலர்கள் முதல்நிலைக் காவலர்களாகவும், 4000 முதல்நிலைக் காவலர்கள் தலைமைக் காவலர்களாகவும் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளனர்.

**6—**

**காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 25799—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரில் செயல்படும் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி காவல் நிலையம் 1910 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்கட்டடத்தின் மேற்கூரை ஓடுகளில் போடப்பட்டு மேற்படி கட்டடத்தில் மன்னார்குடி காவல் நிலையம், நீதிமன்றம், தாலுக்கா அலுவலகம் மற்றும் கிளை கருவூலம் ஆகிய அலுவலகங்கள் இணைந்த ஒரே கட்டடமாக இயங்கி வருகிறது. காவல் நிலையத்திற்கு என்று தனியான கட்டடம் எதுவும் இல்லை. மேற்படி கட்டடம் அரசிற்குச் சொந்தமானது. காவல் நிலையம் மட்டும் இயங்கிவரும் பகுதி காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

**7—**

**காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்**

**வினா 25968—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 22]

திருவண்ணாமலை மாவட்டம், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேங்கிக்கால் என்னுமிடத்தில் பல்வேறு அரசுத் துறை அலுவலகங்களுக்கு பெருந்திட்ட வளாகத்தின் (Master Plan Complex) கீழ் அலுவலகங்கள் கட்ட ச.எண் 101-ல் 235.88 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து அரசு ஆணை நிலை எண் 455, வருவாய், நாள் 14-5-1997-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மேற்படி பெருந்திட்ட வளாகத்தில் திருவண்ணாமலை மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரின் அலுவலகமும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ரூ.2.93 கோடி செலவில் திருவண்ணாமலை மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரின் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு காவல்துறை தலைமை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு, தற்பொழுது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**8—**

**காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்**

**வினா 27800—திரு. ப. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாடகைக் கட்டடத்தில் இயங்கும் மதுக்கூர் காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு அப்பணி தொடங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மதுக்கூர் தெற்கு கிராமம் புல எண் 520/2-ல் சங்கலிகுளம் புறம்போக்கில் காவல் நிலையம் மற்றும் காவல் குடியிருப்புகள் கட்டுவதற்கு 1.88 ஏக்கர் நிலம் காவல்துறைக்கு நிலம் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள

[1999 நவம்பர் 22

இடத்தில் காவல் நிலையம் கட்ட இடம் தகுதியுள்ளதா என பரிசீலித்து அறிக்கை அனுப்ப திருச்சி காவலர் வீட்டுவசதி கழக செயற் பொறியாளரிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது. நிலம் தகுதியானது என சான்றளிக்கப்படும் பட்சத்தில் இக்காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

9—

**சுற்றுச்சுவர் கட்டுதல்**

**வினா 27831—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி காவல் நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குடியிருப்புகள் கட்ட ஒதுக்கப்பட்ட தொகையில் மீதமிருக்கும் தொகையில் அவசியம் தேவைப்படும் காவல் நிலையம் மற்றும் குடியிருப்புகளுக்குச் சுற்றுச்சுவர் கட்ட தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தை அரசு அனுமதித்துள்ளது. இதனடிப்படையில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி காவல் நிலையத்திற்குச் சுற்றுச்சுவர் கட்ட காவலர் வீட்டுவசதிக் கழகத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

**காவலர் விடுகளைப் புதுப்பித்தல்**

**வினா 27847—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 நவம்பர் 22]

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, காகாபாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர் வீடுகள் மோசமாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காகாபாளையம் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்களின் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணி பகுதி திட்ட முறையில் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு சரி செய்யப்படும்.

11—

**கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புதல்**

**வினா எண் 26594—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப உள்ள தடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் எப்பொழுது நிரப்பப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

12—

**கல்லூரிகளில் இட ஒதுக்கீடு**

**வினா 30651—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குப் பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரியில் இட ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க.அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

13—

**இ.சி.ஜி. டெக்னீஷியன் பணியிடத்தை நிரப்புதல்**

**வினா 24484—திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை, அரசு மருத்துவமனைக்கு இ.சி.ஜி. டெக்னீஷியன் பதவி நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அரசு மருத்துவமனைக்கு இ.சி.ஜி. டெக்னீஷியன் பணியிடம் ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை. இருப்பினும் இ.சி.ஜி. கருவியைப் பயன்படுத்துவதில் பயிற்சி பெற்ற இதர பணியாளர்களைக் கொண்டு இக்கருவி இயக்கப்பட்டு வருகிறது.





14—

**சீரான மின் அழுத்தம் இயக்குதல்**

**வினா 28118—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெட்டைக்குளத்தில் போதுமான மின்னழுத்தம் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெட்டைக்குளம் கிராமத்தில் மின்னழுத்தத்தை சீர்செய்யும் பொருட்டு புதிய மின்மாற்றி ஒன்று நிறுவப்பட்டு 29-7-1999 அன்று மின் இயக்கம் பெற்றுள்ளது. தற்பொழுது மின்னழுத்தம் சீராக உள்ளது.

15—

**சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு நிறுவுதல்**

**வினா 29013— திரு. கே. ரவி. அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

[1999 நவம்பர் 22

(அ) மற்றும் (ஆ) அடுத்த ஆண்டு அதாவது நடப்பு நிதி ஆண்டில் 1999-2000-ல் இரண்டு சூரிய வெப்ப சுடுநீர் 2000 லிட்டர் கொள்ளளவில் அமைக்க அரசு ரூபாய் 8.00 இலட்சம் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்துக்கு அனுமதித்துள்ளது. சம்பந்தப்பட்ட துறை இயக்குநரிடமிருந்து வேண்டுகோள் பெறப்பட்டதின் அடிப்படையில் தாம்பரம் காசநோய் மருத்துவமனையில் ஒன்றும், அச்சரப்பாக்கம் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மாணவர் விடுதியில் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனை மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்கள் விடுதியில் சுடுநீர் அமைப்பு அமைக்க அரசு அதிக அளவு எண்ணிக்கையில் அனுமதி அளிப்பதன் அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட துறை இயக்குநரின் உறுதியான பரிந்துரையின் அடிப்படையிலும் தென்காசி மாவட்ட தலைமையிட மருத்துவமனையில் சுடுநீர் அமைப்பு அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**16—**

### பட்டா வழங்குதல்

**வினா 24085—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, தாழ்த்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் குடியிருக்கும் பகுதிகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்தில், பவானி சட்டமன்ற தொகுதி கவுந்தம்பாடி, பவானி, குறிச்சி ஆகிய மூன்று உள் வட்டங்கள் உள்ளன. இவற்றிலுள்ள ஏழு கிராமங்களில் அரசு புறம்போக்கு நிலங்களில் ஆதி திராவிடர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர் வசித்து வருகின்றனர்.



1999 நவம்பர் 22]

(i) பெரியபுலியூர் கிராமம், புல எண் 371/1 என்ற ஓடை புறம்போக்கு வகைப்பாட்டினை பொதுப்பணித் துறையின் இசைவுடன் நத்தமாக மாற்ற நடவடிக்கை மாவட்ட அளவில் எடுக்கப்படுகிறது.

(ii) சவங்கபாளையம் கிராமம், புல எண் 33, பருவாச்சி கிராமம் புல எண் 160/3, ஜம்பை கிராமம் புல எண் 560 மற்றும் 561-ல் உள்ள நெடுஞ்சாலை புறம்போக்கு நிலங்களின் வகைப்பாட்டினை நெடுஞ்சாலைத் துறையின் இசைவுடன் நத்தமாக மாற்ற நடவடிக்கை மாவட்ட அளவில் எடுக்கப்பட்டு வருகிறது.

(iii) குறிச்சி கிராமம் புல எண் 186/2 அனாதீனம் புறம்போக்கு நிலத்தின் வகைப்பாட்டினை நத்தமாக மாற்ற மாவட்ட அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(iv) வரதநல்லூர் கிராமம், மஜரா சின்னபெரிச்சிபாளையத்தில் நிலம் கையகப்படுத்தி வீட்டுமனை வழங்க நடவடிக்கை மாவட்ட அளவில் எடுக்கப்பட்டு வருகிறது.

**17—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 23274—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வெருகம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், வெருகம்பட்டு கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

[ 1999 நவம்பர் 22

**18—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா 23276—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், அனாதிமங்கலம் (மதுரா) இராமாபுரத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(அ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம் பெரணமல்லூர் ஒன்றியம், அனாதிமங்கலம் ஊராட்சி, இராமபுரம் கிராமக் குடியிருப்பில் 2 கைப்பம்புகளும், 2 திறந்தவெளி கிணறுகளும் உள்ளன. இதன்மூலம் கிராம மக்கள் குடிநீர் பெறுகின்றனர். இக்குடியிருப்புக்கு நடப்பு (1999-2000) நிதியாண்டில் பாதுகாக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை. வரும் நிதியாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட ஆவன செய்யப்படும்.

**19—**

**தெரு விளக்கு வசதி செய்தல்**

**வினா 23290—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி மூன்று வாய்க்கால் சத்தியன்மேடு செல்லும் சாலையில் தெரு விளக்கு வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



1999 நவம்பர் 22]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி மூன்று வாய்க்கால் - சத்தியன்மேடு செல்லும் சாலையில் 9 மின் விளக்குகள் போடப்பட்டு அவைகள் அனைத்தும் நன்கு எரிகின்றன.

**20—**

**காமராஜ் காலனிக்குக் கூடுதல் வசதி**

**வினா 24792—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புதூர் பேரூராட்சி வாலா குடியிருப்பிலிருந்து திருமலைக்கோவில் செல்லும் சாலையில் உள்ள காமராஜ் காலனி பகுதியில் குடிநீர் வசதி மற்றும் தெரு விளக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதூர் பேரூராட்சிப் பகுதிகளில் தற்போது தினசரி காலை, மாலை இருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 72 அடிபம்புகள் அமைக்கப்பட்டு அதன் மூலமும் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் இப்பேரூராட்சியில் தற்சமயம் 335 குழல் விளக்குகள் மற்றும் 16 சோடியம் ஆவிவிளக்குகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 1999-2000 ஆம் நிதியாண்டில் கூடுதலாக 18 விளக்குகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[ 1999 நவம்பர் 22

21—

### குடிநீர் வசதி

**வினா 25166—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், நெய்வேலி தென்பாதி கிராமம் முள்ளுமாடிக்கொல்லை ஆதிதிராவிட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க ஒரு மேல்நிலை குடிநீர் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், நெய்வேலி தென்பாதி கிராமம் முள்ளுமாடிக்கொல்லை ஆதிதிராவிட மக்களின் குடியிருப்புக்கு நடப்பு நிதியாண்டில் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய புதிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

22—

### பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்

**வினா 25650—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி கிராமத்திற்கு, ராசிபுரம்-எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் வழியோர கிராமமாக சேர்க்கப்பட்டு, காவிரி ஆற்றுநீர் வழங்கு



1999 நவம்பர் 22]

பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன. நீர் உந்து நிலையத்திற்கு மின் இணைப்பு பெற்றவுடன் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்படும்.

23—

### நிழற்குடை அமைத்தல்

**வினா 27251—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் நகரில் உள்ள பேருந்து நிலையத்திற்கு எதிரிலும், கடைத் தெருவிலும், மாரியம்மன் கோவில் அருகிலும் மூன்று பயணிகள் நிழற்குடை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் பேருந்து நிலையம் உள்ள எதிர் தெருவிலும், கடைத் தெருவிலும், மாரியம்மன் கோவில் அருகிலும் மூன்று பயணிகள் நிழற்குடைகள் அமைக்க வல்லம் பேரூராட்சி தீர்மானம் (எண் 192, நாள் 9-8-1999) நிறைவேற்றியுள்ளது. நெடுஞ்சாலைத்துறையின் அனுமதி பெற்று பேரூராட்சியின் பொதுநிதியிலிருந்து நிழற்குடைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

24—

### மேல்நிலை குடிநீர்த் தொட்டி

**வினா 27258—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, நெய்வேலி தென்பாதி கிராமத்திற்கு ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டிக் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

[ 1999 நவம்பர் 22

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, நெய்வேலி தென்பாதி கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1999-2000) மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய புதிய குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

**25—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 27497—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம், கூத்தப்பட்டு ஊராட்சியில் ஆதிதிராவிடர் குடியிருப்பில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம் கூத்தம்பட்டு ஊராட்சி, ஆதிதிராவிடர் காலனி குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் நடப்பு (1999-2000) நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



1999 நவம்பர் 22]

**26—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா 27569—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், தும்பிப்பாடி ஊராட்சியிலுள்ள ரெட்டியூர் புதுக்காலனி, பெரியநாகலூர் ஆகிய பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டி குடிநீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தும்பிப்பாடி ஊராட்சியிலுள்ள ரெட்டியூர் புதுக்காலனி குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் மற்றும் பெரியநாகலூர் குடியிருப்புக்கு 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டமும் நடப்பு நிதி ஆண்டில் (1999-2000) அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும்.

**27—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 27585—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதி, பொட்டியாபுரம் கிராமம், செம்மனைக்குழிக்காடு, அரண்மனைக்காடு ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

[1999 நவம்பர் 22

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பொட்டியாபுரம் ஊராட்சி, செம்மனைகுழிக்காடு மற்றும் அரண்மனைக்காடு ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கும் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் வரும் நிதி ஆண்டில் (2000-2001) எடுத்துக்கொள்ளப்படும்.

**28—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா 27586—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சியில் பாம்பன்காடு, தாழம்பூ ஓடை ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சியிலுள்ள பாம்பன்காடு மற்றும் தாழம்பூ ஓடை ஆகிய இரண்டு குடியிருப்புகளுக்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் வரும் நிதி ஆண்டில் (2000-2001) எடுத்துக்கொள்ளப்படும்.



1999 நவம்பர் 22]

**29—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்**

**வினா 27663—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டகவுண்டன்பட்டி ஊராட்சியிலுள்ள ஆணைக்கவுண்டன்பட்டியில் குடிநீர் பற்றாக்குறை இருப்பதால் அங்கு வசிக்கும் மக்களுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்டக் கவுண்டன்பட்டி ஊராட்சியிலுள்ள ஆணைக்கவுண்டன்பட்டி குடியிருப்பின் மக்கட்தொகை, 750 ஆகும். இக்குடியிருப்புக்கு தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 15 லிட்டர்கள் ஆகும். இக்குடியிருப்பில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் 30,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு திட்டம் பராமரிப்புக்காக ஊராட்சி வசம் 1992-1993 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் அபிவிருத்திக்காக இக்குடியிருப்பு 554 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு வடிவமைப்புகள் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதல் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்படும்.

**30—**

**குடிநீர் வசதி செய்தல்**

**வினா 28182—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 நவம்பர் 22

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி வாரச் சந்தையில் கான்கிரிட் தளம், குடிநீர் வசதி மற்றும் மேம்பாடு செய்ய அரசு மானிய கடன் வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆம் வருடத்திற்கான வாரச்சந்தையின் வருமானம் ரூ.6.00 இலட்சமாகும். இச்சந்தைக்கு கான்கிரிட் தளம் அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சமாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே எடப்பாடி நகராட்சியிலிருந்து அரசு கடன் வாயிலாக ரூ.2.50 கோடி அரசுக்கு திரும்பச் செலுத்த வேண்டியுள்ளது. மேலும், இந்நகராட்சிப் பணியாளர்களுக்குக் குறித்த காலத்தில் ஊதியம் வழங்க இயலாத அளவிற்கு நகராட்சியின் நிதி நிலைமை மோசமாக உள்ளது. இச்சந்தையின் வருமானத்திலிருந்து ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, மேலும் அரசு கடன் பெற்று சந்தையினை மேம்படுத்த இயலாத நிலை உள்ளது.

வார சந்தை கூடும் தினத்தன்று சந்தையினுள் உள்ள மூன்று குடிநீர் தொட்டிகளை சுத்தம் செய்து தண்ணீர் நிரப்பப்படுகிறது. மேலும் குடிநீர் டேங்கர் லாரியின் மூலம் அந்நாளில் பொதுமக்களுக்கு தண்ணீர் வழங்கப்படுகிறது.

**31—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா 28417—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், எட்டிக்குட்டப்பட்டி ஊராட்சி அடைக்கனூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 நவம்பர் 22]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், எட்டிக்குட்டப்பட்டி ஊராட்சியிலுள்ள அடைக்கனூர் குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கும் திட்டம் நடப்பு (1999-2000) நிதி ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படும்.

**32—**

### சோடியம் விளக்குகள் அமைத்தல்

**வினா 29180—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியின் முக்கிய சந்திப்புகளில் கூடுதலாக சோடியம் விளக்குகள் அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் பேரூராட்சி மன்றம் தனது 11-6-1999 ஆம் தேதிய 67வது எண் கொண்ட தீர்மானத்தில் பேரூராட்சியின் முக்கிய சந்திப்புகளில் கூடுதலாக 20 சோடியம் விளக்குகள் அமைக்க தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. இதன்படி சோடியம் விளக்குகள் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

33—

**சுகாதாரம் மேம்படச் செய்தல்**

**வினா 29183—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி பகுதி முழுமைக்கும் விரிவான சாக்கடை திட்டம் தீட்டி சுகாதாரம் மேம்பட செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

34—

**கழிவுநீர் வடிகால் கட்டும் பணி**

**வினா 29203—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பாளையக்காடு இரயில்வே பாலத்தின்கீழ் கழிவுத் தண்ணீர் தேங்கி நிற்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பாளையக்காடு இரயில்வே பாலத்தின் கீழ் கழிவு நீர் தேங்கியுள்ளதை வெளியேற்றும் பொருட்டு வடிகால் அமைக்க ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் பெரும் பகுதி முடிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள வடிகால்களை அமைக்க இரயில்வே பாலத்திற்கு மாற்று வழிகள் இல்லாத காரணத்தால், கீழ்ப்பகுதி பாலத்தில் அவற்றை இணைக்க வேண்டியுள்ளது. இதற்கு இரயில்வே துறையின் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் மீதமுள்ள கழிவு நீர் வடிகால் கட்டும் பணி முடிக்கப்படும்.



35—

**சாலைப் பராமரிப்பு, நன்மைக்கூடம் அமைத்தல்**

**வினா 29270—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகராட்சி, புலியூர் இடுகாட்டிற்குச் செல்லும் சாலையைச் சீரமைத்து, நன்மைக்கூடம் அமைத்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புலியூர் இடுகாட்டிற்குச் செல்லும் நகராட்சி சாலை, பராமரிப்பிற்கும், நன்மைக்கூடம் அமைக்கவும் ரூ.13.00 இலட்சம் செலவாகும் என்பதால் உடனடியாக இத்திட்டத்தினை நகராட்சியால் நிறைவேற்றிட இயலவில்லை. நகராட்சியின் நிதிநிலை முன்னேறியதும் இப்பணியைச் செய்வது பரிசீலிக்கப்படும்.

36—

**தடுப்பு அணை**

**வினா 25794—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[ 1999 நவம்பர் 22

(அ) மன்னார்குடி தொகுதி, வடகோவனூர், தென்கோவனூர் கோரையாற்றங்கரை, மரக்கடை ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் கோரையாற்றில் தென்கோவனூர் பாசன வாய்க்காலுக்குக் கீழ் தடுப்பு அணை கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரையாற்றங்கரை வடகோவனூர், தோப்படி, மரக்கடை ஆகிய கிராமங்கள் பாசனம் பெறும் வகையில் ஒரு படுக்கை அணை கோரையாார் மைல் 71/2-ல் கட்ட ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட்டுள்ள நிலைமையில் தென்கோவனூர் கிராமவாசிகள் தங்களுக்கும் பாசனப் பயன் வேண்டும் என்பதால் கோரையாற்றில் வடகோவனூர் வாய்க்காலுக்குக்கீழ் கட்டக் கூடாது என நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதால், இப்பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தென்கோவனூர் வாய்க்காலுக்குக்கீழ் ஒரு படுக்கை அணை கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**37—**

**கால்வாய் சீரமைத்தல்**

**வினா 30751—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சீவலப்பேரி குளத்திலிருந்து காசிவிசுவநாதர் திருக்கோயில் தெப்பக்குளத்திற்கு செல்லும் கால்வாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளதை சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 நவம்பர் 22]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் தென்காசி சீவலப்பேரி தெப்பக்குளத்தில் ரூ.7.35 இலட்சம் செலவில் வேளாண்மை பொறியியல் துறையினர் மூலமாக தூர்வாரும் பணி முடிக்கப்பட்டு, மேற்படி சீவலப்பேரி குளத்தில் இருந்து அருள்மிகு காசிவிசுவநாதர் தெப்பக்குளத்திற்கு தண்ணீர் வரும் கால்வாய் மராமத்து பணிகளும் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் முடிக்கப்பட்டு தண்ணீர் வரும் வாய்க்கால்கள் மற்றும் வெளிச்செல்லும் வாய்க்காலும் சீரமைக்கப்பட்டுள்ளன.

**38—**

**பகுதிநேரக் கடை**

**வினா 22924—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியம், தேவரடியார்குப்பம் கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து கொளமஞ்சனூர் பகுதிநேரக் கடை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தேவரடியார்குப்பத்தில் நியாய விலைக் கடை 275 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கூட்டுறவு நியாய விலைக் கடை நாராயணகுப்பம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நிர்வகித்து வரப்படுகின்றது. கொளமஞ்சனூர் கிராமத்தின் 92 குடும்ப அட்டைகளும் தேவரடியார்குப்பம் கடையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கிராமங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 2 கிலோ மீட்டர் ஆகும். கொளமஞ்சனூர் கிராமத்தில் ஆரம்ப காலத்தில் தக்க

[ 1999 நவம்பர் 22

இடவசதியில்லாததால், தேவரடியார்குப்பம் துணை கிராமத்தில் நீண்ட நாட்களாக இக்கூட்டுறவு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகின்றது. அரசாணை 214 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 15-10-1998-ன்படி பகுதிநேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகளேனும் இணைக்கப்பட வேண்டும். கொளமஞ்சனூர் கிராமத்தில் 92 குடும்ப அட்டைகளே உள்ளதால் இங்கு பகுதிநேர நியாய விலைக் கடை தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

39—

## ஊதியம் வழங்குதல்

**வினா 23544—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்க வங்கிகளில் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் சுமார் 18,000 பணியாளர்களுக்கு குறைவான ஊதியம் உள்ளதால் இதை மாற்றி தொடக்கக் கூட்டுறவு வங்கி உர விற்பனையாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தை வழங்கிட அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு திட்டமாகிய பொது விநியோகத் திட்டத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க வேண்டிய அத்தியாவசிய உணவுப் பொருட்களின் அளவு, விலை மற்றும் விளிம்புத் தொகை ஆகியன அரசால் நிர்ணயிக்கப்படுகிறது. பொது விநியோகத் திட்ட ஆரம்ப காலம் முதற்கொண்டே நியாய விலைக் கடை விற்பனையாளர்களுக்கான ஊதியம் அரசால் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. தற்போது, பெரும்பாலான நியாய விலைக் கடைகள் நட்டத்தில் செயல்படுகின்றன. இந்நிலையில் நியாய விலைக் கடை பணியாளர்களுக்கான ஊதியம் உயர்த்தப்படுமானால், நியாயவிலைக் கடை நடத்தும் கூட்டுறவுச் சங்கம் மேலும் நட்டமடைவதோடு, பொது விநியோகத் திட்டமும் பாதிக்கப்படும். மேலும் நியாயவிலைக் கடை விற்பனையாளர்களுக்கான கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. எழுதியிருந்தால் போதுமானதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், உர விற்பனையாளர்களுக்குக் "கூட்டுறவுப் பயிற்சியும்" அவசியமானது என கூடுதல் கல்வித் தகுதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், உர விற்பனையாளர்களுக்கு உர விற்பனையைப் பொறுத்தும், வணிக உயர்வின் அடிப்படையிலும் ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, நியாய விலைக் கடை பணியாளர்களுக்கு உர விற்பனையாளர்களைப் போன்று ஊதியம் வழங்க வாய்ப்பு இல்லை.



40—

## அமுதம் அங்காடிக்குக் கட்டடம்

**வினா 24492—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சி, கருக்காகோட்டை கிராம அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கிராம கூட்டுறவு அங்காடிகளுக்குக் கட்டடம் கட்டித் தரும் பணி, வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் (1999-2000) ஒரத்தநாடு வட்டத்தில் நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட 36 அங்காடிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதில் இவ்வாண்டில் பஞ்சநதிக்கோட்டை-கருக்காகோட்டை அங்காடிக்கு கட்டடம் கட்ட பரிந்துரைக்கவில்லை. எனவே, வரும் நிதியாண்டில் (2000-2001) பஞ்சநதிக்கோட்டை-கருக்காகோட்டை அங்காடிக்கு வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட பரிந்துரைக்கப்பட உள்ளது.

[1999 நவம்பர் 22

41—

## பகுதிநேரக் கடை திறத்தல்

**வினா 27485—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், இந்திரவனம் கூட்டுறவுக் கடையைப் பிரித்து வில்வராயநல்லூரில் புதிய பகுதி நேரக் கடை திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், சேத்துப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கீழ் இயங்கிவரும் இந்திரவனம் கூட்டுறவு நியாய விலைக் கடையில் 472 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்திரவனம் கிராமக் கூட்டுறவுக் கடையைப் பிரித்து பகுதிநேரக் கடை திறக்க கோரியுள்ள வில்வராயநல்லூர் கிராமத்தில் 170 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற அரசு நிபந்தனை நிறைவு பெறாததால் வில்வராயநல்லூர் கிராமத்தில் பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

## தொழிலாளர் நல வாரியம் மூலம் கட்டடம்

**வினா 28785—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திற்கு தொழிலாளர் நல வாரியம் மூலம் கட்டடம் உள்ளது போல் தஞ்சாவூரில்



1999 நவம்பர் 22]

தொழிலாளர் துணை அலுவலகங்கட்கு தொழிலாளர் நல வாரியம் மூலம் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் தற்போது போதுமான நிதி வசதி இல்லை. மேலும், சென்னையில் தொழிலாளர் ஆணையர் அலுவலகத்திற்கு தொழிலாளர் நல வாரியம் மூலம் கட்டடம் உள்ளதுபோல, தஞ்சாவூரில் தொழிலாளர் துறை அலுவலகங்கட்கு தொழிலாளர் நல வாரியம் மூலம் கட்டடம் கட்டித் தர சென்னை, தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் திட்டங்கள் ஏதும் இல்லை.

43—

## படிப்பகம்

**வினா-29078—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தொழிலாளர் நலத் துறை மூலமாக பாவூர்சத்திரத்தில் தொழிலாளர் நல வாரியம் மூலமாக படிப்பகம் அமைத்து, தொழிலாளர்களும், அவரை சார்ந்தவர்களும் படித்து பயன்பெற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மூலமாக ஒரு படிப்பகம் திறக்க வேண்டுமென்றால், தோராயமாக ஒரு வருடத்திற்கு பணியாளர் சம்பளம், கட்டட வாடகை உட்பட நிகழும்

[ 1999 நவம்பர் 22

மற்றும் நிகழாச் செலவுகளாக ரூ.72,600 ஏற்படுகிறது. பாவூர்சத்திரத்தைப் பொருத்தமட்டில், அங்கு குறைந்த எண்ணிக்கையிலான அதாவது தொழிலாளர் நல நிதி செலுத்தும் நிறுவனங்கள் ஆறு உள்ளன. இதில் மொத்தம் 116 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதன் மூலமாக வாரியத்தில் ஆண்டொன்றுக்கு தொழிலாளர் நல நிதியாக மொத்தம் ரூ.1,740 பெறப்படுகிறது.

மேலும் வாரியத்தில், தற்போதுள்ள நிதிப் பற்றாக்குறையினைக் கருத்தில் கொண்டு, மேற்படி பாவூர்சத்திரத்தில் ஒரு படிப்பகம் திறப்பது குறித்து வாரியத்தின் ஒப்புதல் பெற்று முடிவெடுக்கப்படும்.

44—

### வனத் துறை நிலம்

**வினா 15053—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரம், கொல்லங்குட்டைக்கும், வனகொண்டமலைக்கும் இடையே போக்குவரத்து வசதிக்காக வனத் துறை நிலத்தை ஒதுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி வட்டாரத்திலுள்ள கொல்லங்குட்டைக்கும் வனகொண்டமலைக்கும் இடையே உள்ள தூரம் 1.89 கி.மீ. ஆகும். இச்சாலை வனகொண்டமலை காப்புக் காட்டினூடே 1.5 கி.மீ. நீளத்திற்கும், 3 மீட்டர் அகலத்திற்கு மண்சாலையாகவும், மீதமுள்ள 0.39 கி.மீ. காப்புக் காட்டிற்கு வெளியிலேயும் செல்கிறது. இப்பகுதியில் சாலை அமைக்க அனுமதி அளித்தால் அருகிலுள்ள காப்புக் காட்டில் திருட்டு வெட்டுகள் ஏற்படவும், ஆக்கிரமிப்புகள்



1999 நவம்பர் 22]

ஏற்படவும் ஏதுவாகும். எனவே கொல்லங்குட்னடக்கும் வனகொண்டமலைக்கும் இடையே போக்குவரத்து வசதிக்காக வனத் துறை நிலத்தை ஒதுக்க இயலாத நிலை உள்ளது. மேலும், வனத் துறை நிலத்தை போக்குவரத்து வசதி மற்றும் வனமல்லாத பிற பணிகளுக்கு உபயோகப்படுத்த வனச் சட்டம் 1980 இன்படி மைய அரசின் முன் அனுமதி பெறவேண்டும்.

45—

### பாதை அமைத்தல்

**வினா 27777—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சியைச் சேர்ந்த வனப் பகுதியில் திழுக்கல்மடுவு என்ற பகுதியில் வருடம் முழுவதும் தண்ணீர் செல்வதால் இந்த இடத்திற்கு செல்வதற்கு வனத் துறை மூலம் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, ஏலகிரி ஊராட்சியைச் சேர்ந்த "திழுக்கல்மடுவு" பகுதி ஏலகிரி காப்புக் காட்டினுள் உள்ளது. ஏலகிரி கிராமத்தில் இருந்து கடத்தி குட்டை என்ற கிராமத்திற்குச் செல்வதற்கு ஏற்கெனவே அமைக்கப்பட்ட தணிக்கை சாலையை (Inspection path) தற்போது பொதுமக்களும் பயன்படுத்தி வருகின்றனர். இந்தச் சாலை திழுக்கல்மடுவிற்கு சுமார் 300 மீட்டர் அருகில் செல்கிறது. மேற்கொண்டு வனத் துறை மூலம் புதியதாகச் சாலை அமைக்கும் சாத்தியமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[1999 நவம்பர் 22

46—

**சாலை அமைத்தல்**

**வினா 27788—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சின்னப்பநல்லூரிலிருந்து ஆக்கலத்தம்பட்டி கிராமம் வரை வனத் துறை மூலம் சாலை அமைத்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த சின்னப்பநல்லூரிலிருந்து ஆக்கலத்தம்பட்டி கிராமம் வரை நடைபாதை அமைந்துள்ளது. இப்பகுதி அடர்ந்த வனப் பகுதியாக உள்ளதாலும், யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாக இருப்பதாலும் இப்பகுதியில் சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

47—

**சாலை அமைத்தல்**

**வினா. 27790—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி தண்டாவிலிருந்து கொங்காரப்பட்டிக்கு வனத் துறையின் மூலம் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1999 நவம்பர் 22]

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சியைச் சேர்ந்த தண்டா கிராமத்தில் இருந்து கொங்காரப்பட்டி குக்கிராமத்திற்குச் செல்ல பதனவாடி காப்புக் காட்டினூடே நடைபாதை மட்டுமே உள்ளது. மேற்கண்ட பாதை செல்லும் பகுதி அடர்ந்த வனப் பகுதியாக இருப்பதால் இப்பகுதியில் சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

**சாலை அமைத்தல்**

**வினா 29301—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி முதல் கொங்காரப்பட்டி வரை சுமார் 15 கி.மீ. வனத் துறை பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி கிராமத்தில் இருந்து கொங்காரப்பட்டி வரை உள்ள 15 கி.மீ. தூரத்தில் 12 கி.மீ. நீளம் பதனவாடி காப்புக் காட்டின் வழியாக செல்கிறது. மேற்கண்ட பாதை செல்லும் பகுதி அடர்ந்த வனப் பகுதியாக இருப்பதாலும், யானைகள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியாக இருப்பதாலும், இப்பகுதியில் சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[ 1999 நவம்பர் 22

49—

## பட்டு முட்டைகள் கிடைக்கச் செய்தல்

**வினா 28209—திரு. ஜி.கே. மணி :** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பட்டு உற்பத்தியினைப் பெருக்க விவசாயிகளுக்குத் தேவையான தரமான பட்டு முட்டைகளை ஒரு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்கச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பென்னாகரத்திலேயே அரசு பட்டு முட்டை வித்தகம் ஒன்று ஆண்டு ஒன்றுக்கு 12 இலட்சம் முட்டைத் தொகுதிகள் தயாரிக்கும் திறனுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் ஒரு தனியார் பட்டு வித்தகம் ஒன்று ஆண்டுக்கு 6 (ஆறு) இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகள் தயாரித்து விநியோகிக்கும் உற்பத்தித் திறனுடன் செயல்பட்டு வருகிறது. ஆனால், இப்பகுதியின் தேவை 10.00 இலட்சம் முட்டை தொகுதிகள் ஆகும். நடப்பு காலத் தேவைக்கு மட்டுமல்லாமல் எதிர்வரும் 5 ஆண்டுகள் மல்பரி பரப்புக்குரிய முட்டை தேவையையும் இந்த வித்தகங்கள் தயாரித்து, பட்டு விவசாயிகளுக்கு வழங்கும் வகையில் திட்டமிட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனவே, இனி வரும் காலங்களில் பட்டு வித்தகங்களில் இருந்து தேவையான முட்டைகள் விவசாயிகளுக்கு பஞ்சமில்லாமல் வழங்க முடியும்.



1999 நவம்பர் 22]

50—

## சத்துணவு அமைப்பாளர் நியமனம் செய்தல்

**வினா 28432—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களுக்கு நடப்பாண்டில் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தற்போது பென்னாகரம் தொகுதியில் சத்துணவு அமைப்பாளர் பணியிடங்களில் காலியிடங்கள் எதுவுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### · உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்

(திரு. கே.ஆர். இராமசாமி, திரு. பி. ஆர். சுந்தரம், திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் எழுந்து நின்று, ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மூன்று பேரும் சேர்ந்தாற்போல் எழுந்து நிற்கிறீர்களே, நான் எடுத்துக்கொள்வது Adjournment Motion Notice தான். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். அதற்குப் பிறகு உங்களைக் கேட்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதை எடுத்துக்கொள்வதற்கு முன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற அரசு ரப்பர்க் கழகத்தில் இருக்கின்ற 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் முறையாக நடந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) கட்சித் தலைவர் என்றால், முறையாக நடந்துகொள்ள வேண்டும். நான் Adjourment Motion Notice-க்கு அனுமதி கொடுத்த பிறகுதான் நீங்கள் பேசமுடியும், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் எப்போது கொடுத்தாலும் நான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது கட்டாயம் கிடையாது, உட்காருங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கான அறிவிப்புகள், பல பல உறுப்பினர்கள் பல பொருள்பற்றி நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே கொடுக்கிறார்கள். எந்தப் பொருளைப் பற்றி முதலில் எடுத்துக்கொள்வது என்பதோ, என்றைக்கு எடுத்துக்கொள்வது என்பதோ, என்ன முன்வரிசையில் வைப்பது என்பதோ பேரவைத் தலைவருடைய முழு உரிமை. எனவே, ஒவ்வொரு உறுப்பினரும் தாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு அடிப்படையில் அவ்வப்போது, அதுவும் நினைத்தபோது எழுந்து தங்களுடைய பிரச்சினையை எழுப்புவது என்பது அவையினுடைய மரபுக்கு ஏற்றதல்ல என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. உட்காருங்கள்





## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### பொது விநியோகத் திட்ட கடைகளில் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரேஷன் கடைகளில் பொது விநியோக முறையின்கீழ் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்வது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, பி.ஆர். சுந்தரம், சோ. பாலகிருஷ்ணன், சி. ஞானசேகரன், வி. கே. லட்சுமணன், ந. சுந்தரம், பா. வேல்துரை, டாக்டர் அ. செல்லக்குமார், க.வெ.வீ. இராசமாணிக்கம், எஸ்.வி. திருஞானசம்பந்தம், மு. அப்பாவு, ச. அழகிரி, கே. சுப்பராயன், வை. சிவபுண்ணியம், ஐ. கணேசன்,. ஜி. நிஜாமுதீன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், லா. சந்தானம், சொ. கருப்பசாமி, ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், ப. மோகன் கந்தசாமி ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ள அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதுபோக, பேரவை நடைபெறுகிற நேரத்தில் (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் உட்காருகிறீர்களா? இப்படி எழுந்து, எழுந்து பேசக் கூடாது. நான் பேசி முடித்த பிறகுதான் Point of Order இருந்தால், நீங்கள் எழுப்ப முடியும். பேரவைக் கூடுகின்ற நேரத்தில் திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. நா. பெரியசாமி, டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். பேரவை விதியின்படி 8-45 மணிக்குள் அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்பை நான் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 10-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், ஏழையெளிய மக்களுக்கு அரிசி வழங்குகிற திட்டத்தில், கிலோ 2 ரூபாய்க்கு அரிசி வழங்குகிற திட்டத்தை நம்முடைய அரசு கடைப் பிடித்து வந்தது. இப்போதும் கடைப்பிடித்து வருவதாக அறிக்கைகளை அரசு தந்து கொண்டிருக்கிறது. ஆனால், உண்மையில்,

[திரு. சி. ஞானசேகரன்] [1999 நவம்பர் 22

தமிழகத்தில், பல்வேறு ரேஷன் கடைகளில், பல பாகங்களிலும் 2 ரூபாய்க்கு வழங்கப்படுகிற அரிசி இப்போது வழங்கப்படுவதில்லை. 3 கிலோ வழங்க வேண்டும். பொதுவாக, ஒரு Unit இருந்தால் நபருக்கு 12 கிலோ அரிசியும், ஒன்றரை Unit இருந்தால், 14 கிலோ அரிசியும், அதேபோல் 2 Unit இருந்தால், 16 கிலோ அரிசியும், 2 ½ Unit இருந்தால் 18 கிலோ அரிசியும் 3 அல்லது அதற்கு மேற்பட்ட Unit ஆக இருந்தால், 20 கிலோ அரிசியும் வழங்குகிற திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், 3 கிலோ அரிசியை, இப்போது தமிழக அரசு, 5-10-1999 முதல் அறிவிக்கப்படாத சில ஆணைகளைக் கொண்டு, தாங்கள் வைத்திருக்கக்கூடிய அலுவலர்கள் மூலமாக ரேஷன் கடைகளுக்கு எழுதப்படாத ஒரு சட்டத்தைப் பிறப்பித்து, 2 ரூபாய்க்கு வழங்கப்படுகிற அரிசியை அறவே நிறுத்தியிருக்கிறார்கள். சில கட்சிகள் எல்லாம் அறிக்கை விட்ட பின்னால், அரசு இல்லை, இல்லை நாங்கள் 2 ரூபாய்க்கு அரிசி வழங்குகிறோம் என்கிற பதிலை துறை வழங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால், உண்மையிலேயே — யதார்த்தமான உண்மை என்னவென்று சொன்னால் — 2 ரூபாய் அரிசி வழங்கப்படுவதில்லை என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், அதேபோல் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் எங்களுடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் ஒருவேளை இந்த விஷயத்தில் இரட்டை வேடம் போடுகிறதோ என்கிற அச்சம்கூட எங்களுக்கு இருக்கிறது. ஏனென்று சொன்னால், துறை வழங்குவதாகச் சொல்கிறது. ஆனால், ரேஷன் கடைக்காரர்கள் வழங்குவதில்லை. இதிலே, இடையிலே நிற்பது யார்? யார் கொள்ளை அடிக்கிறார்கள்? 2 ரூபாய்க்கு வழங்கப்பட வேண்டிய அரிசி எல்லாம் எங்குபோய் மாயமாய் மறைகின்றன என்பதை அரசு கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்து, அரசுக்கு என்று வைத்துக்கொண்டிருக்கிற சில பறக்கும் படைகளை வைத்தாவது உடனடியாகக் கண்டுபிடித்து, உண்மையிலேயே நீங்கள் போடச் சொல்லி உத்தரவுபோட்டு ரேஷன் கடைக்காரர்கள் ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னால், தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை ரேஷன் கடைக்காரர்களையும் உடனே பதவியிலிருந்து தூக்கி எறியுங்கள். உங்களுடைய ஆணைக்குக் கட்டுப்படாத இதுபோன்ற ரேஷன் கடைக்காரர்கள் ஏன் அங்கே இருக்கிறார்கள்? அதிலே, இன்னும்



1999 நவம்பர் 22] [திரு. சி. ஞானசேகரன்]

சொல்லப்போனால், ரேஷன் கடைகளிலே எக்கச்சக்கமான ஊழல்கள் D.R., C.S.R., T.S.O., R.I., என்ற ஒவ்வொருவரும் ஒரு Rate வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது குறித்து ரேஷன் கடை Sales men-களைப் போய்க் கேட்டால், D.R.-க்கு மாதம் 150 ரூபாய், C.S.R.-க்கு 150 ரூபாய்; T.S.O-க்கு 150 ரூபாய்; R.I.-க்கு 25 ரூபாய்; Flying Squad D.T.-க்கு 75 ரூபாய்; R.I.-க்கு 50 ரூபாய் என்று ஒரு கணக்கைப் போட்டுக்கொண்டு நாங்கள் கடைக்கு மாதம் ரூபாய் ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி, 2 ரூபாய் அரிசியைப் போடாமல், ஒருவேளை ரூ. 3.75-க்குக் கொடுக்கக்கூடிய அரிசியாக அதை மாற்றி விற்று ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறார்களா; இலஞ்சத்தைக் கொடுப்பதற்காக அவ்வாறு மாற்றித் தந்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை தயவுசெய்து நீங்கள் எப்படியாவது கண்டுபிடித்து, தமிழக மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதுகுளத்தூர் தொகுதியிலேகூட—நான் ஒருவேளை காழ்ப்புணர்ச்சியோடு இங்கே பேசலாம் என்றுகூட சொல்லிவிடலாம்— திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கிளைச் செயலாளரே, புளியங்குடி என்ற கிராமத்தில், திரு. எஸ்.கே. தங்கவேல் என்கிற அவரே ஒரு கடிதம் தந்திருக்கிறார். அதிலே, அரிசி 12 கிலோ மட்டும் கொடுக்கப்படுகிறது; மண்ணெண்ணெய் 2 லிட்டர்; மாதம் இருமுறை கடை திறக்கப்படுகிறது. 2 ரூபாய் அரிசி போடுவதே இல்லை; அனைத்து இரகமும் ரூபாய் 4-க்குத்தான் விற்பனை; எடை குறைவு; தினசரி கடை திறப்பதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதேபோல், முதுகுளத்தூர் தொகுதியிலே, மைக்கேல்பட்டினத்தில் இருக்கக்கூடிய ஊராட்சிமன்றத் தலைவி திருமதி செ.சு. குமரி அவர்கள்கூட, அரிசி 10 கிலோ மட்டும் போடுகிறார்கள்; சீனி 2 கிலோ; மண்ணெண்ணெய் 3 லிட்டர் கொடுக்கப்படுகிறது. 2 ரூபாய் அரிசி போடப்படுவதே இல்லை. அரிசி 15 கிலோ என பதிவு மட்டும் செய்யப்படுகிறது. அதற்கான அட்டையைக்கூடத் தந்திருக்கிறார்கள். அவர்கள் 6 ஆம் தேதி போடுகிறார்கள். 6 ஆம் தேதி போடுகிறபோது, அவர்கள் வழங்கியது 15 கிலோ அரிசி மட்டுமே; ஆனால், அவர்கள் 20 கிலோ போட்டதாக 18 ஆம் தேதி போட்டு, 6 ஆம் தேதிக்கும், 18 ஆம் தேதிக்கும் entry போடுகிறார்கள், அந்த ரேஷன் அட்டையிலே, இப்படி அந்தக் கடிதத்திலே "15 கிலோ

அரிசி மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சீனி தரப்படுவதில்லை; போட்டதாக பின் தேதியிட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது; ரேஷன் மாதத்தில் ஒருநாள் மட்டும்தான் போடப்படுகிறது; தினமும் கடையைத் திறப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், ரேஷன் மாதத்தில் ஒருநாள்தான் போடப்படுகிறது" என்று ஊராட்சி மன்றத்தினுடைய தலைவி அவர்களே ஒரு கடிதத்தைத் தந்திருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு இடங்களில் முறைகேடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

திருவாடனை தொகுதியிலே, தீபாவளிக்கு வழங்கப்பட வேண்டிய சீனியைக்கூட வழங்கவேயில்லை என்று அவர் அமைச்சரிடம் சொல்லி, அமைச்சர்கூட இது குறித்து அழைத்துப் பேசியதாகச் சொன்னார்கள். 1967-க்கு முன்னால் ரூபாய்க்கு 3 படி எங்கே என்று திராவிட முன்னேற்றக் கழகம் அரிசியை வைத்துத்தான் அரசியலை எந்த அளவுக்கு நடத்தினார்கள் என்பதை நன்றாக நாடு அறியும். ஆனால், இப்படி அதே அரிசியும் அரசியலும் ஒன்றாகப் பின்னிப்பிணைந்து இருக்கக்கூடிய தமிழகத்திலே இன்று ரூபாய் இரண்டுக்கு போடக்கூடிய அரிசி என்பது இல்லாமல் போய்விட்டதே, அதை இந்த அரசு மீண்டும் கொண்டுவர வேண்டும். துறை வழங்குவதாகச் சொல்கிறார்கள். ஆனால், வழங்கப்படவில்லை என்பதை எதிர்க் கட்சிகளாகிய நாங்கள் உங்களுக்கு எடுத்து வைக்கின்றோம். உங்களுக்கும் அது தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். எனவே, தயவு செய்து அரசு இரண்டு ரூபாய் அரிசியை மீண்டும் இன்று முதல் உடனடியாக எல்லா கடைகளிலும் போடப்படும் என்கின்ற ஆணையை வழங்கி மக்களுக்கு நீதி கிடைக்கவும், அரிசி கிடைப்பதற்கும் வழிவகை செய்யவும் வேண்டும். ஏழைகளின் வயிற்றில் பால் வார்க்க வேண்டும், ஏழைகளின் வயிற்றில் அடிக்கக்கூடாது என்று கேட்டு, அமைகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடை என்பது வெளி மார்க்கெட்டுகளிலே மிக அதிகமான அளவிலே விலை உயர்வதிலேயிருந்து சாமானியப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்கான ஒரு பாதுகாப்பு வளையமாக நடைமுறையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்த ரேஷன் கடைகளில் இதுவரை 2 ரூபாய்க்கு விற்று வந்த அரிசி திடீரென்று ரூ. 3.75-க்கு விற்கப்படும் என்ற ஒரு அறிவிப்பும், இல்லை, அது 3.75-க்கு விற்கப்படவில்லை. 2





ரூபாய் அரிசி நிறுத்தப்பட்டுவிட்டது என்ற ஒரு செய்தியும், ஒன்றுவிட்டு ஒன்றாக மாறி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இரண்டு ரூபாய்க்கு விற்ற அரிசி இப்போது நடைமுறையில் கிடைக்கவில்லை என்பது நிதர்சன உண்மை. 1.75 ரூபாய் அதிகம் கொடுத்து வாங்க வேண்டிய அவசியம் நேர்ந்திருப்பது என்பதை மாநில அரசு இந்தத் துறையின் மூலம் ஏன் கவனிக்கவில்லை என்கின்ற ஒரு கேள்வி பரவலாக பொது மக்கள் மத்தியில் எழுந்திருக்கிறது. இரண்டு ரூபாய்க்கு வாங்கிக் கொண்டிருந்த மக்கள் 3.75 ரூபாய் கொடுத்து வாங்குகிற அளவிற்கு வருமானம் உயர்ந்துவிடவில்லை. அதுவும், சமீபத்திலே அறிவித்திருக்கிற பல்வேறு அறிவிப்புகளின் மூலம் பொதுமக்களுடைய வாங்கும் சக்தி கீழே இறங்கிக் கொண்டேயிருக்கிறது. எனவே, வறுமைக் கோட்டிற்குக் கீழே மக்களுக்குப் பலன் அளிக்கின்ற ஒரு விஷயம் நடைமுறையில் செல்லாக் காசாக்கப்பட்டுவிட்டது.

நான் இந்த இடத்திலேதான் ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநில அரசு செய்வதைத்தான் சொல்லும் என்று தேர்தலிலும் அறிவித்திருக்கிறது. இங்கே இரண்டு ரூபாய் அரிசி ரூ.3.75-க்கு விற்கப்படும் என்று ஒருபோதும் இந்த அரசு சொன்னதில்லை. செய்வதைச் சொல்கிறவர்கள், சொல்வதை மட்டுமே செய்கிறவர்கள், செய்த ஒன்றைச் சொல்லவில்லை. சொல்லிய ஒன்றை செய்யவில்லை என்ற நடைமுறை முரண்பாடு ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இரண்டு ரூபாய் அரிசி 3.75 ரூபாய்க்கு விற்கப்படும் என்று எந்த மட்டத்திலும், எந்தக் கட்டத்திலும், எந்த இடத்திலும் இவர்கள் சொல்லவில்லை. ஆனால், நடைமுறையில் அது உயர்த்தப்படுகிறபோது சிக்கல் ஏற்படுகிறது. பரவலாக இந்தப் பிரச்சினைகள் வெடித்துச் சிதறுகின்றன. எனவே, நான் மாநில அரசை, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்ள விரும்புவது, பழையபடி இரண்டு ரூபாய் அரிசி ரேஷன் கடைகளில் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை, இந்த அவைக்கு மாநில அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்படும் அரிசி விலையை ரேஷன் கடைகளில் உயர்த்தச் சொல்லிவிட்டு, ஆனால் ரேஷன் கடைகளில் விலையை உயர்த்தவில்லை என்று இந்த தி.மு.க. அரசு நாடகமாடுவதை நாட்டு மக்கள், குறிப்பாக தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

மேலும், பல்வேறு ரேஷன் கடைகளிலும், கூட்டுறவு அங்காடிகளிலும் இர்ண்டு ரூபாய்க்கு விற்கப்பட்ட அரிசி ரூபாய் 3.75-க்கு விற்கப்படவேண்டுமென்று அந்தக் கூட்டுறவு அங்காடிகளுக்கு, கூட்டுறவு இணைப் பதிவாளர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். இந்த விலையேற்றத்தின் மூலம் ஏழையெளிய மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, பாதிக்கப்பட்ட ஏழையெளிய மக்களுக்காக, எங்களுடைய அ.இ.அ.தி.மு.க.வினுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ரூ.3.75-க்கு விற்கப்படுகிற அரிசி விலையை உடனடியாக வாபஸ் பெற வேண்டுமென்றும், மீண்டும் இரண்டு ரூபாய்க்கு அதனை விற்க வேண்டுமென்றும், எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக, எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவிலில் நேற்றைக்கு முன்பாக 20-11-1999 அன்று, என்னுடைய தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவரால் புதிதாக இரண்டு ரேஷன் கடைகள், களப்பாகுளம் கிராமத்திலும், பாரதி நகர் பகுதியிலும் திறக்கப்பட்டன. அந்த ரேஷன் கடைகளில்கூட அரிசி மிகவும் தரக்குறைவாக இருந்தது. இரண்டு ரூபாய்க்கு விற்கப்பட்ட அரிசி ரூ. 3.75-க்கு விற்கப்படுவதை நாங்கள் நேரிடையாக அந்தக் கடையைத் திறக்கும்போது, அங்குள்ள அரிசியை நாங்கள் சோதனை செய்யும்போது பார்த்தோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இந்த அரிசியையும் கொண்டு வந்திருக்கிறேன். sample-ஆக.

(திரு. சொ. கருப்பசாமி இரண்டு அரிசிப் பொட்டலங்களையும் காண்பித்தார்.)

முற்பகல் 10-45

இதற்கு முன்பாக 2 ரூபாய்க்குப் போடப்பட்ட அரிசியை, புளியம்பட்டி கடைகளில் ½ குவிண்டால் அளவிற்கு இருந்த அரிசியில் கொஞ்சம் எடுத்து வந்திருக்கிறேன். புதியதாகத் திறக்கப்பட்ட கடைகளில், குறிப்பாக பாரதி நகர் கடையில் 3¾ ரூபாய்க்கு விற்கப்பட்ட அரிசியையும் கொண்டு வந்திருக்கிறேன். இரண்டு அரிசியும் ஒரே தரமாகத்தான் இருக்கிறது. ஆனால், விலை மட்டும் 3¾ ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, தென் மாவட்டங்களில் ரேஷன் கடைகளில், ரேஷன் கார்டுகளுக்கு அந்த 20 கிலோ அரிசியும், 3





லிட்டர் மண்ணெண்ணையும் அந்தக் கிராமத்துப் பகுதி மக்களுக்குக் குறைவாகவும், மொத்தத்தில் 75 சதவிகிதம் மாவட்ட அளவில் மாவட்ட விநியோக அதிகாரிகள் மூலமாக வழங்கப்பட்டது என்றும் நேற்றைக்கு முன்தினம் எங்களிடத்தில் பல புகார்கள், கோரிக்கைகள் வைக்கப்பட்டன. மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் நாங்கள் நேரிடையாகச் சொல்லியிருந்தோம். இந்தமாதிரி குறைந்த அளவு கொடுத்து, தென் மாவட்ட மக்களை நீங்கள் புறக்கணிக்கிறீர்கள். குறிப்பாக, திருநெல்வேலியில் எங்களுடைய சங்கரன்கோவில் பகுதி மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக இருந்து வருகிறது. ஆகவே, அவர்களுக்கு ரேஷன் அரிசியும், விநியோகப் பொருட்களும் முழுமையாக, நூற்றுக்கு நூறு சதவிகித அளவில் வழங்க வேண்டும் என்று சொல்லி, இந்த விலையேற்றத்தின் மூலமாக இந்த ஆட்சி அரிசி விலையைப் பற்றி நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆகவே, 3¾ ரூபாய்க்கு விற்கக் கூடிய அந்த அரிசியை, மீண்டும் 2 ரூபாய்க்கு விற்று ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டிலே அரிசிப் பிரச்சினைபற்றி இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்கள் நம்முடைய முதல்வரை வைத்து எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் தெரியும் என்று நான் எண்ணுகிறேன். 1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, ஒரு படி அரிசி திட்டத்தைக் கொண்டு வந்தது, இந்தத் திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதனை அவர்கள் மறந்து எதையாவது சொல்லி எதிர்க்க வேண்டும் என்பதற்காகப் பேசுகிறார்கள் என்று எண்ணுகிறேன். ஆனால், பேரவைத் தலைவர் மூலமாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். 1996-லே, அவர்களுடைய ஆட்சியிலே, ஒரு குடும்பத்திற்கு எத்தனை கிலோ அரிசி கொடுத்தார்கள் என்பதனைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கலைஞர் ஆட்சி 1996-லே வந்த பிறகு, 12 கிலோ அரிசி 20 கிலோவாக மாறியது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுவும் தேர்தல் அறிக்கையிலே வரவில்லை என்பதனை

[திரு. ஐ. கணேசன்] [1999 நவம்பர் 22

மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய அரசிடமிருந்து நாம் ஆண்டு ஒன்றுக்கு வாங்கக் கூடிய அரிசி 26-1-1999-லே மட்டும் 63,440 டன். 9 ரூபாய் 5 பைசா விலைக்கு வாங்கி நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு கிலோவிற்குக் கிட்டத்தட்ட 5 ரூபாய் 30 காசு அளவிற்குக் குறைத்து தமிழக மக்களுக்கு வழங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் அவர்கள் நினைக்காமல் ஏதோ அரசியல் பேச வேண்டும் என்பதற்காக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே.... (குறுக்கீடுகள்) 1995-96-வது ஆண்டிலே, 600 கோடி ரூபாய்க்குத்தான் இந்த குடும்ப அட்டைக்கு மானியமாக வழங்கப்பட்டது என்பதை.... (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order. I don't know who the Minister is. He is speaking as a Minister.

**HON. SPEAKER:** Your point of order is ruled out, sit down. Anybody can express any opinion. You please sit down. (interruption) No. There is no point of order in that.

**திரு. சி. ஞானசேகரன்:** எல்லாவற்றையும் திசை திருப்புகிற மாதிரி அவர் பேசுகிறார். மந்திரி மாதிரிப் பேசுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் மந்திரி மாதிரிப் பேசினால் உங்களுக்கென்ன? அதற்கு நீங்கள் என்ன பரிந்துரை செய்ய முடியும்? திரு. சி. ஞானசேகரன், இதுமாதிரி, பொறுப்பில்லாமல் Point of order எழுப்பக் கூடாது. எந்த உறுப்பினரும் எந்தக் கருத்தையும் சொல்லலாம். அரசாங்கத்தை ஆதரித்துச் சொன்னால், நீங்கள் உடனே மந்திரி மாதிரிப் பேசுகிறார் என்று சொல்வதா? உட்காருங்கள்.

முற்பகல் 10-50

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு கிலோ அரிசி ரூ.2-க்குத்தான் வழங்கப்படுகிறது என்று மட்டும்தானே சொல்ல வேண்டும்? மற்ற விவரங்களை ஏன் சொல்ல வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவர் இஷ்டம், அவர் பேசுவார்.

**திரு. ஐ. கணேசன்:** உங்களுக்குத் தேவையான பிரச்சினையை நீங்கள் எடுத்து வையுங்கள். எங்களுக்குத் தேவையான பிரச்சினையை நாங்கள் எடுத்து வைக்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன்பே



1999 நவம்பர் 22] [திரு. ஐ. கணேசன்]

சொல்லியாகிவிட்டது. 1995-96-ஆவது ஆண்டு குடும்ப அட்டைகளுக்காக, மட்டும் ரூ.600 கோடி வழங்கினார்கள். ஆனால், இன்றைய கலைஞர் ஆட்சியிலே 1999-2000 ஆம் ஆண்டில் ரூ.1200 கோடி மானியமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களுக்காக வழங்குகிறார் நம்முடைய முதல்வர் கலைஞர் என்று சொல்லும்போது (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகள் எல்லாம் பூரிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்துகிறார்கள்; வரவேற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், போர்க் குணம் கொண்டவர்கள் மட்டும் துடிக்கிறார்கள். அது ஏன் என்று புரியவில்லை. (சிரிப்பு) அவர்கள் ஒரு கணக்கைப் போட்டுப் பார்க்க வேண்டும். மாதம் ஒன்றுக்கு...

**திரு. கே. சுப்பராயன்:** Point of Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நான் Yield ஆகவில்லை. நீங்கள் உட்காருங்கள் சார். நான் ஒரு நிமிடத்தில் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** உட்காருங்கள் என்று நீங்கள் சொல்லக்கூடாது. அதை Speaker-தான் சொல்ல வேண்டும். Speaker right-ஐ நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**திரு. ஐ. கணேசன்:** என்னுடைய பேச்சில் குறுக்கீடு இருக்கக் கூடாது, சார்.

**THIRU K. SUBBARAYAN:** I am on a point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பராயன், நீங்கள் ஏன் சத்தம் போடுகிறீர்கள்? நீங்கள் மெதுவாகப் பேசுங்கள். என்ன Clarification சொல்லுங்கள். திரு. கணேசன், உட்காருங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** Speaker, Sir, மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள், ஒத்திவைப்புத் தீர்மானமோ அல்லது சிறப்புக் கவன ஈர்ப்போ கொண்டு வந்திருக்கிறார் என்றால், அந்தத் தீர்மானம் என்ன வடிவத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[ 1999 நவம்பர் 22

**திரு. ஐ. கணேசன்:** அதை நான்தான் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** திரு. சுப்பராயன் கேட்பது நியாயமான கேள்வி. அரசை அவர் கண்டிக்கிறாரா, அல்லது ஆதரித்துப் பேசுகிறாரா?

**திரு. ஜி. பழனிசாமி:** Clarification-க்கு Speaker பதில் அளிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். அவர் பேச்சை முடிக்கவில்லை. முடிக்கும்போது இந்தக் கருத்தைப் பற்றிச் சொல்லலாம், நீங்கள் அதற்குள் அவசரப்பட்டுப் பேசக் கூடாது. இப்போது நான் தீர்மானத்தைப் படிக்கிறேன்:

'ரேஷன் கடைகளில் ஒரு கிலோ ரூ.2 என்ற அரிசி நிறுத்தப்பட்டு, அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து' என்று கொடுத்திருக்கிறார். (குறுக்கீடுகள்) அதைக் கடைசியில் பேசுவார் (குறுக்கீடுகள்) அவர் கடைசியாகப் பேசுவார். அவர் இன்னும் முடிக்கவில்லை.

(திரு. கே. சுப்பராயன், திரு. ச. அழகிரி, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஆர். சொக்கர் ஆகியோர் எழுந்து நின்றனர்)

**HON. THIRU DURAI MURUGAN:** Hon. Speaker Sir, I am on a point of order. Call Attention Motion or Adjournment Motion கொடுப்பதற்கு என்று இந்த அவையிலே சில வடிவங்கள் உண்டு. அதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அந்த வடிவத்திற்குள்ளே, அந்த மையக் கருத்தைப் பேச வேண்டுமே தவிர, எடுத்த எடுப்பிலேயே அதை மட்டும்தான் பேச வேண்டுமென்று இல்லை. அவருடைய கருத்தை அவர் தெரிவிக்கிறார். ஒவ்வொருவரும் அவர்களுடைய கருத்தைத் தெரிவிக்கிறார்கள். அதே பாணியில் திரு. கணேசன் அவர்கள், இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிற பொறுப்பு, அதில் செலவிடுகிற தொகை இவற்றையெல்லாம் எடுத்து விவரித்துவிட்டுகூட, அதற்கு மேலே அவருடைய கருத்திற்கு வரலாம். ஆனால், எடுத்த உடனே உங்களுடைய கருத்திற்கு அவர் வரவேண்டுமென்று, இன்னொரு உறுப்பினரை வற்புறுத்துவது இந்த மன்றத்தினுடைய மரபு ஆகாது. உங்களுக்கு இந்த ஆட்சியைப் பற்றிக் குறை சொல்ல உரிமை உண்டு. நீங்கள் குற்றம் சாட்டலாம். பதில் சொல்ல எங்களுக்கு உரிமை உண்டு. இன்னொரு உறுப்பினர், தான் பேசுவதைப்போல்தான் அவர்



1999 நவம்பர் 22] [திரு. துரைமுருகன்]

பேச வேண்டுமென்று எதிர்பார்ப்பது மரபு அல்ல என்பதை மட்டும் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, ஆர்.ஆர். சேகரன், சி. ஞானசேகரன் மற்றும் ச. அழகிரி ஆகியோர் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் Point of Order-ஐ எல்லாம் அனுமதிக்கவில்லை. திரு. கணேசன், நீங்கள் 2 ரூபாய் அரிசிக்கு வாருங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அது அவர் இஷ்டம். நீங்கள் உட்காருங்கள். திரு. கணேசன் பேசுவதற்கு நான் அனுமதிக்கிறேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக, நம்முடைய கருணை உள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள், அவருடைய முந்தைய ஆட்சிக் காலத்திலே மற்ற நண்பர்களும், எங்களைப் போன்றவர்களும் அவரிடத்திலே சென்று கேட்கும்போது சொல்வார்—கருணாநிதியிடத்திலே கருணை அதிகமாக இருக்கிறது. நிதியில்லை என்று அப்போது சொல்வார்கள். ஆனால், இந்த 4 ஆண்டுக்கால அரசியல் வரலாறுகளைப் பார்க்கக்கூடிய அரசியல் வல்லுநர்களும், நல்ல இதயம் படைத்த நல்லவர்களும், நாட்டு மக்களும், கலைஞருடைய இதயத்திலே நிதி இவ்வளவு குவிந்து இருக்கிறது; சிறைச்சாலையிலே செத்தவர்களுக்கும், மருத்துவமனையிலே காலம் அடைந்தவர்களுக்கும்... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 2 ரூபாய் அரிசியைப் பற்றிப் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மறைந்தவர்களுக்கும் அள்ளி அள்ளி வழங்குகிறார்கள். நான் எதற்காக முன்னாலே பீடிகை போட்டுக் கொண்டு வருகிறேன் என்றால்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ரொம்ப ரசித்துக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். ஆனால், இன்னும் 4 பேர் பேசிய பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். அதனால், சீக்கிரம் பேசி முடியுங்கள் என்று சொல்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களும், நம்முடைய அமைச்சர் அவர்களும் இந்தக் கணக்கைத் தயவுசெய்து போட்டுப் பார்க்க வேண்டும். ஒரு

D V27,3 N99 N99.85.2 2,21,203

[திரு. ஐ. கணேசன்] [1999 நவம்பர் 22

குடும்பத்திற்கு, ரேஷனுக்காக $3\frac{3}{4}$ ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று 17 கிலோ அரிசியை நாம் விற்கிறோம். மூன்றே மூன்று கிலோ அரிசி மட்டும்தான் 2 ரூபாய்க்கு விற்கிறோம். அதனால், அரசுக்கு அதிகமாக வரும் தொகை, ஒரு குடும்பத்திற்கு $5\frac{1}{4}$ ரூபாய்தான். தயவுசெய்து கருணை உள்ளம் கொண்ட நம்முடைய முதல்வர் அவர்கள் ஒரு குடும்பத்திற்கு, மாதம் ஒன்றுக்கு $5\frac{1}{4}$ ரூபாயைக் குறைத்துக்கொண்டு, இந்த 2 ரூபாய் அரிசி கிடைக்க, இதை வைத்து அரசியல் பண்ணக்கூடியவர்களுடைய முகத்திரையைக் கிழிக்க இன்று அறிவிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டு, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரேஷன் கடைகளில் ஒரு ரேஷன் கார்டுக்கு 3 கிலோ வீதம் 2 ரூபாய் அரிசி விற்கப்பட்டு வந்தது. B.R. Common என்று சொல்லப்படுகின்ற அந்த அரிசியை நிறுத்திவிட்டு அதற்குப் பதில் வேறு நல்ல அரிசியை வழங்குகின்றோம் $3\frac{3}{4}$ ரூபாய்க்கு என்று அரசு கூறுகின்றது. ஆனால்,, உண்மை நிலவரம் அப்படி அல்ல. B.R. Common upgraded என்று ஒரு upgraded என்ற வார்த்தையைச் சேர்த்துவிட்டு அதே அரிசியை ரேஷன் கடைகளிலே $3\frac{3}{4}$ ரூபாய்க்கு விற்கின்றார்கள். ஆனால், அரசு விலையை உயர்த்தவில்லை என்று சொல்லிவிட்டு, அறிவிக்கப்படாத ஒரு விலை உயர்வை அமல் செய்திருக்கிறது.

இந்த 3 கிலோ அரிசியை அதே விலையில், 2 ரூபாய் விலையிலே கொடுப்பதனால் இந்த அரசுக்குப், பெருத்த அளவில் நஷ்டம் ஏற்பட்டுவிடாது. இதனால், பெரும் அளவிலே ஏழையெளிய மக்கள் பயன் பெறுவார்கள். ஆகவே, எதையுமே வெளிப்படையாகச் செய்வோம்- transparency என்று கூறுகின்ற இந்த அரசு விலை உயர்வைப் பகிரங்கமாக அறிவிக்காமல், விலை உயர்வை அமல்படுத்தியிருப்பதை வாபஸ் வாங்கி, மீண்டும் 2 ரூபாய் அரிசியை வழங்க வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத்திலே ஏழை மக்களுக்கு விநியோகம் செய்கின்ற அரிசியின் விலையை உயர்த்தியிருப்பதாக பரவலாக ஒரு பேச்சை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால், உண்மை நிலையை நாம் சிந்தித்துப்



1999 நவம்பர் 22] [திரு. லா. சந்தானம்]

பார்க்கின்றபோது, நமது பொது விநியோகக் கடைகளிலே 20 கிலோ அரிசி 3 நபர்களுக்குக் கூடுதலாக உள்ள ஒரு குடும்பத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதிலே 2 ரூபாய் அளவிலே வழங்க வேண்டிய அரிசி 3 கிலோ மட்டுமே. மீதம் உள்ள 17 கிலோ அரிசியினை ரூ.3.75-க்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த அரசுக்குக் கடந்த காலங்களில் ஏற்பட்ட பளுவைக் காட்டிலும், தற்போது இந்தப் பொது விநியோக அரிசியினுடைய விலையை உயர்த்தக்கூடாது — மத்தியிலே இருக்கின்ற அரசு இரண்டு முறை இந்தப் பொது விநியோக அரிசியினுடைய விலையை உயர்த்தியிருந்தாலும்கூட, மாநிலத்திலே இருக்கின்ற அரசு, ஏழை மக்களிடத்திலே நல்ல எண்ணத்தை வைத்திருக்கின்ற காரணத்தினால் அதை உயர்த்தக் கூடாது — என்கின்ற நிலையிலே, அந்த ரூ.3.75 என்ற விலையிலேயே அதனுடைய நிலைப்பாட்டை வைத்திருந்த காரணத்தினால், இந்த 3 கிலோ அரிசி, 2 ரூபாய்க்கு விற்கப்படுகின்ற அரிசி சில சமயங்களிலே இல்லாத, தட்டுப்பாடான நேரங்களில் மட்டும், ஆனால் முழுமையாக அது நின்று விட்டதாக நான் அறியவில்லை. என்னைப் பொறுத்த அளவிலே, பல இடங்களிலே கேட்டுப் பார்க்கின்றபோது வழங்குகின்ற நேரத்தில் அந்த அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்திலே அந்தப் பற்றாக்குறையின் காரணமாக 20 கிலோ அரிசியும் ரூ.3.75-க்கு விநியோகிக்கப்பட்டதாக நான் அறிகிறேன்.

முற்பகல் 11-00

இப்போது இந்த அரசு இந்த மக்களினுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறது. நமக்கு எவ்வளவு அக்கரை இருக்கிறதோ அதே அக்கரை இந்த ஆட்சியிலே இருக்கின்ற அரசுக்கும் உண்டு என்பதை நாம் எக்காரணத்தைக் கொண்டும் மறந்து விடக்கூடாது. தனக்கு வாக்களித்த மக்களுக்கு எப்படியும் நன்மை செய்ய வேண்டும் என்கின்ற உணர்வோடுதான் அவர்களும் செயல்படுகின்ற ஒரு தன்மை இருக்குமே தவிர, வாக்களித்த மக்களுக்கு வஞ்சனை செய்ய வேண்டும் என்கின்ற எண்ணம் நிச்சயமாக, அதுவும் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியொரு நிலையை எடுக்கும் என நான் நினைக்கவில்லை.

இந்த அரசு ஒரு தவறைச் செய்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு மற்ற மாநிலங்களிலேயெல்லாம் பொது விநியோக அரிசியை மக்களுக்கு வழங்குகின்ற நேரத்திலே இரண்டு விதமாகப் பாகுபாடு

செய்திருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ஒரு விலையிலே அரிசியும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு ஒரு விலையிலே அரிசியும் என்று வைத்துள்ளார்கள். நம்முடைய அண்டை மாநிலம் கேரளாவிலே, அங்கு நமது கம்யூனிஸ்ட் தோழர்கள் ஆட்சி செய்கின்ற மாநிலத்திலே, அவர்கள் இரண்டாக அவர்களைப் பாகுபாடு செய்திருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்கு மேலே இருக்கின்றவர்களுக்கு எல்லாம் ஒரு கிலோ அரிசி, .விலை பொது விநியோகத்திலே 9 ரூபாய் 50 காசு. அதேபோல வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றவர்களுக்கு 3 ரூபாய் 90 காசு.

அதைப்போல, மேற்கு வங்கத்திலே, வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கின்றவர்களுக்கு ஒரு கிலோ அரிசியினுடைய விலை ரூ.5. அதேமாதிரி, ஆந்திர, கர்நாடகம் போன்ற மாநிலங்களிலேயும் வறுமைக் கோட்டிற்கு மேலே இருக்கின்றவர்களுக்கு 9 ரூபாய்க்கு மேலான அரிசியும், மற்றவர்களுக்கு இன்று நாம் வழங்குகின்ற விலையிலே அரிசியும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நமது மாநிலத்தைப் பொறுத்தஅளவிலே நமது அரசு மிகக் கருணை உள்ளத்தோடு அத்தனை பேர்களையும் வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கின்றவர்களாகவே கணக்கு எடுத்துக் கொண்டு வழங்கிக் கொண்டிருக்கின்றது. அப்படி வழங்குகின்ற காரணத்தினால்தான் மற்ற அரசுகளைக் காட்டிலும் மிக அதிகப்படியான சுமையை இந்த ரேஷன் அரிசி வழங்குவதிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, இவ்வளவு பளுவையெல்லாம் தாங்கிக் கொண்டிருக்கின்ற நீங்கள், நண்பர் கணேசன் சொன்னதுமாதிரி, இந்த 3 கிலோ அரிசியை பழையபடி வழங்கினால் ஒரு குடும்பத்திற்கு 5 ரூபாய்தான் வருகிறது. எனவே, அந்தக் குறையையும் நீங்கள் போக்க வேண்டும். வருகின்ற காலங்களில் இதனால் ஏற்படுகின்ற நட்டம் மிகவும் குறைவாகத்தான் இருக்கும் என்கின்ற காரணத்தினால் மக்களுக்கு உதவி செய்கின்ற இந்த அரசு அந்த நட்டத்தையும் ஏற்றுக் கொண்டு, வருகின்ற காலங்களில் அந்த 3 கிலோ அரிசியையும் 2 ரூபாய் விலைக்கே வழங்குகின்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மக்களுக்குப் பொது விநியோக முறையிலே வழங்க வேண்டிய அரிசிக்குக் கொடுக்க வேண்டிய மானியத்தை எடுத்துவிட்டதன் காரணமாக ஏற்பட்டிருக்கிற நிலை இது. இந்தத்



தமிழக அரசு அதைக் கண்டிப்பதற்கும் முடியவில்லை; அதை ஆதரிக்காமலும் இருக்க முடியவில்லை என்ற நிலையிலே இருந்து கொண்டிருப்பதன் காரணமாக, அதனுடைய சுமையை இன்று மக்கள் தலையிலே திணிக்கிற நிலைக்குச் சென்றிருக்கிறது. ஆகவேதான், இன்று ஒருசில நண்பர்கள் இங்கே சொன்னார்கள். அதாவது, அண்டை மாநிலங்களிலேயெல்லாம் இந்த முறையிலே இல்லை, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது என்று. ஆம். ஆனால், Open Market-லே 17 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ அரிசி இன்றைக்கு ரூ.19.50-க்கு விற்கப்படுகிறது. 20 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த அரிசி இன்றைக்கு 22 ரூபாய்க்குமேலே வந்திருக்கிறது. அதாவது, நம்முடைய பொது விநியோக முறையிலே கொடுக்கப்படுகிற அரிசியை வைத்து மட்டும் இந்தக் குடும்பங்கள் வாழ்க்கை நடத்திக் கொள்ள முடியாத ஒரு நிலையிலே, அவர்கள் open market-லே போய் அரிசி வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிற நேரத்தில் அதிகமான விலை கொடுக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஆகவேதான், ஏற்கெனவே 2.00 ரூபாய்க்குக் கொடுத்திருந்த அரிசியை upgrade என்ற ஒரு வார்த்தையைப் போட்டு அதே அரிசியை ரூ.3.75-க்கு விற்கிற இந்த நிலை சரியல்ல என்பதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

முற்பகல் 11-05

இந்த நேரத்திலே ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற பணத்தை, மக்களுடைய மற்ற தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய பணத்தை இந்த அரசு அரிசியை வாங்கி அதனாலே ஏற்படுகிற நஷ்டத்தை மக்கள் தலையிலே திணிக்காமல் அப்படிச் செய்யப்படுவதை விட்டு, மத்திய அரசிடமிருந்து தேவையான மானியத்தை வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்து, மக்களுக்கு ஏற்கெனவே 2.00 ரூபாய்க்கு விற்கப்பட்டிருந்ததைப் போல விற்பதற்கான நடவடிக்கை எடுப்பது என்பதுதான் இந்த நேரத்திலே, மாநிலத்திலே இருக்கிற மக்களுக்கு உதவக்கூடியதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏற்கெனவே மத்திய அரசோடு இணைந்திருக்கிற ஒரு கட்சி, ஆந்திர மாநிலத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்து கொண்டிருக்கின்றது. ஆனால், அவர்கள் அங்கேயிருந்து அரிசியை

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1999 நவம்பர் 22

மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்கின்ற movement-ஐ restrict பண்ணியிருக்கிறார்கள். அதன் காரணமாக ஏற்பட்டிருக்கிற விளைவால் தான் open market-லே தற்போது அரிசியினுடைய விலை உயர்ந்திருக்கிறது. ஆகவே, மத்திய அரசையும், அதேபோன்று அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்திலே இருக்கின்ற அரசையும் இந்த விஷயத்திலே அணுகி, இந்த மாநிலத்திலே இருக்கிற அரசு நஷ்டத்தை சகித்துக் கொள்ளாமல் மத்திய அரசிடமிருந்து தேவையான மானியத்தை வாங்கி, மக்களைக் காப்பாற்றுவது என்பதுதான் சரியான நடவடிக்கையாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, ஏற்கெனவே மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததைப்போல, அதே மாதிரி அரிசியை ரூ.3.75-க்கு விற்பது சரியல்ல, 2.00 ரூபாய்க்கு விற்க வேண்டும் என்று வலியுறுத்தி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு உதவக்கூடிய வகையிலே தற்போது வழங்கப்பட்டிருக்கக்கூடிய ரேஷன் அரிசியை, குறிப்பாக மூன்று பேருக்கு மேற்பட்ட நபர்கள் இருக்கின்ற குடும்பத்திற்கு வழங்கப்படுவது 17 கிலோ மற்றும் 3 கிலோ என்று பிரிக்கப்பட்டு 2.00 ரூபாய்க்கு விற்கக்கூடிய அந்த 3 கிலோ அரிசியை இரத்து செய்துவிட்டு, இப்போது அதற்குப் பதிலாக ரூ.3.75-க்கு விற்கக் கூடிய அரிசியை வழங்கக்கூடிய உத்தரவு வந்து, அது கடந்த சில மாதங்களாக அமலுக்கு வந்ததன் காரணமாக பொதுமக்கள் மத்தியிலே அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஒட்டுமொத்தமாக ரூ.5.25—கூடுதலாகக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தாலும் கூட, அதைக்கூட கொடுத்து வாங்க முடியாத எத்தனையோ ஏழைக் குடும்பங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த 3 கிலோ அரிசி கொடுப்பதிலே, ரேஷன் கடை ஊழியர்கள் 17 கிலோ அரிசியை மட்டும் மக்களுக்குக், கொடுத்துவிட்டு 3 கிலோ அரிசி இல்லையென்று சொல்லி திருப்பியனுப்பிவிட்டு 3 கிலோ அரிசியை வேறு தனியார் கடைகளுக்கு விற்பதற்கோ அல்லது கடத்துவதற்கோ பயன்படுத்தக்கூடிய ஒரு நிலை உருவாகின்ற காரணத்திற்காகக் கூட இதைச் செய்திருக்க வாய்ப்பு இருக்கிறது. தவறு செய்யக்கூடிய அந்த ஊழியர்கள் மீதோ, அதிகாரிகள் மீதோ நடவடிக்கை எடுத்து, அதைக் கட்டுப்படுத்த வேண்டுமே தவிர, சில ஊழியர்களோ, அதிகாரிகளோ முறைகேடாக



1999 நவம்பர் 22] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

நடந்து கொள்கிறார்கள் என்ற காரணத்திற்காக, ஒட்டுமொத்தமாக நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம் எந்தக் காரணம் கொண்டும் இரத்து செய்யப்படக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. எனவே, அந்த 2.00 ரூபாய்க்கு விற்கக்கூடிய 3 கிலோ அரிசியை, 5 கிலோவாக ஆக்கி, ஒருவேளை அந்த 2 ரூபாய்க்கு விற்கக்கூடிய அரிசியை முறைகேடாக ஊழியர்களோ, அதிகாரிகளோ வெளியே விற்பார்களேயானால் அதற்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதேபோல, ரேஷன் அரிசி கடத்தப்பட்டாலோ அல்லது தனியார் கடைகளிலே விற்கப்பட்டாலோ அந்தக் கடையினுடைய உரிமத்தை இரத்து செய்யக்கூடிய நடவடிக்கையை எடுப்பதன் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கொண்டு வர முடியும். எனவே, அரசு மீண்டும் இரண்டு ரூபாய்க்கே 3 கிலோ அரிசி மட்டுமல்ல, 5 கிலோ அளவுக்கும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி, விடைபெறுகிறேன். வணக்கம்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்கு இரண்டு ரூபாய் அளவுக்குப் போடப்பட்டுவந்த அரிசியினுடைய விலையானது, வாக்கு எண்ணிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்திலே திடீரென்று ரூ.3.75-க்கு உயர்த்தப்பட்டது, இன்றைக்கு மக்களிடையே மாபெரும் அதிருப்தியை ஏற்படுத்திக் கொண்டிருப்பதைத், தயவுசெய்து இந்த அரசு புறக்கணித்துவிட முடியாது. அதிலும், எந்த நிர்வாகத்தையும் வெளிப்படையாகச் செய்வதாகக் கூறிக் கொள்கின்ற இந்த அரசு, அரிசி விலையைத் திடீரென்று ரூ.3.75 என்று ஆக்குகின்றபொழுது, அது அறிவிக்கப்படாத முறையிலே, - அரசு சொல்கிறது., அரிசி விலை ஏறவில்லை என்று, ஆனால் Civil Supplies-லே இருக்கக்கூடிய அதிகாரிகள் அறிவிக்கப்படாத முறையிலே — அதைத் தங்களுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு அறிவித்து, 2 ரூபாய்க்கு விற்க வேண்டிய அரிசியை ரூ.3.75-க்கு பில் போட்டுக் கேட்டு, அதனாலே அந்த ரேஷன் கடை ஊழியர்கள் தங்களுடைய கைப் பணத்தையெல்லாம் போட்டுத் தரவேண்டிய நிர்பந்தமான, இக்கட்டான சூழ்நிலையெல்லாம் கூட வந்திருக்கின்றது.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 நவம்பர் 22

அதிலும் குறிப்பாக, அரசு திங்கட்கிழமை ஓர் அறிவிப்பை வெளியிடுகிறது, விலை ஏறவில்லை என்று. ஆனால் 'தினமணி' பத்திரிகையில், 13-10-1999 அன்று செவ்வாய்க்கிழமை, வேலூர் மாவட்டத்திலே ஒரு ரேஷன் கடையிலே அரிசி விலையானது ரூ.3.75-க்குப் போடப்பட்டிருப்பதை, ஆதாரத்தோடு, நகலோடு வெளியிட்டிருக்கிறது. ஆக, இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது என்னவென்றால் 2 ரூபாய்க்கு விற்ற அரிசி ரூ.3.75 என்று விற்கிறபோது, ஒரேயடியாக ஏறத்தாழ இரண்டு மடங்கு அளவுக்கு அது உயர்த்தப்பட்டிருக்கின்றது. அதனுடைய நட்ட அளவு, இப்போது புள்ளிவிவரக் கணக்குகள் போட்டுச் சொல்லப்பட்டது. அப்படி இருக்கிறபோது, இந்த அரிசி விலை உயர்வையும் அரசு ஏன் இரத்து செய்யக் கூடாது என்பதைச் சிந்திக்க வேண்டும். இல்லையென்றால் இதே அரிசிப் பிரச்சினை ஏறத்தாழ பல ஆட்சி மாற்றங்களுக்கெல்லாம் இதற்கு முன்னாலே வாய்ப்பாக அமைந்திருக்கின்றது என்பதையும் யாரும் மறந்துவிட முடியாது.

பாட்டாளிகளுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக்கொள்கின்ற இந்த அரசு, பாட்டாளிகளுக்காகப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கின்ற இந்த அரசு மட்டுமல்ல, யாராக இருந்தாலும் சரி, இந்த அரிசி விலை உயர்வை நிச்சயமாக வரவேற்கமுடியாது. ஆகவே, இதனை ரத்து செய்து, பழையபடி 2 ரூபாய்க்கே அந்த மூன்று கிலோ அரிசி என்பதை 5 கிலோவாகவாவது உயர்த்தி வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டு, அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள், தமிழ்நாட்டிலே பொது விநியோகக் கடைகளிலே இரண்டு ரூபாய்க்கு வழங்கப்பட்டு வந்த அரிசி, ஏன் வழங்கப்படவில்லை என்று அவரவர்களுடைய எண்ணத்திற்கேற்ப இங்கே பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசுகின்றபோது, உறுப்பினர்கள் ஏதோ இருபது கிலோ அரிசியும் இதுவரையிலே இரண்டு ரூபாய்க்குத்தான் விற்றது போலவும், இப்போது ரூ.3.75-க்கு விற்பது போலவும் ஒரு பிரமையை, ஒரு எண்ணத்தை உருவாக்குகின்ற வகையிலே இங்கே பேசியிருப்பதுதான் சற்று வருந்தத்தக்கதாக இருக்கிறது.



1999 நவம்பர் 22] [திரு. கா. நா. நேரு]

20 கிலோ அரிசி வழங்குகிறபோது, 17 கிலோ அரிசி ரூ.3.75 வீதம் ஏற்கெனவே வழங்கப்பட்டது. மூன்று கிலோ அரிசி மட்டும் 2 ரூபாய்க்கு வழங்கப்பட்டு வந்தது. அதைத்தான் இப்போது ரூ.3.75-க்கு விற்கிறோம் என்று நமது உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சொல்கிறார்கள். ஏதோ அரசு வேண்டுமென்றே நாடகம் ஆடுகிறது என்று சொல்கிறார்கள். அப்படி நாடகம் ஆடவில்லை. மற்ற மாநிலங்களில் என்ன விலைக்கு விற்கப்படுகிறது, இங்கே என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தி, அந்த விளம்பரம் மூலமாக நாங்கள் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, 13-12-1996 அன்று அரசு ஆணை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. எப்போது இரண்டு ரூபாய் அரிசி இல்லையென்றாலும், ரூ.3.75 அரிசி அதிகமாக இருந்தால், அந்த 20 கிலோவும் ரூ.3.75 என்ற விலைக்கு வழங்கலாம் என்று அரசு ஆணை ஏற்கெனவே 13-12-1996-ல் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அரிசியினுடைய நுகர்வைப் பற்றி நான் கொஞ்சம் உங்களிடம் தெரிவித்தாக வேண்டும். நாம் மத்திய தொகுப்பிலிருந்து ஒவ்வொரு மாதமும் 1,65,000 டன் அரிசியைப் பெறுகின்றோம். மீதமிருக்கின்ற 35,000 டன் அரிசியை நம்முடைய கொள்முதல் மூலமாக நாம் எடுத்துக் கொள்கிறோம். மத்திய அரசின் தொகுப்பிலிருந்து வருகின்றபோது, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களுக்கு என்று 45,000 டன் அரிசியை ரூ.3.50 வீதம் நமக்குத் தருகின்றார்கள். அதனுடைய மதிப்பு 15 கோடியே 75 இலட்சம் ரூபாய். இதிலே போக்குவரத்துச் செலவு தனி; தூக்கு கூலி போன்ற இதரச் செலவுகள் தனி; இது அவர்கள் தருகின்ற விலை. வறுமைக் கோட்டிற்கு மேலே வருகிறவர்களுக்கு மாதம் 1 இலட்சத்து 20 ஆயிரம் டன் தருகிறார்கள். அதனுடைய விலை 1 கிலோவிற்கு ரூ.9.05. அதற்கும் போக்குவரத்து செலவு, இதரச் செலவுகளெல்லாம் தனி. அதனுடைய மதிப்பு 108 கோடி ரூபாய்.

முற்பகல் 11-15

நாம் ஒவ்வொரு மாதமும் பொது விநியோகக் கடைகள் மூலம் மக்களுக்கு விநியோகம் செய்கின்ற அரிசியின் அளவு 2 இலட்சம் டன். மத்தியத் தொகுப்பிலிருந்து தற்போது தருகின்ற 1 இலட்சத்து 65 ஆயிரம் டன் போக, மீதமிருக்கின்ற 35 ஆயிரம் டன்னை நாம் நம்முடைய தமிழ்நாடு அரசின் சார்பாக விவசாயிகளிடமிருந்து

[திரு. கா. நா. நேரு] [1999 நவம்பர் 22

கொள்முதல் செய்கின்றோம். விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்கின்றபோது, மத்திய அரசு நிர்ணயித்த விலையைவிட, மாநில அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குவிண்டால் ஒன்றுக்கு, ஏக போகக் கொள்முதல் திட்டம் என்றால், 50 ரூபாய் ஊக்கத் தொகை தரச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். இணைக் கொள்முதல் என்றால் 35 ரூபாய் அவர்களுக்குத் தரச்சொல்லி உத்தரவிட்டிருக்கிறார்கள். இன்றைய தினத்திலே, சாதாரண இரகம் 490 ரூபாய்; நல்ல இரகம் 520 ரூபாய் என்று மத்திய அரசு விலை நிர்ணயித்ததற்கு மேற்கொண்டும் 35 ரூபாய் தந்து கிட்டத்தட்ட 1 கிலோ 5 ரூபாய் 55 காசு என்ற அளவிலே, நல்ல இரக நெல்லை நம்முடைய தமிழ்நாடு அரசு வாங்குகிறது. அப்படி அதிகமான அளவுக்கு, அரசு விவசாயிகளுக்குப் பணம் தந்து வாங்குகின்றபோது, அதனுடைய அடக்க மதிப்பு 1 கிலோவிற்கு 10 ரூபாய் 96 காசு ஆகிறது. இப்படி, மூன்றையும் கூட்டினால், நாம் வழங்குகிற 1 கிலோ அரிசியினுடைய விலை, தமிழ்நாடு அரசின் அடக்க விலை ரூ.8.13. இதில், போக்குவரத்துச் செலவு தனி. ஆனால், ஒரு கிலோ அரிசியை மக்களுக்கு வழங்குகிறபோதும் 3¾ ரூபாய் என்ற அளவிலே வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதிலே மானியமாக ஒரு கிலோவுக்கு, தமிழ்நாடு அரசு, மக்களுக்கு ரூபாய் 4.38-லிருந்து ரூபாய் 4.50 வரையிலே வழங்குகிறது.

சரி, ஏதோ, இந்த அரசு வந்தவுடன்தான் இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் விலையை ஏற்றியிருக்கிறதா என்று பார்ப்போமேயானால், கடந்த 1970 ஆம் ஆண்டிலிருந்து இந்த அரசினுடைய மானியத் தொகையைப் பார்ப்போமேயானால், 1978-79-லே தமிழ்நாடு அரசின் சார்பாகக் கொடுக்கப்பட்ட மானியம் ஓராண்டுக்கு 4 கோடியே 20 இலட்சம் ரூபாய்தான். ஆனால், இப்போது 1,200 கோடி ரூபாய் மானியமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். 4 கோடியே 20 லட்சம் ரூபாயில் ஆரம்பித்த அந்த மானியத் தொகை, இன்றைக்கு 1,200 கோடி ரூபாயாக வந்திருக்கிறது. இப்படி வந்ததுகூட, ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1991 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தபோது, 12 கிலோ அரிசியோடு, கூடுதலாகத் தேவையென்றால், இன்னுமொரு 5 கிலோ வாங்கிக் கொள்ளலாம் என்று உத்தரவிட்டார்கள். அதற்குப் பிறகு நம்மிடம் அரிசி அதிகமாக இருப்பு இருக்கிறபோது பொது விநியோகக் கடைகளிலே தரலாம் என்றார்கள். அரிசி இருப்பு சரியாக இருக்கிறபோது 12 கிலோ



1999 நவம்பர் 22] [திரு. கா. நா. நேரு]

வழங்கலாம் என்று சொன்னார்கள். ஆனால், இதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்கள் 4 ஆண்டு காலம், 4½ ஆண்டுகாலம் 12 கிலோ வீதம் தந்ததை திடீரென்று தேர்தலை முன்னிட்டு, தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, 12 கிலோவிலிருந்து 20 கிலோ என்று உயர்த்தியதன் காரணமாக, இந்த மானியம் இப்போது உயர்ந்திருக்கிறது. அப்படி உயர்ந்தது 1,200 கோடி ரூபாய் என்ற அளவிலே இப்போது நாம் அதை வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதிலேகூட, மத்திய அரசு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு வழங்குகின்ற அரிசியினுடைய விலை 3½ ரூபாய்க்குத் தந்து அதை 4 ரூபாய்க்கு விற்கலாம் என்று சொன்னபோதுகூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இல்லை, இல்லை, ரூ.3.75 என்ற அளவுக்கே அதை விற்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே, 4 அணா சேர்த்து விற்பதைக்கூடக் குறைத்துத்தான் விற்றுக் கொண்டிருக்கிறோம்.

இப்படி, இந்த விநியோக முறைகள் இருக்கின்றபோது, 1992-93 ஆம் ஆண்டு அரிசியினுடைய விலை, அவர்களுடைய ஆட்சியிலே, சாதாரண இரகம் 2 ரூபாய் என்றும்; மத்திய தர இரகம் 3 ரூபாய் என்றும்; உயர் தர இரகம் 3 ரூபாய் 75 காசுகள் என்றும் வழங்கினார்கள். 1993-94 ஆம் ஆண்டிலே, சாதாரண இரகத்தையே 3½ ரூபாய்க்குக் கொண்டு போனார்கள். நல்ல இரகம். மத்திய தர இரகம் இவற்றை 4¾ ரூபாய் என்ற அளவிலே உயர்த்தினார்கள். அரிசியினுடைய விலை உயர்வு என்பது, இப்படி 2 ரூபாய்க்கு விற்கின்ற அரிசியை 3¾ ரூபாய்க்கு விற்கலாம் என்றால், அரிசியினால் அதிகமான அளவுக்கு அரசுக்கு ஆதாயம் வந்துவிடும் என்றல்ல; பொது விநியோகத் திட்டத்திலே பல சங்கடங்கள் இருக்கின்றன. சாதாரண இரக அரிசி 17 கிலோ வாங்க வருகின்ற மக்கள் 17 கிலோவை வாங்கிக்கொண்டு, 3 கிலோவை வாங்காமல் செல்லுகிறார்கள். அப்படி வாங்காமல் செல்லுகின்ற அரிசி, ஒன்று மக்களுக்குப் போக வேண்டும், அல்லது அந்தப் பணம் அரசிடம் இருக்க வேண்டும். அது இடைத்தரகர்களுக்குப் போய்விடக்கூடாது என்ற நோக்கத்தோடு சில நடவடிக்கைகளை எடுத்தோம். தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்தபோதுதான், இந்தப் புதிய திட்டத்தை உருவாக்கலாம் என்ற எண்ணமே வந்தது.

இதிலேகூட நாம் தொடர்ந்து பார்ப்போமேயானால், 1996-97 ஆம் ஆண்டு விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு, குறுவை நெல்லைத்தான் சாதாரண இரக நெல்லாகக்

கொடுக்கிறோம்—6 இலட்சம் டன் கொள்முதல் செய்திருக்கிறோம். 1997-98-லே 44 ஆயிரம் டன்தான் கொள்முதல் செய்திருக்கிறோம், இணைக் கொள்முதலிலே. இந்த ஆண்டு 1 இலட்சத்து 56 ஆயிரம் டன் கொள்முதல் செய்திருக்கிறோம். அரிசி இருக்கின்றபோதெல்லாம் 2 ரூபாய் விலையில் வழங்குவதிலே இந்த அரசு எப்போதும் ஆர்வம் காட்டித்தான் வந்திருக்கிறது. ஆனால், அரிசி இல்லை என்றபோது ஓர் அரசாணையை 13-12-1996-லேயே வெளியிட்டிருக்கிறது. 2 ரூபாய் அரிசி இல்லை என்றால் ரூ.3.75-க்கு உள்ள அரிசியை விற்கலாம் என்று வெளியிட்டிருக்கிறது. அந்த வகையிலேதான் இப்போது இந்த அரிசி ரூ.3.75. அதுவும் சாதாரண இரக அரிசி இல்லை என்றாலும், அதைச் சீர்படுத்தி மறுபடியும் ஒரு தீட்டு தீட்டி நல்ல அரிசியாக வழங்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

கருப்பு அரிசியைத் தரக்கூடாது என்று சொல்லி ஏற்கெனவே 50,000 டன் ஏலம் விட்டு வெளியிலே விற்றிருக்கிறோம். கடந்த வாரம் கூட முதலமைச்சர் அவர்கள் உத்தரவு தந்திருக்கிறார்கள். கருப்பு அரிசியாகக் கொடுக்கக்கூடாது, நல்ல அரிசியாகத் தரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர், சங்கரநயினார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அரிசியை எங்களிடம் காண்பித்தார். ஒரு கடையிலே அரை மூட்டையிலே இருந்து அரிசியை எடுத்திருக்கிறார். இன்னொரு கடையிலே புதிதாகத் திறக்கப்பட்ட கடையினுடைய அரிசி என்று எடுத்து இருக்கிறார். இரண்டு இரகமும் அவர் தந்த இரகம்தான். பத்திரிகை நிருபர்கள் வேண்டுமானாலும் பார்க்கலாம். இதில் ஏதாவது கோளாறு இருக்கிறதா என்பதை நீங்கள்தான் பார்த்துச் சொல்ல வேண்டும். உரிய முறையிலே இந்த விநியோகத் துறையைப் பொறுத்த அளவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிகக் கவனம் எடுத்து எங்களுக்கு . . . . .

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இரண்டு இரகங்களும் ஒன்றுதான், ஆனால் விலை வித்தியாசப்படுகிறது என்றுதான் எங்கள் கட்சி உறுப்பினர் கூறினார்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** அதனால் அந்த 2 ரூபாய் அரிசியை......





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் பேசிக் கொள்ளுங்கள். நான் எதற்கு இங்கே தலைவராக இருக்கிறேன்?

**திரு. சொ. கருப்பசாமி:** விலை வித்தியாசமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விலை வித்தியாசமாக இருக்கிறது என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** இல்லை, இல்லை. நம்முடைய முதல்வர் அவர்கள் இதிலே அதிக கவனம் எடுத்து எங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறார்கள். தரமான அரிசியை 20 கிலோவும் ரூ.3.75 என்ற அளவிலே தரவேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதைப்போலத்தான் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை. திரு. வி.கே. லட்சுமணன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,......

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** 2 ரூபாய் அரிசி இப்போது போடப் போகிறீர்களா, இல்லையா? அதுபற்றி ஒன்றுமே விளக்கம் சொல்லவில்லையே! 2 ரூபாய்க்கு 3 கிலோ அரிசியைப் போடப் போகிறீர்களா, இல்லையா?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உணவு அமைச்சர் அதுபற்றி விளக்கமாகக் கூறியிருக்கிறார். 2 ரூபாய் அரிசி இருந்தால்தான் போடமுடியும். இல்லாதபட்சத்தில் 2 ரூபாய் அரிசி இல்லை என்று கூறி, 17 கிலோவோடு நிறுத்தி விடக்கூடாது. தேவைப்பட்டால், மேலும் 3 கிலோ அரிசி வாங்கிக்கொள்ளுங்கள். 20 கிலோ வாங்கிக் கொள்ளுங்கள். ஆனால், அந்த 3 கிலோவிற்கும் ரூ.3.75 தான் கிலோவிற்குத் தரவேண்டுமென்று ஓர் ஏற்பாடு. அந்த ஏற்பாடுதான் தொடரும்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** இந்தப் பதிலில் திருப்தி இல்லாததால் நாங்கள் வெளிநடப்புச் செய்கின்றோம்.

(தமிழ் மாநில காங்கிரஸ், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய லீக், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்),

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1999 நவம்பர் 22

புதிய தமிழகம் ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும், எக்கட்சியையும் சாராத உறுப்பினர் திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் ஆகியோரும் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, நான் மீண்டும் இந்த அறிவிப்பின் மூலமாக நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேற்கு வங்கத்தில் ஒரு கிலோ அரிசியினுடைய விலை, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு 5 ரூபாய், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு 10 ரூபாய் 40 காசு. மேற்கு வங்கம் கம்யூனிஸ்டுகள் ஆட்சி நடத்துகின்ற மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி) கர்நாடகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு கிலோ அரிசி 3 ரூபாய் 50 காசு. வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு 9 ரூபாய் 80 காசு.

கேரளாவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு கிலோ அரிசி 3 ரூபாய் 90 காசு. வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு 9 ரூபாய் 60 காசு. கேரளா, க்ம்யூனிஸ்டுகள் ஆட்சி நடத்துகின்ற மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆந்திராவில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ.3.50; வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு 9 ரூபாய் 50 காசு. எனவே, வறுமைக் கோட்டிற்குக் கீழே, மேலே என்று வித்தியாசப்படுத்தி 5 ரூபாய், 10 ரூபாய் என்று அண்டை மாநிலங்களில் எல்லாம் அரிசி வியாபாரம் ரேஷன் கடைகளிலே நடக்கும்போது, தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ.2.00, மேலே உள்ளவர்களுக்கு ரூ.3.75 என்ற வீதத்திலே தரப்படுகின்றது. நம்முடைய அருமை நண்பர் சந்தானம் அவர்களும், அதைப்போலவே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் கணேசன் அவர்களும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

இந்த வறுமைக் கோட்டையே எடுத்துவிட்டு நீங்கள் தருகின்றீர்களே, அதைப்பற்றி யோசிக்கலாம் என்று நண்பர் சந்தானம் அவர்கள் குறிப்பிட்டார். அதைப்பற்றி யோசிப்பதாக இல்லை. அதற்காகத்தான் முதலில் மூன்று வண்ணத்திலே கார்டுகள் போடுவதாக இருந்தோம். பிறகு அதை மாற்றி இரண்டு வண்ணக் கார்டுகளை வைத்திருப்பதற்குக் காரணமே, வறுமைக் கோடு, வறுமைக் கோட்டிற்கு மேலே என்றெல்லாம் நாம் பிரித்துப் பார்ப்போமேயானால், அதிலே தவறுகள்



1999 நவம்பர் 22] [கலைஞர் மு. கருணாநிதி]

நடைபெறக்கூடும் என்பதற்காகத்தான். வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்கள், கீழே என்று சொல்லிக் கொண்டு வருவார்கள், கீழே உள்ளவர்கள் இன்னும் கீழே என்று சொல்லிக்கொண்டு போவார்கள்.

அதனால் பெரும் பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் 3.75 ரூபாய் என்பது, 20 கிலோ அரிசிக்கு 3.75 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறோம். இதற்கே 1400 கோடி ரூபாய் மானியம் அளிக்கின்றோம். இதற்கு மேலே மானியம் அளிப்பது இயலாது. ஏனென்றால், இந்த மானியங்களை நிறுத்த வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவருக்கு அடுத்து அமர்ந்திருக்கிற நண்பர் சொக்கர் அவர்கள் பல முறை இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். 1400 கோடி ரூபாய்க்கு மேல் மானியம் வழங்க இந்த அரசால் இயலாது.

(சில வினாடிகள் மின்சாரம் தடைப்பட்டது. அந்த நேரத்தில், வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் சத்தமிட்டனர்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்புச் செய்த மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் தரத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்று, பேரவைத் தலைவர் என்ற முறையிலே நான் ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. வி.கே. லட்சுமணன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று மூன்றாவது முதல் இருநூற்று ஏழாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. வ. வேலுசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

[1999 நவம்பர் 22

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது முதல் தொண்ணூற்று எட்டாவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (இ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. ஏ. ராசேந்திரன், சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர்.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினான்காவது முதல் பதினாறாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 5. அறிவிப்பு

### தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்."

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1999 நவம்பர் 22]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (எட்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1999

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

[ 1999 நவம்பர் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(இ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1999**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கொடைகள் (தனி வகைமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.



1999 நவம்பர் 22]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-30

## 7. மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 1999-2000 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1998-99, விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது விவாதம். இப்போது மணி 11-30 ஆகின்றது. 12-30 மணிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இங்கே பேச இருக்கின்றவர்கள் 6, 7 பேர். ஆளுக்கு 7 நிமிடங்களுக்கு மேல் பேச அனுமதிக்க முடியாது என்று சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களை முதலில் பேச அழைக்கின்றேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டிற்கான மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை விவர அறிக்கையில் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். புதிய நூற்றாண்டை நோக்கிச் செல்கின்ற நாம் மின்சாரத் துறையிலே ஒரு புரட்சியை உண்டுபண்ண வேண்டுமென்று விரும்புகிறோம். ஆனால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற அந்த அறிக்கை ஒரு புதிய நூற்றாண்டிற்கு இட்டுச் செல்கின்ற அறிக்கையாக எங்களுக்குத் தெரியவில்லை. ஏனென்றால், இந்த விவர அறிக்கையிலே புதிய சிந்தனைகள் இல்லை; புதிய திட்டங்கள் இல்லை;

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

தமிழகத்தை 21 ஆம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்லக்கூடிய இலக்கும் அதிலே இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம். புதிய மின் திட்டங்கள் எதுவுமே அறிவிக்கப்படவில்லை. கடந்த 1991 ஆம் ஆண்டிலிருந்து இதே சட்டப் பேரவையில் ஒவ்வொரு மின்சாரத் துறை அமைச்சரும் புதிய திட்டங்களை அறிவித்திருக்கிறார்களேயொழிய எந்தத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை என்பதனை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஆயிரம் மெகாவாட், 10 ஆயிரம்

[திரு. ச. அழகிரி] [1999 நவம்பர் 22

மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம் என்று விவர அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் வந்திருக்கிறது. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் வந்து இந்த 3-1/2 ஆண்டுக் கால ஆட்சியிலே 196 மெகாவாட் மின்சாரத்தைத்தான் ஜி.எம்.ஆர். வாசகி என்கிற ஒரு தனியார் நிறுவனம் தொடங்கியிருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டிலே மிகுந்த ஆர்ப்பாட்டத்தோடு இந்தப் பேரவையிலே நீங்கள் அறிவித்தீர்கள். 100 மெகாவாட் திறன்கொண்ட 20 மின் நிலையங்களை நாப்தாவை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்போகிறோம் என்று சொன்னீர்கள். இரண்டு ஆண்டுகளிலே உற்பத்தி தொடங்கப்படும் என்று சொன்னீர்கள். நாப்தாவை ஏன் பயன்படுத்துகிறோம் என்று சொன்னால், நிலக்கரியின் மூலமாகவோ, பழுப்பு நிலக்கரியின் மூலமாகவோ மின்சார நிலையங்களை அமைப்பதற்கு நீண்ட காலமாகும். நாப்தா மூலமாக அமைத்தால் இரண்டு ஆண்டுகளிலே மின்சாரத்தை உற்பத்தி செய்து இந்தக் கூட்டத்தொடரிலே, அதாவது இந்த ஐந்து ஆண்டுக்குள்ளாகவே மின்சாரத்தை நாங்கள் வழங்குவோம் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அந்தத் திட்டங்கள் என்னவாயிற்று என்பதனை உங்களைப் பார்த்து கேட்க நான் ஆசைப்படுகிறேன். அந்தத் திட்டங்கள் ஒன்றுகூட நடைபெறவில்லை. அப்போது மத்தியில் உங்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம்தான் இருந்தது. ஐக்கிய முன்னணி அரசாங்கத்திலே உங்களுடைய அமைச்சர் டி.ஆர். பாலுதான் பெட்ரோலியத் துறையை வைத்திருந்தார். கையிருப்பு நாப்தா எவ்வளவு இருக்கிறது என்பது அவருக்குத் தெரிந்திருக்கும். அவரோடு அரசாங்கத்திற்குத் தொடர்பு இருந்தும்கூட, கையிருப்பில் எவ்வளவு நாப்தா இருக்கிறது, எவ்வளவு வழங்க முடியும், எத்தனை மின் திட்டங்களை அமைக்க முடியும் என்பதனை மாநில அரசும் மத்திய அரசும் இணைந்து ஏன் செயலாற்றவில்லை; அந்தத் திட்டங்கள் எதனால் தோல்வி அடைந்தன; என்ன காரணத்தினால் அந்தத் திட்டங்களை அமல்படுத்த முடியவில்லை என்பதனை அமைச்சர் அவர்கள் தன்னுடைய விளக்க உரையிலே தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல, சமீபத்தில் வீட்டு மின் இணைப்பிற்கான கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். 800 ரூபாய் கொடுத்தால் புதிய மின் இணைப்பு கிடைப்பதற்கான வாய்ப்பு இருந்தது. ஆனால், இன்றைக்கு, 1850 ரூபாய் கொடுத்தால்தான் புதிய மின் இணைப்பு கிடைக்கும்.



1999 நவம்பர் 22] [திரு. ச. அழகிரி]

ஏறக்குறைய, 100 சதவிகிதத்திற்கு மேல் விலை உயர்வு அதிகமாயிருக்கிறது. மத்திய தர வர்க்கத்தவர்களை இது எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதை திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏழை மக்களுடைய மின்சாரக் கனவுகளை நீங்கள் கலைத்து விட்டீர்கள் என்பதை மிகுந்த வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த உத்தரவிலே எப்படி கையெழுத்திட்டார்கள் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. ஏனென்றால், இரத்தக் கண்ணீர் வடிக்க வேண்டிய அளவிற்கு வரிச் சுமையை அதிகமாக ஆக்கியிருக்கிற ஓர் உத்தரவு இது. தன்னுடைய இதயத்தை கழற்றி வைத்துவிட்டுத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கையெழுத்திட்டிருக்க முடியும் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக மின் இணைப்பிற்கான கட்டண உயர்வை வாபஸ் பெற வேண்டுமென்று அழுத்தந்திருத்தமாக நாங்கள் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல, நம்முடைய மின்சார வாரியம் ஒரு தொலைநோக்கு இல்லாமல் செயல்படுகிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. 1998-1999 ஆம் ஆண்டில் நிலக்கரியினுடைய அடிப்படை விலை 913 கோடி ரூபாய். ஆனால், அந்த நிலக்கரியைக் கொண்டு வருவதற்கான போக்குவரத்துச் செலவு 1,077 கோடி ரூபாய். நிலக்கரியினுடைய அடிப்படை விலையைவிட, நிலக்கரியைக் கொண்டுவருவதற்கான செலவு பல மடங்கு அதிகமாக இருக்கிறது. ஒரு திறமையான நிர்வாகச் செயல்பாடு இல்லை என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணத்தை நாம் கூறமுடியாது.

முற்பகல் 11-35

'கையிலே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறார் போல்' என்று தமிழகத்திலே ஒரு பழமொழி சொல்லுவார்கள். தமிழகத்திலே நமக்கு பழுப்பு நிலக்கரி, தமிழகத்தினுடைய மின்சாரத் தேவைகளை எல்லாம் நிறைவேற்றுகின்ற அளவிற்கும், அதற்கு மேலும் நம்மிடையே இருக்கிறது. ஆனால், அப்படி இருந்தும், மாநில அரசாங்கம் புதிய மின் திட்டங்களை நெய்வேலியைச் சுற்றியோ அல்லது நெய்வேலியிலோ போடாமல், அதிகமான போக்குவரத்துச் செலவிற்கு ஆட்படக்கூடிய திட்டங்களையே போட்டு இருக்கிறீர்களே, அதனை

மாற்றி, போக்குவரத்துச் செலவிற்கே வழியில்லாமல் நெய்வேலியிலும், நெய்வேலியைச் சுற்றியும் பழுப்பு நிலக்கரியின் மூலமாக புதிய மின் திட்டங்களைக் கொண்டுவருவோமேயானால், இதைப்போல பல ஆயிரம் கோடி ரூபாய்களை நாம் மிச்சப்படுத்த முடியும் என்பதனை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல மின்சார வாரியத்தை நவீனமயமாக்க வேண்டும். பிரச்சார பாரதி இருக்கிறது; தேர்தல் கமிஷன் இருக்கிறது; அதைப்போல ஒரு சுயச்சார்பு அமைப்பாக மின்சார வாரியத்தை மாற்ற வேண்டும். மின்சார வாரியம் என்பது பழமை நிறைந்த அதிகாரிகளால் நிரப்பப்பட்ட அதிகார வர்க்க சிந்தனை உடைய ஒரு Hierarchy. அவர்களிடம்தான் அது மாட்டிக் கொண்டிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றிவிட்டு தொழில் நுட்ப வல்லுநர்கள், (Technocrats) விவசாயத் துறையைச் சார்ந்த வல்லுநர்கள், தொழில் துறையைச் சார்ந்த வல்லுநர்கள்—இவர்களை வைத்து ஒரு புதிய மின்சார வாரியத்தை அமைப்பதன் மூலமாக, சுயச்சார்புடைய அமைப்பாக அதனை மாற்றுவதன் மூலமாக, சிறந்த நிர்வாகத்தை நம்மால் வழங்க முடியும் என்பதனை இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தன்னுடைய விவர அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மின்சார வாரியம் தன்னுடைய இலக்குகளை வெற்றிகரமாக நோக்கி, நிறைவேற்றி இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அப்படிச் சொல்கிறார்களேயொழிய, மின்சார வாரியம் தன்னுடைய இலக்குகளை எய்துவதற்கு எந்தவிதமான வெற்றிகரமான பாதையையும் தேர்ந்தெடுக்கவில்லை. உதாரணமாக, 30-9-1999 வரை, 6 மாத காலத்திலே 40 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும். ஆனால், மின்சார வாரியம் 10,920 பம்பு செட்டுகளுக்குத்தான் மின்சாரத்தை வழங்கி இருக்கிறது; மூன்றில் ஒரு பாகம்தான் வழங்கி இருக்கிறீர்கள். இன்னும் உங்களுக்கு இருப்பது 6 மாத காலம். கடந்த 6 மாத காலத்திலே செயல்படாத மின்சார வாரியம், வருகின்ற 6 மாத காலத்திலே எப்படிச் செயல்படும் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னும் சொல்லப்போனால், மழைக்காலம் வருகிறது. எனவே, உங்களுடைய செயல்திறன் குறையுமேயொழிய கூடுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, அதிலே ஒரு வெற்றிகரமான தோல்வியை நீங்கள் எய்த இருக்கிறீர்களேயொழிய, நீங்கள் உங்களுடைய இலக்கை எய்தவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து.

அதேபோல, குடிசைகளுக்கு 40 ஆயிரம் மின் இணைப்புகள் நீங்கள் தர வேண்டும். ஆனால், நீங்கள் வழங்கி இருப்பதோ 14,011 மின் இணைப்புகள்தான். அதிலும் தோல்வியைத்தான் மின்சார வாரியம் தழுவி இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே



கவனம் செலுத்தி, குறிப்பிட்ட காலத்திலே பம்பு செட்டுகளுக்கும், குடிசை வீடுகளுக்கும் மின் இணைப்பை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மின்சார வாரியத்திலே அடிக்கடி தலைவர்கள் மாற்றப்படுகிறார்கள். கடல் போன்ற ஒரு துறை அது. ஒரு அதிகாரி அங்கே வந்து 6 மாத காலம்தான் இருக்க முடிகிறது என்று சொன்னால் அந்தத் துறையினுடைய செயல்பாட்டை அவர் புரிந்துகொண்டு, அதிலே சீர்திருத்தங்களைச் செய்ய ஆரம்பிக்கிறபொழுது, அவர் மாற்றப்பட்டுவிடுகிறார். எனவே, அந்த நிலையைப் போக்க வேண்டும். ஒரு மின்வாரியத் தலைவர் வருகிறார் என்றால், குறைந்தபட்சம் 3 ஆண்டுக்காலம் அவரை அங்கு அனுமதிக்க வேண்டும். அவருக்குச் சுதந்திரத்தை வழங்க வேண்டும். அப்படிச் செயல்பட்டால், அதிலே நாம் சில முன்னேற்றங்களைக் காண முடியுமேயொழிய 6 மாதத்திற்கு ஒரு Chairman என்பது முறையாகாது என்பதனை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். (மணி அடிக்கப்பெற்றது)

அதேபோல ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய பிரச்சினை பற்றி சென்ற கூட்டத் தொடரிலே நான் பேசுகிறபொழுது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே ஒரு உறுதிமொழி தந்தார்கள். நான் அவர்களுக்கு அளித்த ஒரு தனிப்பட்ட கடிதத்திலேகூட எழுதியும் கொடுத்தார்கள். ஆனால், அமைச்சருடைய உறுதிமொழிகளைக்கூட துறை அதிகாரிகள் காப்பாற்றுவது கிடையாது. ஒப்பந்தத் தொழிலாளர்கள் உற்பத்தி முனையிலே இருக்கிறவர்களை Generation side-ல் நீங்கள் நிரந்தரம் செய்து இருக்கிறீர்கள். ஆனால் Operation side-ல் இருக்கிறவர்களை நீங்கள் பதவி நிரந்தரம் செய்யவில்லை. அவர்களுக்கு bonus வழங்கவில்லை. எனவே அவர்களுக்கும் நீங்கள் bonus தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதிலே ஒரு குறைபாட்டைச் சொல்லுகிறார்கள். எந்த அளவிற்கு அது சரியென்று எனக்குத் தெரியாது. தொ.மு.ச. சார்பாக, அதாவது திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் சார்புடைய தொழிற்சங்கத்தின் சார்பாக வருகிறவர்கள் மட்டுமே நிரந்தரம் செய்யப்படுகிறார்கள், அவர்களுக்கு bonus வழங்கப்படுகிறது. மற்றவர்களுக்கு அப்படி வழங்கப்படுவதில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், எந்தத் தொழிற்சங்கம் என்று பார்ப்பது இல்லை. அது CPI தொழிற்சங்கமாக இருந்தாலும், C.P.M. தொழிற்சங்கமாக இருந்தாலும், அல்லது அ.தி.மு.க.

தொழிற்சங்கமாக இருந்தாலும், தி.மு.க. தொழிற்சங்கமாக இருந்தாலும், எல்லா தொழிற்சங்கங்களையும் ஒரே மாதிரியாகத்தான் பாவிக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது ஆதாரமற்ற குற்றச்சாட்டு.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. அமைச்சர் எங்களைக் கவர்ந்த அளவிற்கு அல்லது அமைச்சருடைய செயல்பாடு அளவிற்கு, மின்சார வாரியம் எங்களைக் கவரவில்லை, செயல்படவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. எனவே, அந்தக் குற்றச்சாட்டினுடைய தன்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஓர் ஆலோசனை. மின்சார வாரியத்தினுடைய hierarchy அதிகார முறை. உதாரணமாக ஒரு Section இருக்கிறது. அந்த Section-ல் ஓர் A.E. இருக்கிறார், இரண்டு Foreman-கள் இருக்கிறார்கள், ஒரு Commercial Assistant இருக்கிறார், ஒரு Commercial Inspector இருக்கிறார், ஒரு Line Inspector இருக்கிறார். ஆக, 6 பேர் இருக்கிறார்கள். ஒரு குழி தோண்ட வேண்டுமென்றால் அல்லது ஒரு மரத்தில் ஏற வேண்டுமென்றால் ஏறுவதற்கு ஓர் ஆள் தேவை. அவர் மட்டும் சொல்வது இல்லை. இந்த 6 பேர் போய் நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் காரியம் நடக்கவில்லை. என்ன காரணம் என்றால், மரம் ஏறுவதற்கு ஆள் வரவில்லை, குழி தோண்டுவதற்கு ஆள் வரவில்லை என்பதுதான் பிரச்சினை. நம்முடைய இந்த அமைப்பு எப்படியிருக்கிறது என்றால் உயர் அதிகாரிகள் நிரப்பப்பட்டிருக்கிறார்கள்; உயர் அதிகாரிகளுடைய இடங்கள் அதிகமாக்கப்பட்டு இருக்கின்றன. அல்லது காலியிடங்கள் இல்லாமல் நாம் பார்த்துக்கொள்கின்றோம். ஆனால் கீழ் நிலையில் இருக்கிற Wireman, Helper—இப்போதெல்லாம் Helper என்பவரே கிடையாது. களப்பணியாளர்கள் கிடையாது. களத்தில் அதிகமாக யார் செயல்படுகிறார்களோ அவர்கள் இல்லை. யார் மேற்பார்வையிடுகிறார்களோ அவர்கள் மிக அதிக அளவில் இருக்கிறார்கள். இதனை பல இடங்களிலே நாங்கள் பார்த்திருக்கிறோம். எனவே அந்தக் குறையைத் தவிர்த்தால் பொது மக்களுக்கு உடனடியாக சேவை கிடைக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

அதேபோல, மின்சார வாரியம் ஒரு தந்திரமான ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. பல பகுதிகளை dark area என்று அறிவித்திருக்கிறார்கள். காரணம் கேட்டால், அங்கே கீழே நிலத்தடி நீர் கிடையாது, எனவே மின் இணைப்பைத் தர மாட்டோம் என்று சொல்கிறார்கள். என்னுடைய



பகுதியிலேகூட, கீரப்பாளையம் ஒன்றியம், எங்களுடைய தொகுதியெல்லாம் dark area-விலே இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் ஸ்ரீமுஷ்ணத்திலே ஒரு மின்சார நிலையத்தினை அமைக்கவிருப்பதாக விவர அறிக்கையிலே அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு ஒரு நாளைக்கு 2 இலட்சம் லிட்டர் கேலன் தண்ணீர் தேவைப்படுகிறது. 2 லட்சம் லிட்டர் கேலன் தண்ணீர் கிடைக்கும் இடத்தை dark area என்று மின்சார வாரியம் அறிவித்திருக்கிறதே, அது எப்படி சாத்தியம் என்று நான் அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்கு நிலத்தடி நீர் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, dark area என்பதை மின்சார வாரியம் நிர்ணயிப்பதில்லை. பொதுப்பணித் துறையினுடைய பொறியாளர்கள் தமிழகம் முழுவதும் சுற்றி எதிர்காலத்திலே தமிழ்நாட்டிற்கு நீர்வளம் தேவைப்படுமானால் இந்தந்த இடங்களை நாம் dark area என்று அறிவிக்க வேண்டுமென்று அவர்கள் ஓர் ஆணை பிறப்பித்து மின்சார வாரியத்திற்கு அனுப்பி இந்தப் பகுதிகளிலே புதிதாக நீங்கள் மின் இணைப்பு கொடுக்காதீர்கள் என்று எங்களுக்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதை மின் வாரியம் பின்பற்றுகிறது.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால் மின்சார வாரியம் அவர்களைப் பார்த்து கேள்வி கேட்கலாம். காட்டுமன்னார்கோவில் தாலுகா, சிதம்பரம் தாலுகாவிலே ஒரு மின்நிலையம் அமைப்பதற்கு ஒரு நாளைக்கு 2 இலட்சம் லிட்டர் கேலன் தண்ணீர் கொடுப்பதற்கு அந்தப் பகுதி தயாராக இருக்கிறபோது அதை எப்படி dark area என்று அறிவித்தீர்கள் என்பதனை மின் துறை கேட்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல நெய்வேலியிலே Zero unit. அதுகுறித்து 1996 ஆம் ஆண்டிலேயே M.O.U. எழுதப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் இறுதியாகியிருக்கிறது. அதனுடைய நிலை என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும். டாடா நிர்வாகம் மகாராஷ்டிராவிலே ரூ.1.30-க்கு மின்சாரத்தை விற்பனை செய்யத் தயாராக இருக்கிறார்கள். பத்திரிகைகளிலே அந்தச் செய்தி வந்திருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். ஆனால் தமிழகத்திலே மட்டும் Zero unit-க்கு நாம் ரூ.2.80 என்று ஒப்பந்தம் போட்டு இருக்கிறோம். அந்த அளவிற்கு அதிகமாக ஒப்பந்தம் போட வேண்டிய அவசியம் என்ன? மகாராஷ்டிராவிலே டாடா கம்பெனி ரூ.1-30-க்கு

மின்சாரம் தருகிறபோது, எல்லா infrastructures-ம் உள்ள நெய்வேலி Zero unit-ல் ரூ.2.80-க்கு ஒப்பந்தம் தேவைதானா? நாம் அதை மறுபரிசீலனை செய்திருக்கக் கூடாதா என்பதனை மின்சார வாரியத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகின்றேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ச. அழகிரி:** அடுத்ததாக, கல்லணைக் கால்வாயின் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் வருவதில்லை. எனவே, காவிரி டெல்டாவுக்கு நாம் எப்படி சலுகைகளை அளிக்கிறோமோ அதேபோல கல்லணைப் பகுதியினுடைய கடைமடை பகுதிகளுக்கும் மோட்டார் பம்புசெட்களுக்கு மின் இணைப்பு வழங்குகிறபோது சலுகைகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, நண்பர் அழகிரி அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் இங்கு இல்லாவிட்டாலும்கூட கேட்டுக்கொண்டு இருந்தேன். இல்லாவிட்டாலும் கேட்பேன் என்பது அவருக்குத் தெரியும். அவர் சொன்னார், 'புதிய மின் இணைப்புகளுக்கு இணைப்புத் தரும்போது மின் கட்டண உயர்வு ஏற்பட்டிருக்கிறது. இதில் எப்படி முதலமைச்சர் இருதயத்தைக் கழற்றி வைத்துவிட்டு கையெழுத்துப் போட்டார்' என்று கேட்டார். எனக்கு இருதயம் இருப்பதை ஒத்துக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தால்தானே கழற்றி வைக்க முடியும். நான் அதற்காக நன்றி கூறிக்கொள்கிறேன். ஆனால் ஒன்று, எதையும் தெளிவாக; முற்றாக, படித்து, உணர்ந்து, பின்னர் பேசக்கூடிய அழகிரி அவர்கள் இதைத் தெரிந்துகொள்ளாமல் பேசியதற்காக வருத்தப்படுகிறேன். மின்சார வாரியம் முழுவதும் Autonomous Board ஆக இயங்குகிறது. இது Electricity Board போட்ட உத்தரவே தவிர, நான் போட்ட உத்தரவு அல்ல. இதில் கட்டணம் அதிகமா, அல்லவா என்பதைப் பற்றியெல்லாம் துறையின் அமைச்சர் விளக்குவார் என்று மாத்திரம் கூறிக்கொள்கிறேன்.



**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நானும் அதை அறிவேன். ஆனால் முதலமைச்சருடைய வாயில் இருந்து இப்படி ஒரு பதிலை நான் எதிர்பார்த்துத்தான் சொன்னேன். (சிரிப்பு) எல்லாவற்றுக்கும் முதன்மையாக இருப்பவர் முதலமைச்சர்தான். மின்சார வாரியம் அப்படி போட்டிருந்தாலும்கூட அந்தக் கோப்பை வாங்கி - இப்பொழுதுகூட காலம் கடந்துவிடவில்லை- அந்தக் கோப்பை திருத்தி பழையபடியே 800 ரூபாய் கட்டினால் போதும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களானால் அதனை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம், அதனை நாங்கள் விரும்புகின்றோம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வாங்கி உடனடியாக மாற்றி இருக்கலாம். அழகிரி போன்றவர்களுக்குப் பேச ஒரு வாய்ப்பு வேண்டுமென்பதற்காகத்தான் அதைச் செய்யவில்லை. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டுக்கான மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மற்றும் 1998-99 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் திருத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் நடைபெறும் இந்த விவாதத்தில் என்னையும் பேச அனுமதித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒரு மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்பது எவ்வளவு முக்கியமோ, அதேபோல இன்றைய Computer உலகில் மின்சாரம் என்பது அதைவிட முக்கியமான ஒரு பொருள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இன்றைக்கு, மனிதனுக்குக் கண் எவ்வளவு முக்கியமோ, அதேபோல மின்சாரம் அதிமுக்கியம் என்பது நாடறிந்த உண்மை. அந்த வகையிலே தமிழகத்திலே எவ்வளவோ இடர்ப்பாடுகள் இருந்தாலும், முக்கியமாக இந்த அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் அதேவேளையில், கடந்த காலங்களிலே மின்சாரத் துறையிலே நடந்த சீர்கேட்டையெல்லாம் தடுத்து, தங்குதடையற்ற மின்சாரம் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு பல்வேறு திட்டப் பணிகளையெல்லாம் ஆற்றி வருவதை விளக்கவுரையிலே நாம் காண்கிறோம்.

குறிப்பாக, 1999-2000 ஆண்டில் திட்ட ஒதுக்கீடாக சுமார் 1,303 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கும் வேளையில், மின்சாரம் உற்பத்தி செய்யும் விலை, யூனிட்டுக்கு 257.74 ரூபாய் என்ற நிலையில், 209.00 ரூபாய்க்கு அதை விற்பனை செய்து, சுமார் 48.74 ரூபாய் மின்சார வாரியத்திற்கு நட்டம் என்ற நிலையிலே இன்றைக்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இழப்பீட்டுத் தொகையாக ஏற்றுக்கொண்டு; தமிழகத்திற்கு சீரான, சிறப்பான, ஒழுங்கான மின்சாரத்தை வழங்கி வருவதைக் கண்கூடாக நாமெல்லாம் காணமுடிகிறது.

முற்பகல் 11-50

சுமார் 1,777 கோடி ரூபாய் பற்றாக்குறை இருந்தும், தமிழக அரசின் மூலமாகவும், மற்ற இதரத் திட்டங்களின் மூலமாகவும் அந்தப் பற்றாக்குறையைக் குறைத்து, ரூ.630 கோடி பற்றாக்குறை இருப்பினும், அந்தப் பற்றாக்குறையையும் சமாளித்து, இந்தியாவில் எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை சீராக வழங்கும் இந்த நேரத்தில், கிராமப்புறத்தில் இருக்கும் விவசாயிகளெல்லாம்,

"காடு வெளஞ்சென்ன மச்சான், நமக்கு
கையுங் காலுந்தானே மிச்சம்"

என்று இருக்கும் நிலையில், அவர்களது ஏக்கப் பெருமூச்சையெல்லாம் தீர்க்கும் விதத்திலே,

"எங்களுக்கும் காலம் வரும்;
காலம் வந்தால் வாழ்வு வரும்;
வாழ்வு வந்தால் அனைவரையும் வாழவைப்போமே"

என்ற நம்பிக்கையைக் கருதிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், விவசாயிகளின் கண்ணீரைப் போக்க, இலவச மின்சாரத் திட்டத்தை அறிவித்து, மத்திய அரசின் எத்தனையோ இடர்பாடுகள் இருந்த நிலையிலேயும், தொடர்ந்து உழவனுக்கு இலவச மின்சாரத்தை வழங்கியே தீருவோம் என்று, அண்ணா கண்ட கனவை நனவாக்கி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் அரசாக, கலைஞர் அரசு திகழ்கிறது என்பதை இந்த நேரத்திலே மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.



இங்கே நமது மரியாதைக்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் அழகிரி அவர்கள் பேசும்போது, மின் துறை அமைச்சர், எதிர்க்கட்சிகளையும் அரவணைத்து, அவர்கள்மேல் அன்பு கொள்ளும் மாண்புமிகு மின் துறை அமைச்சர் என்று குறிப்பிட்டார். எதிர்க்கட்சிகளை மட்டுமல்ல, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களையும், எதிரிக் கட்சியைச் சேர்ந்தவர்களையும் அரவணைக்கும் மின்சாரக் கண்ணனாக நமது மாண்புமிகு மின் துறை அமைச்சர் செயல்படுகிறார் என்பதை இந்தநேரத்திலே நான் மீண்டும் அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த காலங்களிலே புதிய மின் திட்டங்க்ள் எதுவும் இல்லாத நிலையிலே, தொடங்கப்பட்ட மின் திட்டங்களையும் சரியாகப் பராமரிக்க முடியாத நிலையிலே, ஒழுங்கான மின்சாரம் கிடைக்காமல் இருந்த நிலையிலே, இப்போது தொடர்ந்து பத்திரிகைகள், டி.வி. என்று பார்க்கும்போது, நிலக்கரி ஊழல் என்று நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் சென்ற நிலையையெல்லாம் பார்த்துக்கொண்டு, கடந்த மின் நிலைமைகளையெல்லாம் மாற்றி, ஒழுங்காக மின் துறையைப் பராமரித்து, புதிய மின் திட்டங்களாம் வடசென்னை அனல் மின் திட்டம், கோவில்களப்பால் எரிவாயு சுழலி மின் திட்டம், பெருங்குளம் எரிவாயு சுழலி மின் திட்டம், பார்சன்ஸ் பள்ளத்தாக்கு புனல் மின் திட்டம் என்று பல்வேறு மின் திட்டங்கள் மூலமாகவும், முக்குருத்தி, ஆழியார், பெருஞ்சாணி, திருமூர்த்தி என்பதுபோல, பல்வேறு திட்டங்களின் மூலமாக இந்த ஆண்டு மின் உற்பத்தி தொடங்கப்படும் நிலையில், தமிழக மின் பற்றாக்குறையைச் சமாளிக்க இந்தச் சிறப்பான திட்டங்களையெல்லாம் தீட்டி வருவதை இந்த நேரத்திலே நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

குறிப்பாக, விவசாயிகள் கடந்த காலங்களிலே, நானெல்லாம் கிராமப்புறத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில், பல்வேறு தரப்பினரெல்லாம் மின் கட்டணம் செலுத்தும்போது, எத்தனையோ பேர் ஆடு மாடுகளையும், மனைவி காதில் இருக்கும் தோடு, தொங்கட்டான்களையும், கழுத்திலே இருக்கும் தாலியையெல்லாம்கூட வைத்து மின் கட்டணம் செலுத்திய ஒரு அவல நிலையை நாங்கள் கண்டிருக்கிறோம். கட்டாத நேரத்தில் உடனடியாக மின் துண்டிப்பு ஏற்படும். அது எவ்வளவு பெரிய விவசாயமாக இருந்தாலும் சரி. அது தினமும் நீர் பாய்ச்சுகின்ற நெல் வயலாக இருந்தாலும் சரி. மறுபடியும் ஒரு வாரம், 10 நாட்கள்

[திரு. கு. மனோகரன்] [1999 நவம்பர் 22

காய்ந்த பின்பு, அவர்கள் வேறு ஏதாவது கடன் வாங்கி அந்த விவசாயத்தைச் செய்த நிலையிலே இருந்ததை மாற்றியது, இப்போது கிராமத்திற்குக் கிடைத்த ஒரு பெரிய வரப்பிரசாதமாகும்.

அதேபோல, இப்போது எத்தனையோ திட்டங்கள் தொடங்கப்பட்டிருந்தாலும், எங்களுடைய தருமபுரி மாவட்டத்திலே, ஒகேனக்கல் நீர் மின் திட்டம், மத்திய அரசின் ஆய்விலே உள்ளதாக அறிகிறேன். மாண்புமிகு மத்திய மின் துறை அமைச்சர், அங்கு மின் திட்டம் அமைத்தால் சிறப்பாகச் செயல்படும் என்றும் அறிவித்துள்ளார். இந்த நிலையில், நமது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் தருமபுரி மாவட்டத்திலே ஓடும் ஒகேனக்கல் ஆற்றில், காவிரி ஆற்றிலே புனல் மின் திட்டத்தை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

தமிழகத்திலே குறிப்பாக, இப்போது சில கிராமங்களிலே எல்லாம் 20, 30 ஆண்டுக் காலமாக மின் கம்பிகள் மாற்றப்படாமலும், (மணியடிக்கப்பெற்றது) Trans former-கள் மாற்றப்படாமலும் இருக்கின்றன. உடனடியாகப் பெருகி வரும் மின் தேவையைக் கருதி அவற்றை மாற்றியமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வாண்டின் மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின் மீது நான் சார்ந்துள்ள அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன். தமிழகத்தினுடைய பொருளாதார மேம்பாட்டிற்கும், தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் அத்தியாவசியமானது, அடிப்படையானது என்பதை உணர்ந்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருவதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.



1999 நவம்பர் 22] [திரு. பி.என். வல்லரசு]

இதே சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தொழில் துறையில் தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆனால், இன்றைய நிலைமை என்ன? இன்று தமிழகம் தொழில் துறையில் முதலாவது இடத்தைப் பெற்றுவிட்டது என்று சொல்லக்கூடிய நிலைக்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தை உயர்த்தி இருக்கிறார்கள். இது சாதாரண சாதனை அல்ல. இது ஒரு இமாலய சாதனையாகும். அந்த அளவுக்கு இப்போது தொழில் துறையில் தமிழகம் இந்தியாவிலேயே முதலாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்றால் அதற்கு அடிப்படைக் காரணம் மின்சார உற்பத்தி தமிழகத்திலே கூடுதலாகச் செய்யப்படுகிறது என்பதைத் தவிர வேறு அல்ல. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இப்போது தமிழகத்தை முன்நோக்கிச் எடுத்துச் செல்வதற்கு, தமிழகத்தை இந்தியாவின் முதலிடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் மின்சார உற்பத்தியின் மூலம் அதற்கு உறுதுணை புரிகிறார் என்றால் அது மிகையாகாது. எனவே, அதற்காக அவரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்போது தமிழகத்திற்கு உச்சபட்சமாக ஏறக்குறைய 5000 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது என்றால் இப்போது 7000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு நிலைமையை உருவாக்கி இருக்கிறார்கள். அந்த அளவுக்கு மின்சார உற்பத்தித் திறன் இப்போது பெருகியுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அனல் மின் நிலையங்கள், புனல் மின் நிலையங்கள், அணு மின் நிலையங்கள், தனியார் மின் நிலையங்கள் இப்படி பல்வேறு மின் நிலையங்கள் மூலம் 7000 மெகாவாட் மின்சாரம் இப்போது உற்பத்தி செய்யப்படுகிறது என்றால் இது சாதாரண சாதனை அல்ல. ஆனால், இவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்தாலும், அறிவிக்கப்படாத மின் வெட்டு தமிழகத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது, மிரட்டிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியாது. எனவே, அதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய மின் இணைப்பு வழங்குவதற்கு அரசு வைப்புத் தொகையை அல்லது மின் கட்டணத்தை இரண்டு மடங்கு உயர்த்தி இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான்

கேட்டுக்கொள்கிறேன். ஏழையெளிய மக்களுடைய நன்மையைக் கருதி அதை சரிபாதியாகக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தில் ஏற்படுகின்ற நஷ்டத்தைக் கண்டறிய ஒரு உயர்மட்டக் குழுவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் இந்த மின்சார வாரியத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டத்தைக் கண்டறிந்து அதைச் சரிசெய்வதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மின்சாரத் திருட்டு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அதைத் தடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில் மொத்த மின் திருட்டு எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

இப்போது பெரிய, பெரிய தொழிற்சாலைகள், பெரிய அளவிலே மின்சார பாக்கியை கட்டாமல் வைத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை எவ்வளவு? பெரிய தொழிற்சாலைகள் இலட்சக்கணக்கிலே, கோடிக்கணக்கிலே கட்டாமல் வைத்திருக்கிற மின்பாக்கியை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இதுபோன்ற பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுக்குமேயானால் மின்சாரத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற நஷ்டத்தை ஈடுகட்டலாம் என எண்ணுகிறேன்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதில் 1,000 கோடிக்கு மேலே அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும்கூட, அரசு பெரிய மனதோடு இப்போது விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கி வருவதை நான் பாராட்டுகின்றேன். அன்று மத்திய அரசு மிரட்டியது. மத்திய அரசு, மின்சாரத்தை விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுக்கக்கூடாது என்று தமிழக அரசை மிரட்டிய நேரத்திலேகூட, விவசாயிகள் பக்கம் நின்று, இலவச மின்சாரம் வழங்கிய தமிழக அரசை மீண்டும் நான் பாராட்டுகிறேன்.

நண்பகல் 12-00

இப்போது தமிழக அரசு 10 மணி நேரம் விவசாயிகளுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்கிறது; அதை மீண்டும் 14 மணி நேரம் அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



மின் இணைப்பு, மோட்டார் பம்புசெட்டுகளுக்குப் பெறுவதற்கு விவசாயிகள் 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினால் போதும் என்ற நிலை இருந்தது. அது இப்போது செயல்பாட்டில் இல்லை. 25 ஆயிரம் ரூபாய் செலுத்தினால்தான் அதற்கு முன்னுரிமை என்ற நிலை இப்போது இருக்கிறது. எனவே, 10 ஆயிரம் ரூபாய் செலுத்தினாலும் உண்டு என்ற நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீவன்தாரா கடன் திட்டத்தின் மூலம் கிணறுகள் வெட்டப்படுகின்றன. அதன்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு இலவச மின் இணைப்புத் தருவதைப்போல, பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினருக்கும் இலவச மின் இணைப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பக்கத்தில் இருக்கிற கேரள மாநிலத்திற்கு நாம் மின்சாரம் தருகிறோம்; அரிசி தருகிறோம். அதை வைத்தாவது, நம்முடைய பெரியார் அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்துவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது உசிலம்பட்டி தொகுதியில் விக்ரமங்கலத்திலும் மண்டிக்குண்டிலும் 2 துணை மின் நிலையங்களை உருவாக்க அரசு உத்தரவிட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். இடம் கொடுத்து பல மாதங்கள் ஆகியும், இன்னும் அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. அதை உடனடியாகத் தொடங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

'காலித் கமிஷன்', 16 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கூறியிருக்கிறது. ஆனால், நமது தமிழக அரசு 7,500 பேர்களை மட்டுமே நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கியுள்ளது. மீதி உள்ளவர்களையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கை சம்பந்தமாக கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், இந்தத் தொழில் என்பது ஒரு மிக முக்கியமான தொழில்; ஒரு தாய்த் தொழில் என்றே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், இது பொதுத் துறை மட்டுமல்ல; பொதுப் பயன் துறையாகக்கூட இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

ஏறத்தாழ 42 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்டு இன்று ஏறத்தாழ ஒரு கோடியே 28 இலட்சம் ஆட்கள் இதனுடைய பயனை அனுபவித்துக் கொண்டிருக்கிற இந்த வேளையிலே, இந்தத் துறையைத் தனியார் மயமாக்குவது என்ற இடத்திற்கு எடுத்துச் செல்வது சரிதானா என்பதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், ஏற்கெனவே இந்த அரசு வந்த நேரத்திலே, வட சென்னையிலே ஒரு அனல் மின் நிலையத்தையும், அதுபோன்று மத்தியிலும் சில பகுதிகளிலே இதுபோன்ற சில திட்டங்களை உருவாக்க வேண்டுமென்றும் சொன்னவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், மிகவும் வருந்தத்தக்கது என்னவென்றால், நீங்கள் பொறுப்பேற்ற காலத்திலேயிருந்து, கடந்த மூன்றரை ஆண்டுக் காலத்திலே, தமிழக அரசால், பொதுத் துறையிலே எந்தத் திட்டமும் எடுக்கப்படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

இன்று ஒரிசாவைப் பொறுத்தவரையில், அதுபற்றி இந்த Policy Note-லே கூறப்பட்டிருக்கிறது. ஒரிசாவில் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம் failure என்ற செய்தி வந்திருக்கிறது என்பது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்குக்கூட நன்கு தெரியும். சமீபத்தில், அதாவது, 10 நாட்களுக்கு முன்னால் இந்து பத்திரிகையிலேகூட, தமிழகத்திலே இருக்கிற மின்சார வாரியம், ஒரிசாவை ஒரு எடுத்துக்காட்டாக எடுத்துக்கொள்வது சரிதானா என்று பரிசீலிக்க வேண்டுமென்று ஒரு கட்டுரை வந்திருக்கிறது. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், நெய்வேலியிலே Zero Unit ஆரம்பிப்பதற்கும், அதேபோல் ஜெயங்கொண்டத்திலே ஒரு தனியார் நிறுவனத்தோடு சேர்ந்து ஒரு திட்டத்தை உருவாக்குவதற்குமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்ட நேரத்திலே, ஒரு பொதுத் துறையிலே என்னென்ன திட்டங்களை உருவாக்க வேண்டுமோ அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுப்பதற்கு மின்சார வாரியம் பெருமளவுக்குக் கவனம் செலுத்தவில்லை என்றே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த Policy Note-டிலே கூட, மின் உற்பத்தியில் எவ்வளவு காசு per unit-க்கு அரசுக்கு வரும் என்பது பற்றி சுட்டிக்காட்டப்படவில்லை.

மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில், இது நட்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்கிற நேரத்திலே, ஒருசில விஷயங்களை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்சார



வாரியத்திலே மிகப் பெரிய corruption நடந்து கொண்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது.

*பிற்பகல் 12-05*

நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; அதாவது, தூத்துக்குடி அனல் மின் நிலையம் சம்பந்தமாக நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்ற ஒரு வரியை, பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் நான் படிக்கின்றேன்:

"The review records that wilful violation has been committed by the Officers with the intention to favour the contractors resulting in a heavy financial loss to the Board which are dealt in this Report"

இந்த Enquiry Report-லே என்ன சொல்லப்படுகிறது என்றால், 1.49 கோடி ரூபாய் அளவிற்குள்ள நிதி, மின்சார வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அதுசம்பந்தமான விவரங்களை நான் இங்கு நேரமில்லாத காரணத்தாலே சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சுட்டிக்காட்டுவதைப்போல, தூத்துக்குடி மின்சார வாரியத்திலே ரூ.1.4 கோடி அல்ல, ரூ. 90 இலட்சம் அளவிற்கு ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அதிகமான பணம் கொடுக்கப்பட்டு விட்டது என்று, வாரியத்திற்குத் தகவல் வந்த உடனே அங்கே உடனடியாக ஒரு audit செய்ய வேண்டுமென்று ஒரு குழு அனுப்பப்பட்டு, அவர்கள் audit செய்து, 90 இலட்சம் ரூபாய் அளவிற்கு அதிகமான பணம் கொடுத்திருக்கிறார்கள் என்று முதலிலே அறிக்கை தந்தார்கள். பிறகு, எல்லாவற்றையும், அதாவது நடந்திருக்கின்ற வேலைகளையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், ஏற்கெனவே 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு வேலைகள் முடிந்திருக்கின்றன என்றும் excess payment என்பது 60 இலட்சம் ரூபாய்தான் என்றும் தெரிவித்தவுடனேயே, அந்த 60 இலட்சம் ரூபாயை, அந்த ஒப்பந்தக்காரர்களிடத்திலேயிருந்து திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கை, இந்த அரசாங்கத்தாலே எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கு, இதுமாதிரியான ஆதாரங்களைக் காட்டிப் பேச நீங்கள் நினைக்கின்ற சமயத்திலே, முன்கூட்டியே, பேரவைத் தலைவர் அவர்களிடமோ அவற்றைக் அல்லது துணைத் தலைவர் அவர்களிடமோ அவற்றைக் காட்டி அதற்கான அனுமதியைப் பெற்றுத்தான் இங்கே பேச வேண்டும். ஏனென்றால் முதலமைச்சர் அவர்களேகூட எங்களிடம் அனுமதி வாங்கித்தான் பேசுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மன்னிக்கவும், இனிமேல் அந்த மாதிரியான நடைமுறையை நான் கடைபிடிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொல்லியிருப்பதனாலே, இன்னொரு விஷயம் பற்றிக் குறிப்பிடப் போவதால், அதனுடைய நகலை அமைச்சர் அவர்களிடம் கொடுத்து விடுகின்றேன்.

(திரு. ஜே. ஹேமச்சந்திரன், குறிப்பு ஒன்றை அமைச்சரிடம் கொடுத்தார்.)

அதாவது, சேலத்திலே இருக்கின்ற அண்ணாமலை காட்டன் மில்ஸ் என்ற நிறுவனம், ஏற்கெனவே 1996-ல் மின் திருட்டை நடத்தி இருக்கிறது. மீண்டும் அவர்கள் அதேமுறையிலே திருட்டை நடத்தி, அதன் காரணமாககூட ஏறத்தாழ 21 கோடி ரூபாய் அளவிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது என்ற ஒரு தகவல் இருக்கின்றது. இப்படிப்பட்ட திருட்டுக்களைத் தடுப்பதற்குப் பல......

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அண்ணாமலை காட்டன் மில்ஸ் என்ற விவகாரம் - ஒரு அண்ணாமலை காட்டன் மில்ஸ் அல்ல, தமிழ்நாட்டிலே சில இடங்களிலே மின்சாரத்தைக் திருடுகிறார்கள். உதாரணத்திற்கு கூடுவாஞ்சேரியிலே ஸ்டீல் பாக்டரியிலே 18 கோடி ரூபாய் அளவிற்கு மின்சாரத்தைத் திருடியிருக்கிறார்கள். இப்படி எங்கெல்லாம் திருட்டு நடைபெறுகிறதோ, அவற்றை அதிகாரிகள் உடனடியாகக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து, அபராதமும் விதித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உடனடியாக, மின்சாரமும்



துண்டிக்கப்பட்டு விடுகிறது. எனவே, யாருக்கும் - அது அண்ணாமலை காட்டன் மில்ஸ்-ஆக இருந்தாலும் சரி, யாருக்கும்-இந்த அரசாங்கமோ மின்சார வாரியமோ, தயவு தாட்சண்யம் காட்டுவதில்லை. சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, அது ஏற்கெனவே இந்த அரசாங்கத்தாலே எடுக்கப்பட்டு வருகின்ற நடவடிக்கையாகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், உங்களுடைய பேச்சை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள். நேரம் அதிகமாகிவிட்டது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. நான், இங்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1996-லே இந்த நிறுவனத்திற்கு இப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டுக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், முழுமையாக அந்தத் தண்டனை பணத்தை அவர்கள் கட்டவில்லை. மீண்டும் 1999-ல் இதுமாதிரி செய்திருக்கிறார்கள். இது நிச்சயமாக அதிகாரிகளுடைய உடந்தை இல்லாமல் நடக்காது. அது தடுக்கப்பட வேண்டுமென்கின்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** 1996 இலே அவர்கள் இந்தத் தவறைச் செய்திருந்தாலும், 1999 இலே இந்தத் தவறைச் செய்திருந்தாலும், அதற்கான தண்டனை மற்றும் விதிக்கப்பட்ட அபராதம் இவற்றைக் கட்டினாலன்றி, நிச்சயமாக மின்சார வாரியம் அவர்களுக்கு மின் இணைப்பை எந்தக் காரணத்தைக் கொண்டும் கொடுக்காது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. அ. வெங்கடாசலம் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே. ஹேமச்சந்திரன், நீங்கள் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு மேலே அதிகமான நேரம் பேசிவிட்டீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முக்கியமான விஷயத்திலே விதி 131 (1)-லே பேச வேண்டுமென்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிலே பேரவைத் தலைவர் அனுமதித்தால்தானே நீங்கள் பேச முடியும். நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், அதை அனுமதிப்பதும், அனுமதிக்காததும் பேரவைத் தலைவருடைய உரிமை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, labour case பற்றிப் பேசுவதற்கு 2 நிமிடம் அனுமதி கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** கன்னியாகுமரி மாவட்டத்தில், கோதையாறு மின் உற்பத்தித் திட்டத்தைப் பொறுத்த அளவிலே அதிலே ஒரு பிரிவு இன்றும் சரியான முறையிலே வேலை செய்யாமல் இருக்கிறது. அது என்ன என்று பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று விளவங்கோடு தொகுதியிலே, பல இடங்களிலே பழங்குடி மக்களுக்கு மின்சாரத்தைக் கொடுப்பதற்கு பல இன்னல்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அது கவனிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விளவங்கோடு தாலுகாவிலே பல இடங்களிலே மின் அழுத்தம் சரியாக இல்லை. அது கவனிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஏழுதேசம், கொல்லங்கோடு பகுதியிலே ஒரு டிரான்ஸ்பார்மர் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே 9-4-1999 அன்று அமைச்சர் அவர்கள், மின் பகிர்மான வட்டங்களில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது குறித்து, மின்வாரியம் தொடர்ந்து பரிசீலித்து வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்ற உள்ளக் குமுறல் அவர்களிடம் இருந்து கொண்டிருக்கிறது. இன்றையதினம், சென்னை நகரத்திற்கு 15,000-கும் அதிகமான தொழிலாளர்கள், அமைச்சரைச் சந்தித்து மனு கொடுப்பதற்காக வந்திருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், ஏற்கெனவே மின்சாரவாரியத்தில் இருந்து, இதுசம்பந்தமாக நீதிமன்றத்திலே ஒரு வழக்கிலே, இது அமல்படுத்தப்பட தேவையில்லை என்ற முறையிலேகூட கருத்து சொல்லப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர



விரும்புகிறேன். இது விஷயமாக நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இன்று Distribution side-லே இருக்கிற தொழிலாளர்களைப் பொறுத்த அளவிலே அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். Wind Mill-லே வேலை செய்யக்கூடியவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற இயக்கத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள், முதலிலே Generation Side-லே இருக்கக்கூடிய தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசாங்கம் அதிலே இருக்கக்கூடிய முக்கியத்துவத்தை உணர்ந்து கடந்த ஆண்டு ஏறக்குறைய 11,000 பேர் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்று அறிவித்தது. பிறகு, அதன்மீது புகார் வந்த காரணத்தினாலே, ஒரு குழு நியமிக்கப்பட்டு, தூத்துக்குடி, வட சென்னை, மேட்டூர் போன்ற அனல் மின் நிலையங்களிலே யார், யாரை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுத்தபோது, 7,500 பேர்தான் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்புப்படி தகுதி பெற்றவர்கள் என்றிருந்த காரணத்தினால் அவர்களை நிரந்தரப்படுத்திவிட்டோம். அவர்கள் எல்லாம் 365 நாட்களும் நிரந்தரமாக பணியாற்றக்கூடியவர்கள். ஆனால், விநியோகப் பிரிவிலே பணியாற்றக்கூடியவர்கள் அப்படியல்ல. ஒரு நாளைக்கு அண்ணா நகரிலே திடீரென்று பணியாற்றுவதற்கு 100 பேரை நியமித்துக் கொள்வார்கள். பிறகு அண்ணா நகரிலே வேலையிருக்காது. மின் விநியோகத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு அம்பத்தூரிலே வேலை வரும். அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் 30 பேரை நியமித்துக் கொள்வார்கள். எனவே, நிரந்தரமாக பணியாற்றக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்று இந்தப் பகிர்மானத்திலே இல்லாத காரணத்தினாலேதான், அதிலே அரசு நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இருந்தாலும், உண்மையிலேயே அப்படி நிரந்தரமாக யாராவது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்களா என்பதை ஏற்கெனவே மின்வாரியம் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. அதிலே, உண்மையான ஒப்பந்தத் தொழிலாளர்கள் தொடர்ந்து பணியாற்றுவார்களேயானால், அதுபற்றிப் பரிசீலிக்கும். ஆனால், அனைவரையும் நிரந்தரப்படுத்துவது என்பது இயலாத காரியம் என்பதை, நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன், நீங்கள் ஒரு வேண்டுகோள், ஒரு வேண்டுகோள் என்று சொல்லி, நேரம் அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. நீங்கள் எவ்வளவு நேரம் பேசியிருக்கிறீர்கள் என்பது உங்களுக்கே தெரியும். ஒரே நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். தையல் தொழிலாளர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்குவது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. வெங்கடாசலம், நீங்கள் என்னிடத்தில் கேட்டுக் கொண்டதற்கிணங்க, 3 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

பிற்பகல் 12-15

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையின்கீழ் நான் விவாதம் செய்யாமல் இன்றைக்கு புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர் போன்ற பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கிற, அரசு அறிவித்திருக்கிற ஆணை சம்பந்தமாக சுருக்கமாகப் பேசி விடைபெறலாம் என்று எண்ணுகிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு 27-10-1999 ஆம் நாளிட்ட அரசாணை எண் எம்.எஸ்.134, எரிசக்தி (சி-1) என்ற ஆணையை விவசாயிகளுக்கு, அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பியிருக்கிறது. அதிலே என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், 1989-லிருந்து இதுவரையிலும் விவசாயிகளுக்குக் கூடுதலாக மின் இணைப்பு கொடுப்பது - additional load கொடுப்பது - நிறுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல் ஆண்டுக்காண்டு One Pole சர்வீஸ் வழங்கக்கூடிய எல்லா விவசாயிகளுக்கும் அந்த மின் இயக்கியில் regulation இருந்தால் மின் இணைப்பு வழங்குதவதில்லை என்ற தடை ஆணை இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு தடை ஆணைகளைத் தொடர்ந்து 'additional load' கேட்கக்கூடிய விவசாயிகள், 3 H.P. பயன்படுத்துகின்ற விவசாயிகள் 10 H.P. வேண்டுமென்று சொன்னால், additional load கிடைக்காமல்.....



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் அதைத் தெரிவித்து விடுவது நல்லது என்று கருதுகின்றேன். ஏற்கெனவே இந்த அரசு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கிக்கொண்டு வருகின்றது. அந்த விவசாயிகள் 3 ஹெச்.பி. வைத்திருந்தாலோ, 5 H.P. வைத்திருந்தாலோ, அவர்களுக்கு இலவசமாகத்தான் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இலவசமாகக் கிடைக்கிறது என்பதற்காக ஒவ்வொருவரும் 3 H.P.-யை 10 H.P.-யாக உயர்த்திக் கொள்வது, 5 H.P.-யை 15 H.P.-யாக உயர்த்திக் கொள்வது என்று சொன்னால், இந்த அரசாங்கத்தாலே அப்படி அனைவருக்குமே இன்னும் அதிகமாக மின்சாரத்தினுடைய அந்த Horse Power-ஐ உயர்த்தி, இலவசமாகக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லை. இருந்தாலும்கூட, அவர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்படக்கூடாது என்பதற்காக என்ன செய்கிறோம் என்று சொன்னால், 3 H.P. வைத்திருப்பவர்கள், 5 H.P-யாக உயர்த்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பினார்களேயானால், அவர்கள் self financing திட்டத்திற்கு வந்துவிடலாம். 5 H.P-யாக உயர்த்திக் கொள்ளலாம். ஆனால் ஆண்டுக்கு ஒரு Horse Power-க்கு ரூ. 250 கட்டணம் செலுத்த வேண்டுமென்றுதான் மின்சார வாரியம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

**திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தந்திருக்கிற விளக்கத்திற்கு நன்றி. அதேபோல் தொடர்ந்து 10 ஆண்டு காலமாக மின் இணைப்பில் ஏற்பட்ட தடங்கல் காரணத்தினால் விவசாயிகள் இலவச மின்சாரம் தானே என்று சொல்லி எல்லா ஆட்சிக் காலத்திலும், அதிகாரிகளை காக்காய் பிடித்து, அவரவர் இஷ்டத்திற்கு மின்சாரத்தைக் கூடுதலாக இயக்கி வருகின்றார்கள். இதிலே இந்த அரசினுடைய உத்தரவினால் என்ன கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், நீங்கள் சுய நிதி திட்டத்தில் கொண்டு வர வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். அதை அதிகாரிகள் கணக்கிட்டுப் போட்டுப் பார்த்தால், இப்போது 10 H.P. கூடுதலாக கேட்கக்கூடிய விவசாயிகளுக்கு சுய நிதித் திட்டத்திலே ரூ.50,000-ஐவிட கூடுதலாக, ரூ. 1 லட்சம், 1½ லட்சம் வரையிலும் அதிகமாக வருகிறது. அதை விட்டுவிட்டு improvement என்று சொல்லக்கூடிய திட்டத்தின் மூலம் வந்தாலும் ஒரு விவசாயிக்கு ரூ. 1 இலட்சம் வருகிறது. ஆகவே, அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள், எதிர்ப்புக் குரல் கொடுத்துப்

போராடக்கூடிய சூழ்நிலைக்கு இப்போது தள்ளப்பட்டிருக்கிறார்கள். நான் இந்த அரசைப் பார்த்து கேட்பது, இந்த இலவச மின்சாரம் வழங்கிய பெருமை உங்களையே சேரும். மின்சாரத்தை விவசாயிகள் திருடவில்லை. ஆனால் 200 அடி, 150 அடிக்கு தண்ணீரினுடைய level போகிறபோது 3 H.P-யை வைத்துக்கொண்டு, அவர்களால் தண்ணீர் இறைக்க முடியவில்லை. ஆகையால் கூடுதலாக 10 H.P., 15 H.P. பயன்படுத்தக்கூடிய நிலையில், அதிகாரிகளை சரிக்கட்டித்தான், அந்த நிலையை விவசாயிகள் செய்கிறார்கள் என்ற , உண்மையைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிகாரிகளை யாரும் சரிக்கட்டிவிட முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திடீர் திடீரென்று Squad அனுப்பி வைக்கிறோம். அப்படி Squad அனுப்பி கண்டுபிடிக்கப்பட்டால், அதிகாரிகளுடைய வேலையும் போகும், விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டுவிடும். ஏற்கெனவே, மின்சார வாரியம் பத்திரிகைகள் வாயிலாக விளம்பரம் செய்திருக்கிறது. எனவே, அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களை விட்டுவிடுவோம் என்று உறுப்பினர் யாரும் கருத வேண்டாம். அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று விவசாயிகள் உண்மையிலேயே 5 H.P. வைத்திருப்பவர்கள் 10 H.P. கூடுதலாக வேண்டுமென்று கேட்டால், உரிய கட்டணத்தைச் செலுத்தி விட்டால், அவர்கள் ரூ.1 இலட்சம், ரூ.2 இலட்சம் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஒரு H.P.-க்கு ரூ. 250 தான் கட்டணம் வாங்குகிறோம். 10 H.P.-க்கு ரூ.2,500 தான் ஆகும். எனவே, ரூ.1 இலட்சம், ரூ.1½ இலட்சம் அவர்கள் செலவழிக்க வேண்டிய அவசியம் இருக்காது. அதிகாரிகளைச் சரிக்கட்ட வேண்டிய அவசியமும் இருக்காது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு நன்றி கூறி, சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, Million Well-அதாவது மத்திய அரசினுடைய இந்தத் திட்டத்தின்கீழ், ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் நாடெங்கும்



ஆயிரக்கணக்கான கிணறுகள் வெட்டப்பட்டு அந்தச் சிறு விவசாயிகள் எல்லாம் 5 ஆண்டு காலம், 6 ஆண்டு காலம் என்று மின் இணைப்புகள் இல்லாமல் இருக்கிறார்கள். அந்த ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் கிணறு வெட்டப்பட்டு 5 ஆண்டுகள் 6 ஆண்டுகளுக்கு மேலாகக் காத்துக் கொண்டிருக்கக்கூடிய சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் அனைவருக்கும் ஒரு குறிப்பிட்ட காலம், 3 மாதமோ, 6 மாத காலத்திற்குள்ளாகவோ மின் இணைப்பு கொடுப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோல, 1996 ஆம் ஆண்டு பட்ஜெட் தொடரிலே பேசுகின்றபோது அமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள்; அதாவது, 1 இலட்சம் குடிசைகளுக்கு ஒற்றை விளக்குத் திட்டம் அமலாக்கப்படும் என்று. ஆனால், 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளுக்கு இன்றுவரை மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. ஒரு வருடத்திற்கு 60,000-லிருந்து 70,000-க்கு மேற்பட்ட தொகுப்பு வீடுகள் கட்டப்படுகின்றன. இலட்சக்கணக்கான தொகுப்பு வீடுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கின்றபோதே மின் இணைப்புகளையும் கொடுப்பதற்கு உடனடியாக உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும். எனவே, 1996 ஆம் ஆண்டு இந்த அரசு அறிவித்த அந்த ஒற்றை விளக்குத் திட்டத்தை உடனடியாக அமலாக்குவதற்குண்டான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசினுடைய அறிக்கையிலே 40,000 குடிசைகளில் 14,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், என்னுடைய கேள்வி எல்லாம், 1996 ஆம் ஆண்டு 1 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று அறிவித்தது என்னவாயிற்று என்று நான் வினவக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடந்த பட்ஜெட் தொடரின்போது பல்லாண்டுக்காலம் பணிபுரிந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று 7,000, 8,000 பேருக்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. அப்போது நான் ஒரு வேண்டுகோளை வைத்தேன். ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுகின்றபோது இட ஒதுக்கீடு முறை, முறையாக

அமலாக்கப்படுகிறதா, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு? அதேபோல மிகமிக பின்தங்கியவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு Open Competition என்ற அது முறையாக அமலாக்கப்படுகிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். இப்படித்தான் ஒவ்வொரு முறையும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துகின்ற பொழுதெல்லாம் இட ஒதுக்கீடு முறை அமலாக்கப்படாமலேயே அந்த இட ஒதுக்கீடு முறை நீர்த்துப்போய் விட்டது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டோர் என்று இட ஒதுக்கீடு இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களிலே பின்பற்றப்பட்டு இருக்கிறதா என்று கேட்கிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்கள் இந்த ஆட்சிக் காலத்திலே நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. 10 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே, 12 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே நியமிக்கப்பட்டவர்கள். அவர்கள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் முன்னேறிய சமுதாயமா, பிற்படுத்தப்பட்டவர்களா, தாழ்த்தப்பட்டவர்களா என்று பார்க்கவில்லை. அப்படிப் பணியாற்றிக் கொண்டிருந்த பணியாளர்கள் அத்தனைபேரையும் நிரந்தரமாக்க வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் அத்தனையும் வற்புறுத்தி உயர்நீதி மன்றத்திற்குச் சென்ற காரணத்தினால் அவர்களை இந்த அரசு நிரந்தரம் செய்திருக்கிறது. ஆனால், ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்தகால ஆட்சியிலே, நியமனம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் விகிதாச்சார அடிப்படையிலே தாழ்த்தப்பட்டவர்களுக்கு உள்ள இடங்களில் நிரப்பப்படவேயில்லை. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே மின்சார வாரியத்தில் கடந்த 7,8 ஆண்டுக் காலமாக எத்தனை தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள், அதில் விகிதாச்சார முறை பின்பற்றப்பட்டிருக்கிறதா என்று பார்க்கின்ற நேரத்திலே 900 Technical Assistants நியமனம் செய்யும்போது, அதிலே இதுவரையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமையே அளிக்கப்படவில்லை; இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பதை அறிந்து உடனடியாக நான் 6, 7 ஆண்டுக்காலமாக எத்தனை இடங்கள் அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டுமோ அவற்றை ஒரேயடியாக கொடுத்து விடுங்கள் என்று சொன்னதன்பேரில்



900 Technical Assistant-களிலே 450 பேர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையிலே 7,8 ஆண்டு காலம் சேர்த்துக் கொடுத்திருக்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, 3 நிமிடத்திற்குமேலே ஆகிவிட்டது. திரு. சுப்பராயன் (குறுக்கீடு). சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் சொல்லி முடித்துவிடுகிறேன். அமைச்சர் அவர்கள் 900 பேருக்கு (குறுக்கீடு) 450 பேரா? சரி. 450 பேருக்கு வேலை கொடுத்ததற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய கேள்வி, இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்குகின்றபோது ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரமாக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுடைய பங்கு எவ்வளவோ, ஒருவேளை அந்த ஒப்பந்தத் தொழிலாளர்களில் அந்தப் பங்கு இல்லை என்றால் அவர்களுக்குக் கூடுதலாக interview வைத்து எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோளே தவிர, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டாம் என்பதல்ல. எனவே, 7,000 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுகின்றபோது அதற்குரிய பங்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மிகமிகப் பின்தங்கியோர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த உரைக் குறிப்பிலே தமிழ்நாடு மின் நுகர்வோர்களுக்குச் சீரிய வகையில் மின்சாரம் வழங்குவதே எனது குறிக்கோள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சி என்கிற முறையில் அரசாங்கத்தினுடைய முரண்பாடான தன்மைகளை எடுத்துச்சொல்லி அவற்றை முறைப்படுத்தவேண்டிய கடமை, பொறுப்பு எங்களுக்கு இருப்பதால் நான் அந்த விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சீரான முறையில் மின்சாரம் வழங்குவதுதான் எங்கள் குறிக்கோள் என்று அறிவித்திருக்கிற அமைச்சர், அதே உரைக் குறிப்பிலே

சொல்கிறார்: தமிழ்நாட்டில் தனியார் நிறுவனமான ஜி.எம்.ஆர். வாசவி மின் உற்பத்திக் கழகம் ஒரு மின் உற்பத்தி நிலையத்தை முதன்முதலில் நிறுவியுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன் என்று சொன்னதைக் கேட்டு நாங்கள் அளவற்ற துன்பம் அடைகிறோம். இது ஏதோ ஒரு மன உணர்விலிருந்து சொல்வதல்ல; அதுவும் 6 தனியார் மின் திட்டங்களுக்கு 2,038 மெகாவாட் மின் உற்பத்திக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதில் என்ன மகிழ்ச்சி இருக்கிறது? வருந்த வேண்டிய ஒரு விஷயம், தமிழ்நாட்டு மக்களின் நலன்கள் 6 நிறுவனங்களிடம் விட்டுக் கொடுக்கப்படுகிறது. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால்....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மகிழ்ச்சி தெரிவித்திருப்பது, அந்த நிறுவனம் மின்சாரம் உற்பத்தி செய்கிறது என்பதற்காகத்தான். ஆனால், அதை அனுமதித்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியல்ல. 1994ஆம் ஆண்டு மத்தியிலே பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்கள், இந்தியாவினுடைய மின்சாரப் பற்றாக்குறையை மனதிலே கொண்டு தனியார் நிறுவனங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஒவ்வொரு மாநிலத்திற்கும் அனுமதி அளிக்கிறோம் என்று சொல்லி 12 நிறுவனங்களுக்கு தமிழகத்திலே ஒப்புதல் தந்தார்கள். அ.தி.மு.க ஆட்சியிலே அந்த 12 நிறுவனங்களும் -- M.O.U. -- Memorandum of Understanding ஒப்பந்தம் செய்தார்களே தவிர, மின்சாரம் உற்பத்தி செய்யவில்லை. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு குறைந்தபட்சம் மின்சாரமாவது உற்பத்தி செய்யட்டும் என்று சொல்லி அனுமதியளித்து, இப்போது மின்சாரத்தை உற்பத்தி செய்திருக்கிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல திராவிட முன்னேற்றக் கழகம் காரணமல்ல. ஆனால், திருத்துகிற உரிமையும், திருத்துகிற கடமையும், திருத்துகிற அதிகாரமும் இப்போது தி.மு.க.விடம் இருக்கிறது. அவர்கள் செய்யலாம். மனமில்லை, மார்க்கம் இல்லை. எனவே, நான் அந்த விவரத்திற்குள்ளே போக விரும்பவில்லை. ஏன் மகிழ்ச்சி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்கு மேலும் நேரம் இல்லை. எனவே, சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திரு. கே. சுப்பராயன்:** நீங்கள் நேரம் இல்லை என்று சொல்வதும் எனக்குப் புரிகிறது. ஏன் நேரம் இல்லை என்று சொல்கிறீர்கள் என்பதும் எனக்குப் புரியும். புரியாமல் இல்லை.

இன்னொரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன், ஏன் வருத்தமடைகிறேன் என்பதற்காக. அதே அமைச்சர், இங்கே தனியாருக்கு வழங்கியிருக்கிறோம் என்று சொல்லிவிட்டு என்ன சொல்கிறார் தெரியுமா? இதை மாநிலம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத் தெரிவிக்க விரும்புகிறேன். 1999-2000-ல் மின் உற்பத்தியின் சராசரி விலை ஒரு யூனிட்டுக்கு 257.74 பைசா ஆகிறது, அரசு உற்பத்திக்கு. 257.74 பைசா அரசாங்கம் ஒரு யூனிட் உற்பத்தி செய்வதற்கு செலவிடுகிறது. அடக்க விலையாகிறது என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியடைந்தார் அல்லவா அமைச்சர், அதே அமைச்சர் பொறுப்பேற்றிருக்கிற அந்தத் துறை ரூபாய் 3.15-க்கு ஒரு யூனிட் ஒன்றிற்கு, தனியாரிடம் இதே ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனத்திடமிருந்து வாங்குகிறார்கள். ஜி.எம்.ஆர். வாசவி மின் உற்பத்திக் கழகத்திடமிருந்து ரூ.3.15-க்கு இதே மாநில அரசு Purchase செய்கிறதே. அரசாங்கமே உற்பத்தி செய்கிறபோது 257.74 பைசா ஆகிறபோது, ஏன் நீங்கள் தனியாருக்குக் கொடுத்து 3.15 ரூபாய் கொடுத்து விலைக்கு வாங்குகிறீர்கள்? மாநில அரசின்.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

இந்த ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனமாக இருந்தாலும் சரி, அல்லது பிள்ளைப்பெருமாள் நல்லூர் திட்டமாக இருந்தாலும் சரி, அல்லது டிரைசக்தி நிறுவனமாக இருந்தாலும் சரி, எந்த நிறுவனமாக இருந்தாலும் அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்த மின்சாரத்திற்குக் கட்டணம் நிர்ணயிக்கின்ற அதிகாரம் மின்சார வாரியத்திற்கோ அல்லது தமிழ்நாடு அரசாங்கத்திற்கோ கிடையாது. C.E.A. என்று ஒரு நிறுவனம் மத்தியிலே இருக்கிறது, மத்திய ஆட்சியின்கீழ். அந்த நிறுவனம்தான் அவர்கள் கொண்டு வருகின்ற மூலதனம், அவர்கள் பயன்படுத்துகின்ற Fuel, அவர்களுடைய மற்ற infrastructure இவற்றையெல்லாம் கணக்கிட்டு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒவ்வொரு கட்டணம் நிர்ணயிக்கிறார்கள். எனவே, இது மத்திய அரசாங்கத்திலே இருக்கக்கூடிய C.E.A. நிறுவனம் நிர்ணயிப்பதே தவிர, நாங்கள் நிர்ணயிப்பது அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். மின்சாரமே இல்லையென்று இருப்பதைவிட ஓரளவிற்குக் கூடுதலாகக் கட்டணம் கொடுத்தாலாவது மின்சாரம் கிடைக்கிறதே என்ற அளவிற்கு இந்த அரசாங்கம் அதை ஊக்குவிக்கிறது.

பிற்பகல் 12-30

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை நீக்குவதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு இல்லையென்று தெரியும். ஆனால், அதைத் தீர்மானிக்கிற அதிகாரம் எங்கு இருக்கிறது தெரியுமா? I.M.F., World Bank-டம் இருக்கிறது. I.M.F.-ம், World Bank-ம் சொல்லித்தான் இந்தக் கட்டணம் தீர்மானிக்கப்படுகிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான விஷயம் என்பதால், I am on a point of clarification. தமிழகம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்திற்கு 2.57 ரூபாய் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. தமிழகத்தில் நீர்நிலை மின்சாரம், நிலக்கரியிலிருந்து மின்சாரம், Atomic Power என்று தனித்தனியாக மின்சாரம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதனுடைய சராசரி உற்பத்திச் செலவு ரூபாய் 2.57 ஆகிறதா? அல்லது வாசவி நிறுவனத்தார் உற்பத்தி செய்கின்ற, மூலப்பொருட்களை வைத்து, மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கக்கூடிய மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு செலவு ரூபாய் 2.57 ஆகிறதா என்பதை நான் by a Point of clarification தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சொக்கர் அவர்கள் எனக்கு உதவி செய்ததற்காக நன்றி. நாம் Hydro generation செய்கிறோம். அதற்கு நமக்கு 10 காசுதான் செலவாகிறது. அதேநேரத்திலே அனல் மின்நிலையத்திலே உற்பத்தி செய்கின்றபோது கூடுதலாக ஆகிறது. average cost தான் 257.74-ஏ தவிர, வெறும் generation cost மட்டுமல்ல.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனல் மின் நிலையத்திற்குக் கூடுதல் செலவு ஆகிறது என்று சொன்னார்கள். ஒப்புக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய ஆட்சியிலே இருக்கிறது. நெய்வேலி-II stage என்னவாயிற்று? நெய்வேலி-II stage தொடங்கப்படுமானால் நெய்வேலிக்கு



மேற்கு வங்கத்திலிருந்தோ, பீகாரிலிருந்தோ நிலக்கரி கொண்டுவர வேண்டிய transport செலவு இல்லை அல்லவா? ஏன் அதை வலியுறுத்தவில்லை. அதிகாரம் இருக்கிறது. ஏன் அதைப் பயன்படுத்தவில்லை. பயன்படுத்தலாம். பயன்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னொரு விஷயத்தையும் சொல்லி பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும். இன்னொருவர் பேசி, பின்பு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டும்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** சமீபத்திலே மத்திய மின்சாரத் துறை அமைச்சர் அரங்கராஜன் அவர்கள் சொல்லியிருக்கிறார். என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? இந்த நாட்டினுடைய நலன்கள் முற்றிலும் I.M.F., World Bank இவற்றிடம் அடகு வைக்கிற முறையிலே ஆலோசனை சொல்லியிருக்கிறார். என்னவென்றால், Metro City மற்றும் Municipalities-ல் இருக்கக்கூடிய மின் விநியோகம் முழுவதையும், generation முழுவதையும் தனியாருக்குக் கொடுத்துவிடுவது. இதில் ஒரேயொரு விஷயத்தைக் கவனியுங்கள். ஏன் அவர்கள் தனியாருக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்? Rural areas-ஐ எடுத்துக்கொள்வார்களா? Rural areas-ஐ எடுத்துக்கொள்ளமாட்டார்கள். rural areas-ஐ எடுத்தால் நஷ்டம் என்பதால் இலாபகரமான நல்ல சதைப்பிடிப்புள்ள இடமாகப் பார்த்து I.M.F. ஆலோசனையோடு தனியார் துறை எடுத்துக்கொள்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் மத்திய அமைச்சர் ஒரு கொள்கை அறிவிப்பை அறிவித்திருக்கிறார். ஆனால், அந்த அறிவிப்பு வருவதற்கு முன்னாலேயே இந்தியாவில் இரண்டு மாநிலங்களிலே விநியோகத்தைத் தனியாருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி செய்கின்ற கல்கத்தா; இன்னொன்று மகாராஷ்டிரம். ஆகவே, இந்த இரண்டு மாநிலங்களிலேயும் ஏற்கெனவே 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் தொகை இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் மின்சார விநியோகம் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவரவர்களே, ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 3 நிமிடங்கள் கேட்டு விட்டு, 8 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** 10 நிமிடங்கள் என்று Speaker சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் அப்படிச் சொல்லவில்லை. என்னிடம் 3 நிமிடங்கள்தான் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு Point.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** நிறைய விஷயங்கள் சொல்ல வேண்டிய அவசியமும் தேவையும் இருந்தாலும்கூட அதற்கு நேரம் இல்லை. அவர் கல்கத்தா பற்றி சொன்னார். நிறைய பதில்கள் இருக்கின்றன. ஒரு வாதம் என்றால் அதற்கு எதிர்வாதம் உண்டு என்பதை மாநில அரசு மறந்து விடக் கூடாது. ஒவ்வொரு வாதத்திற்கும் எதிர்வாதம் உண்டு. வாதம் என்பது இருமுனைகளைக் கொண்ட கூரான கத்தி என்பதை நாம் மறந்து விடக்கூடாது. நேரம் இல்லை, எனவே அதற்குள் போக விரும்பவில்லை.

கடைசியாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், T.N.E.B. என்பது tourist centre மாதிரி இருக்கிறது. ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால் Chairman of the Board என்பவர் மூன்று மாதங்கள், நான்கு மாதங்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். மூன்று வருடங்கள் தொடர்ந்து நீடித்தால்தான் தமிழ்நாட்டின் தற்போதைய மின் தேவை, வளர்ந்து வருகிற தேவை இவற்றை மதிப்பீடு செய்து அதற்குத் தக்கவாறு Generation-ஐ எப்படிக் கொண்டு வருவது என்பது பற்றிச் சிந்திக்க முடியும், செயலுக்கு வழிகாட்ட முடியும் என்பதையும், அதனைச் செய்ய வேண்டும் என்பதையும் சொல்லி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.



பிற்பகல் 12-35

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலிங்கத்துப் போரோடு, பேரரசர் அசோகன் அவர்கள் மனம் திருந்தி இனிமேல் போரிடச் செல்வதில்லை என்ற முடிவிற்கு வந்தார். அதைப்போன்று மாண்புமிகு முதல்வர் அவர்களும் விவசாயிகளின் மின் கட்டணத்திற்காக ஒரு பைசா குறைக்க வேண்டும் என்றபோது துப்பாக்கியைத் தூக்கி இரத்தத்தைப் பார்த்தபின்பு இனிமேல் விவசாயிகளிடம் மின் கட்டணமே வசூலிக்கமாட்டோம் என்ற நல்ல முடிவை எடுத்து, விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை இரத்து செய்தார்கள். அந்த மின்சாரத்திற்குக் கட்டணம் வசூலிப்பது இல்லை என்பதற்குப் பதிலாக இப்போது மீண்டும் மறைமுகமாக அங்கே வசூலிக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விவசாயப் பெருமக்கள் ஏற்கெனவே வாங்கியிருக்கக்கூடிய விவசாய மின் இணைப்புகளை 3 குதிரைத் திறன், அல்லது 5 குதிரைத் திறன் கொண்ட அளவில் அவர்கள் மின் இணைப்பைப் பெற்றிருந்தாலும், ஏற்கெனவே 40 அடி ஆழத்தில் இருந்த நீர் ஆதாரம் இப்போது 400 அடிக்கும் 500 அடிக்கும் சென்றுவிட்டது. ஆகவே, அந்த நீர் ஆதாரத்தை மேலே கொண்டுவர வேண்டுமென்றால், 5 குதிரைத் திறன், வைத்திருந்தவர்களுக்கு 10 குதிரைத் திறன் மின் அழுத்தம் தேவைப்படுகிறது. ஆகவே, அவர்கள் அந்த அளவில்தான் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், அவர்களுக்கு இந்த அரசானது, அவர்கள் ஏற்கெனவே 1960-லோ, 1965-லோ, 1970-லோ பெற்றிருந்த மின் இணைப்பு எத்தனை குதிரைத் திறனோ அதற்கு மேல் பெறுவதற்கு சுயநிதி மின் இணைப்பு பெறுவது போன்ற கட்டணத்தை வசூலிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே நலிந்து இருக்கின்ற விவசாயிகள், தங்களுடைய விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காமல் இருக்கும் நிலையில் மிகவும் வறுமையால் வேதனையோடு இருக்கிறவர்களை, நீங்கள் மீண்டும் இந்தத் திட்டத்தின் மூலம் அவர்களைக் கொடுமைப்படுத்திவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு ஒரு குதிரைத் திறனுக்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு அதிகமாக இழுப்பதற்கு ரூபாய் 250 வீதம் வசூலிக்கப்படும் என்று ஒரு அறிவிக்கப்படாத திட்டமும் எங்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. நிச்சயமாகத் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அறிவிக்கப்படாத திட்டமல்ல. ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டம். பத்திரிகைகளில் எல்லாம் மின்வாரியத்தால் ஏற்கெனவே செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. அறிவித்துவிட்டுத்தான் இந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறோம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் மூலம் நசுக்கப்பட்ட விவசாயிகள் மேலும் கொடுமைப்படுத்தப்படுவார்கள். இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் தமிழ் மாநில காங்கிரஸ் நிச்சயமாக விவசாயிகளுக்காகக் குரல் கொடுத்துப் போராட்டத்தில் ஈடுபடும் என்பதையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏதோ இந்த அரசாங்கம் தமிழ்நாட்டில் மின்சாரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற 16 லட்சம் விவசாயிகளுக்கும் இதை அமல்படுத்துவதைப்போல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே உரையாற்றுகிறார். யார் 5 குதிரைத் திறனை 10 குதிரைத் திறனாக உயர்த்தவேண்டுமென்று சொல்கிறார்களோ அவர்களுக்குத்தான் இந்த சுயநிதித் திட்டமே தவிர, 16 இலட்சம் விவசாயிகளுக்கும் இந்தத் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தண்ணீரைக் கொண்டு வியாபாரம் செய்யவில்லை. ஏற்கெனவே எவ்வளவு தண்ணீரை எடுத்தார்களோ, அதைவிடக் குறைவாகத்தான் எடுத்துப் பயன்படுத்துகிறார்களே தவிர, வேறல்ல. ஆகவே குதிரைத் திறனுக்கு 250 ரூபாய் வசூலிப்பேன் என்று சொல்வதை நீங்கள் கைவிட வேண்டும். அதற்கு விளக்கமாக அமைச்சர் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியமானது 1966-67-ல் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் 6 கோடி ரூபாய் கடன் வாங்கியிருந்தது. இப்போது அது கிட்டத்தட்ட 681 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. அதேபோன்று ஊரக மின்மயமாக்கல் கழகத்திடமிருந்து 1970-71-ல் வெறும் 2 கோடி ரூபாய் கடன் பெற்று, இப்போது 652 கோடியாக உயர்ந்திருக்கிறது.



அதனுடைய வரவு செலவு திட்டத்திலே கிட்டத்தட்ட 630 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில் அரசு என்ன சொல்கிறது என்றால், கிட்டத்தட்ட 19000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் இருப்பது போன்று சொல்கிறார்கள். திட்டத்திற்கு என்ன அனுமதி கொடுத்திருக்கிறீர்கள் என்றால், மாசு கட்டுப்பாடு வாரியத்திலிருந்து அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது, மத்திய அரசிடமிருந்து அனுமதி கோரப்பட்டிருக்கிறது என்று இப்படியெல்லாம் *உண்மைக்குப் புறம்பான, மாயையான ஒரு தோற்றத்தை ஏற்படுத்தி, 19,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதைப் போன்றும், இவ்வளவு உற்பத்தி செய்துவிட்டால் ஏதோ பிற மாநிலங்களுக்கு விற்றுவிடலாம் என்று ஒப்பந்தம் செய்வதைப் போன்றும் இங்கே ஒரு விவர அறிக்கை வைத்திருக்கிறீர்கள். ஆனால், இவ்வளவு தடங்கலும் இவ்வளவு நிதிப் பற்றாக்குறையும் உள்ள இந்த நிர்வாகமானது — எந்தத் திட்டத்திற்கும் — நிதி ஒதுக்கவில்லை. கூடங்குளம் அணு மின் நிலையம் 2000 மெகாவாட்— ஆனால் ஒரு ரூபாய் கூட அதற்கு நிதி ஆதாரம் ஒதுக்கப்படவில்லை. எந்தத் திட்டத்திற்கும் ஒரு ரூபாய் கூட நிதி ஆதாரம் ஒதுக்கப்படாமல், மத்திய அரசிடமிருந்து அந்தத் திட்டத்தைப் பெறுவதற்கு மாநில அரசும் இணைந்து முயற்சி செய்யலாம். மத்திய அரசிடம் வற்புறுத்தலாம். எதையுமே நீங்கள் செய்யாமல், 19000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வது போன்று ஒரு மாயையை ஏற்படுத்துகிறீர்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது நம்முடைய திட்டமில்லை. மத்திய அரசாங்கத்தினுடைய திட்டம். முழுக்க முழுக்க 2000 மெகாவாட்டும் மத்திய அரசே இரஷ்ய அரசாங்கத்தினுடைய உதவியோடு ஒப்பந்தம் செய்து நிறைவேற்ற இருக்கின்ற திட்டம்.

**திரு. மு. அப்பாவு:** மத்தியில் உங்கள் கூட்டணி ஆட்சி நடைபெறுவதால் இந்தத் திட்டத்திற்காக நிதி தாருங்கள் என்று இதுவரை யாரும் கேட்டதில்லை. நீங்களும் மாநில அரசு நிறைவேற்றுகிற திட்டத்திற்குக்கூட, ஒரு ரூபாய்கூட நிதி ஆதாரம் ஒதுக்காமல் இவ்வளவு

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்தால், உண்மையிலேயே எங்களுக்கெல்லாம் பயமாக இருக்கிறது, Current ரொம்ப Shock ஆகிவிடும் என்று யாருமே ரோட்டிலே நடக்க முடியாது. நான்கு வருடங்களாக 196 மெகாவாட் மின்சாரத்தைத் தனியாரிடம் வாங்கிவிட்டு, என்னமோ இந்த அரசு 19 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யப்போகிறது என்று சொன்னால், உண்மையிலேயே எனக்கு நினைவுக்கு வருவதெல்லாம், 1967-க்கு முன்னாலே (மணியடிக்கப்பெற்றது)—நான் முடித்து விடுகிறேன்—ரூபாய்க்கு 3 படி அரிசி போடுகிறோம் என்றீர்கள்; ஒரு படி அரிசி போடுகிறோம் என்றீர்கள், கடைசியிலே, எப்படிப் போடுவீர்கள் என்று கேட்டபோது, எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. 'தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி; வெளிநாட்டிற்கு அள்ளி எடுத்து அனுப்பி, பணத்தைக் கொண்டுவந்து, 3 படி அரிசி போடுவோம்' என்று பொதுமக்களிடம் *உண்மைக்கு மாறாகச் சொல்லப்பட்டது. இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களிடமே....

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள், ** சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள். 'உண்மைக்கு மாறாக' என்று அதை மாற்றிச் சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** உண்மைக்குப் புறம்பாக, 1967-க்கு முன்னால் சொல்லி, ஒருவருக்கும் 3 படி அரிசி போடவில்லை; ஒருவருக்கும் ஒரு படி அரிசி போடவில்லை. அதேபோல, இந்த மின்வாரிய விவர அறிக்கையைப் பார்க்கும்போது, உண்மையிலேயே, எந்தத் திட்டத்திற்கும் நிதியே ஒதுக்காமல், 19 ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை இந்த அரசு தருகின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் பதில் அளிக்க வேண்டும். அவருக்கு அதிக நேரம் தர வேண்டும். எனவே, உங்களுடைய உரையை சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. மு. அப்பாவு:** அதேபோன்று, விவசாயிகளுக்கு இலவசமாக மின் திட்டம் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதாக நீங்கள் உறுதி அளித்தீர்கள். ஆனால், கடந்த ஆண்டு 40 ஆயிரம் விவசாயிகளுக்கு நீங்கள் மின் இணைப்புக் கொடுப்பதாக உத்தரவாதம் கொடுத்தும், உண்மையிலேயே கொடுத்தது 10 ஆயிரம் பேர்களுக்குத்தான். அதுவும், சுயநிதி, 25 ஆயிரம், 20 ஆயிரம், 10 ஆயிரம் கட்டியவர்களுக்கு மட்டும் 7,448 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்களே தவிர, உண்மையான ஏழைகளுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. அதோடு, இன்றுவரை மின் இணைப்பு வேண்டி எவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள் என்ற விவரமும் இதிலே சொல்லப்படவில்லை. எவ்வளவு பேர் காத்திருக்கிறார்கள்; எத்தனை வருடங்களுக்குள் அவர்களுக்குக் கொடுக்கப் போகிறீர்கள் என்பதைச் சொல்லவில்லை.

விவசாயச் சந்தையை ஆரம்பித்தால் போதாது. சந்தைக்குச் சரக்குகள் வரவேண்டுமென்றால், மின் இணைப்பு நிச்சயமாகக் கொடுக்க வேண்டும். அவர்கள் விளைபொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். 3500 பேர்களுக்கு மட்டும்தான் சாதாரண முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, சுயநிதியின் மூலமாகத்தான் அதிகமான மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அதனுடைய குறியீடான 40 ஆயிரம் பேர்களுக்குக்கூட நீங்கள் இந்த ஆண்டு கொடுக்கவில்லை. (மணியடிக்கப்பெற்றது) இதற்கிடையில், மாண்புமிகு முதல்வரவர்கள் மதுரையிலிருந்து கன்னியாகுமரி வரை தொழிற்சாலைகளாக மாற்றுவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மின்சாரம் எங்கேயிருந்து வரும் என்று கேட்டு, இந்த விவர அறிக்கையில் பேசுவதற்கு அனுமதித்த தங்களுக்கு நன்றி கூறி, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1998-99 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ஆகியவைமீது உரையாற்றிய

மாண்புமிகு உறுப்பினர்கள் 16 பேர்களுக்கும், அவர்களுடைய ஆலோசனைகளுக்கும் என்னுடைய நன்றியை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

1996 ஆம் ஆண்டு முதற்கொண்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாகப் பொறுப்பேற்று, அவர்கள் ஒவ்வொரு மாதமும் எப்படி மற்ற இலாகாக்களை ஆய்வு செய்கிறார்களோ அதைப்போல, மின்சார இலாகாவினுடைய பணிகளை, வளர்ச்சியை, அதனுடைய முன்னேற்றத்தை ஆய்வு செய்து, அவர் அளிக்கின்ற அறிவுரை, ஆலோசனைகள் மீது மின்சார வாரியம் இந்தியாவிலேயே மிகச் சிறப்பாக, தமிழ்நாட்டிலே இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1998-99 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டின்படி மொத்தச் செலவு, ரூ. 6,384.99 கோடியாகவும், மொத்த வருவாய் ரூ.5,870.36 கோடியாகவும், பற்றாக்குறை ரூ. 514.63 கோடியாகவும் இருந்தது. மூலதன உபரி ரூ. 386.58 கோடி வந்த காரணத்தால் நிகரப் பற்றாக்குறை கடந்த ஆண்டு ரூ.128.05 கோடியாக இருந்தது. 1999-2000 ஆண்டிற்கான வரவு-செலவைப் பார்க்கின்ற நேரத்தில் மொத்தச் செலவு ரூ. 8,343.84 கோடி. வருவாய் ரூ. 7,713.63 கோடி. பற்றாக்குறை ரூ.. 630.21 கோடி. இந்த ஆண்டு மூலதன உபரி ரூ. 60.61 கோடி ஆக, நிகரப் பற்றாக்குறை ரூ. 569.60 கோடி 1999-2000 ஆண்டிற்கான கட்டண உயர்வு மூலம் கூடுதல் வருவாய் என்று எதிர்பார்த்தது ரூ. 617.65 கோடி. ஏற்கெனவே மின்சார வாரியம் இந்த ஆண்டு, கட்டண உயர்வு இவ்வளவு உயர்த்த வேண்டுமென்று ஒரு திட்டமிட்டு அரசாங்கத்தினுடைய அனுமதிக்காக அனுப்பி வைத்தது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு, கட்டண உயர்வு இப்போதைக்குத் தேவை இல்லை என்று அதைத் திருப்பி அனுப்பி விட்ட காரணத்தால், அதையும் சேர்த்தால் இந்த ஆண்டு மொத்தப் பற்றாக்குறை—ஏற்கெனவே 569.60 கோடியோடு 617.65 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்ப்பார்த்ததையும் சேர்த்துக் கொண்டால் மொத்தப் பற்றாக்குறை—1,187.25 கோடி ரூபாயாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-45

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் 16 பேர் உரையாற்றுகிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அழகிரி ஒரு கருத்தை வலியுறுத்திச் சொன்னார். மின் இணைப்பு கொடுக்கின்ற நேரத்தில் 800 ரூபாயாக இருந்ததை 1,800 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்களே, முதலமைச்சர் இதற்கு எப்படி ஒப்புதல் தந்தார்கள் என்றெல்லாம் கேட்டார்கள். உள்ளபடியே மின்சார இலாகாவால் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறை இந்த மின் இணைப்புக் கட்டணம் உயர்த்தப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டுமல்ல, 1994-லேயும் — கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. எந்த அடிப்படையிலே உயர்த்தப்படுகிறது என்று சொன்னால், தொழிலாளர்களுக்கு எந்த விகிதாச்சாரத்திலே சம்பள உயர்வு உயர்ந்து இருக்கிறது. மின்சாரக் கருவிகள், மீட்டர்களாக இருந்தாலும் அல்லது Conductor-களாக இருந்தாலும், அல்லது டிரான்ஸ்பார்மர்களாக இருந்தாலும், இவையெலலாம் எந்த அளவு விலை உயர்ந்திருக்கின்றன என்பதையெல்லாம் கணக்கிட்டுத்தான் மின்சார வாரியம் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மின் இணைப்புக் கட்டணத்தை உயர்த்துகிறது. மின் இணைப்புக் கட்டணம் என்பதை நான் இங்கே விளக்குவது முக்கியம் என்று கருதுகிறேன். இது ஏதோ மாதந்தோறும் கட்டுகிற கட்டணம் அல்ல. வாழ்நாள் முழுவதற்கும் என்றைக்கு மின் இணைப்பு பெறுகிறார்களோ அன்றைக்கு மட்டும் கட்டுகிற கட்டணம் இது. ஆனால், தமிழ் நாட்டில் நிலைமை எப்படி இருந்தது என்று சொன்னால் 1991-லிருந்து 1996 வரையிலும் ஆட்சி செய்த ஒரு கட்சி, அப்போது மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால் வீட்டிற்கு 5,000 ரூபாய் இலஞ்சம் கொடுத்தவர்களும் இருக்கிறார்கள். 10,000 ரூபாய் கொடுத்தவர்களும் இருக்கிறார்கள். ஃபிளாட்டுகளாக இருந்தால்—மாடி வீடுகளாக இருந்தால்—25,000 ரூபாய் கொடுத்தும் மின் இணைப்பு பெற்றவர்களும் இருக்கிறார்கள்... (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** ஆதாரம் இல்லாமல் எப்படி இதைக் கூறலாம்?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஆதாரத்தைச் சொல்கிறேன், எத்தனை வேண்டும்? தயவுசெய்து உட்காருங்கள், சொல்கிறேன். தலைவரவர்களே, ஆதாரங்கள்—மாண்புமிகு உறுப்பினருடைய கட்சியை சார்ந்த ஒருவர்கூட என்னிடத்திலே விண்ணப்பம் கொடுத்திருக்கிறார். அந்த ஆட்சியிலே ஒரு குடியிருப்புக்கு 25,000 ரூபாய் இலஞ்சம்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 நவம்பர் 22

கொடுத்துதான் மாடி வீடுகளுக்கு இணைப்புப் பெற்றோம். ஆனால், நீங்கள் அதைத் தவிர்க்க வேண்டுமென்றால் ஒரு யோசனையைச் சொல்கிறேன் என்று எங்களுக்கு ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறார். அது என்னவென்று கேட்டால், விண்ணப்பம் கொடுத்தவுடனேயே மின் இணைப்பு கொடுப்பதில்லை. 6 மாத காலம் 8 மாத காலம் 10 மாத காலம் மின் இணைப்பு கொடுக்காமல் இருந்தால் மின் இணைப்பு வேண்டுமென்று சொல்கிறவர்கள் எதையாவது கொடுத்துத்தான் பெற வேண்டிய சூழ்நிலை இருந்தது. அதைப் போக்குவதற்காக இந்த அரசாங்கம் என்ன செய்தது என்றால், மின்சாரம் வேண்டும் என்று விண்ணப்பம் கொடுத்தவுடனேயே 30 நாட்களுக்குள்ளாக மின் இணைப்பு கொடுக்க வேண்டும், நகர்ப்புறங்களாக இருந்தால், சென்னை போன்ற இடங்களாக இருந்தால் கிராமப் பகுதிகளாக இருந்தால் 3 மாதங்களுக்குள்ளாக மின் இணைப்பு கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும் அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்றொரு ஆணையைப் பிறப்பித்தோம். அதற்குப் பிறகுதான் இந்த இலஞ்சம் வாங்குகிற முறை குறைக்கப்பட்டது.

அதிலேகூட என்ன செய்கிறார்கள் என்றால்—இப்போதுகூட எல்லாம் குறைந்து விட்டது என்று நான் சொல்லத் தயாராக இல்லை-கீழே இருக்கிற அதிகாரிகள் 29-வது நாள் வரையில் பார்க்கிறார்கள்; ஏதாவது கொடுப்பார்களா என்று எதிர்ப்பார்க்கிறார்கள். 29 நாளும் பார்த்துவிட்டு கிடைக்கவில்லை என்று சொன்னால் 30-வது நாள் தூது அனுப்புகிறார்கள். முன்பெல்லாம் இவ்வளவு கொடுப்பீர்களே, இப்போது என்ன? 30-ஆவது நாள் வரப் போகிறது, ஒன்றுமே கொடுக்கவில்லையே, கவனிக்கவில்லையே என்று சொன்னவுடனயே, அதுதான் உத்தரவு போட்டிருக்கிறார்களே, 30 நாட்களுக்கு கொடுக்காவிட்டால் உங்கள் வேலையே போய்விடுமென்று. எனவே, கொடுத்தால் கொடுங்கள், இல்லையென்றால் வீட்டிற்குப் போங்கள் என்று தெரிந்துகொள்ளக்கூடிய இடத்திலே மின் உபயோகிப்பவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, ஏதோ வந்துவிட்டு 500 ரூபாய் கொடுங்கள் 1,000 ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறவர்களும் இருக்கிறார்கள். அது அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்தால் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். எனவே, முன்னர் அந்த முறை இருந்தது. காரணம் இத்தன்னை நாளைக்குள் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று ஒரு கண்டிப்பு இல்லாத காரணத்தால்தான் அந்த முறை இருந்தது. இப்போது, அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காரணத்தாலே கீழ்மட்டத்திலே அதற்கான வாய்ப்பு



1999 நவம்பர் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இல்லை. இருந்தாலும்கூட, ஒருமுனை இணைப்பு பெறுவதற்கு அவ்வளவு செலவு செய்தவர்கள், இப்போது ஏறி இருக்கிற விலைவாசிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், ரூபாய் 800-ஐ ரூபாய் 1,800 என்று மின்சார வாரியம் உயர்த்தியது. இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி போன்றவர்கள் சொன்ன இந்தக் கருத்தை ஆலோசித்துப் பார்த்து மின் வாரியத்தோடு கலந்துபேசி ரூ.1,500 என்ற அளவிற்குக் குறைக்க முடியுமா என்பதை இந்த வாரியம் நிச்சயம் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-50

மாண்புமிகு உறுப்பினர் குத்தாலம் கல்யாணம் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், எரிவாயுத் திட்டம், குத்தாலம் அருகிலே இருக்கக்கூடிய மருதூர் கிராமத்திலே வர இருந்ததே, அது என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். அதற்கான திட்டம் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டு சுமார் 300 கோடி ரூபாயில் அந்தத் திட்டம் இப்போது அமல்படுத்தப்பட்டு வருகிறது. கி.பி. 2002-லே அங்கே மின்சாரம் கிடைக்கும் என்ற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, காவிரி ஆற்றிலிருந்து மின் உற்பத்தி செய்ய ஒகேனக்கல் நீர்மின் திட்டத்தை ஏன் பரிசீலிக்கக் கூடாது என்று கேட்டார். திரு. மனோகரன் அவர்களும் இதுபற்றிக் கேட்டார். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்தியில் இருக்கக்கூடிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களோடு பேசியிருக்கிறார்கள். நாங்களும் பேசியிருக்கிறோம். கர்நாடக அரசோடும் பேசியிருக்கிறோம். எந்த அரசாங்கம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது என்பதிலே ஒரு தகராறு வரும். எனவே, தமிழக அரசாங்கமும் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டியதில்லை, கர்நாடக அரசும் செய்ய வேண்டியதில்லை. பொதுவாக மத்தியிலே இருக்கக்கூடிய N.T.P.C. போன்று N.H.P.C. என்று இருக்கிறது. National Hydro Power Corporation அந்த நீர் மின் உற்பத்தி செய்கின்ற அந்த நிறுவனம் மத்திய அரசுக்கும் சொந்தமானது. அதன் மூலமாக மின் உற்பத்தி செய்தால் - அவர்கள் நமக்கு 400 மெகாவாட் மின்சாரம், கர்நாடகத்திற்கு 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து கொடுக்கிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 நவம்பர் 22

அந்தத் திட்டம் பரிசீலனையிலே இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிஜாமுதீன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே நரிமணம் எரிவாயு திட்டம் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். ஏற்கெனவே அங்கே 5 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கூடுதலாக, இன்னும் 5 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாமா என்று பார்த்தோம். ஆனால், அந்தத் திட்டம் அமல்படுத்துவதில் இருக்கிற பிரச்சினை என்னவென்றால், தேவையான எரிவாயு கிடைக்கவில்லை. இருந்தாலும், 28 கோடி ரூபாய் செலவு செய்து அந்தத் திட்டத்தை அமல்படுத்தலாம் என்று ஆலோசித்தபோது, அங்கே உற்பத்தி ஆகின்ற மின்சாரக் கட்டணம், ஒரு யூனிட்டுக்கு 5 ரூபாய் ஆகிறது. எனவே, 5 ரூபாய் கொடுத்து ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டுமா என்று பரிசீலித்த மின்சார வாரியம், அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வேலாயுதன் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். கிழக்கு நல்லூர் பஞ்சாயத்திலே 13 வீடுகள் கட்டியிருக்கிறார்கள். பொதுப் பாதை போட்டுவிட்டார்கள். ஆனால் தெரு விளக்குகள் அந்தக் கிராமத்திற்கு வரவில்லை என்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உடனடியாக அந்த ஊராட்சி மன்றத்தை அணுகி விண்ணப்பம் போடுவார்களானால், மின்சார வாரியம் ஒரு மாதத்திற்குள்ளாக தெரு விளக்குகளை அமைத்துக்கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின்னிணைப்பு இலவசமாகக் கொடுக்கிறார்கள். அதுபோல, பின்தங்கிய சமுதாயம் மற்றும் மிகவும் பின்தங்கிய சமுதாயம் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு அந்தச் சலுகை கொடுக்கக் கூடாதா என்று கேட்டார். இந்த நடப்பு நிதியாண்டிலிருந்து ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 1249 பம்புசெட் இலக்கீடாகவும் மற்ற இனத்தவருக்கு 751 பம்புசெட் இலக்கீடாகவும் நிர்ணயம் செய்யப்பட்டு, 30-10-1999 முடிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 648 பம்பு செட்டுகளுக்கும், மற்ற பிரிவினருக்கு 228 பம்பு செட்டுகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு 31-3-2000-க்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.



1999 நவம்பர் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அப்துல் நாசர் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஆயக்குடியிலே மின் கட்டணம் செலுத்துவதற்கான ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். வாரத்திலே ஒரு நாள், திங்கட்கிழமைதோறும் செயற்பொறியாளரும் மற்றும் மாதம் ஒரு முறை மேற்பார்வைப் பொறியாளரும் மனுக்கள் வாங்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மின்சார வாரியத்திலே ஒவ்வொரு துறையிலேயும் வாரத்திற்கு ஒரு நாள் திங்கட்கிழமைதோறும் செயற்பொறியாளர் அவர்களிடத்திலே பொதுமக்கள் விண்ணப்பம் கொடுக்கலாம். மாதத்திற்கு ஒரு முறை மேற்பார்வைப் பொறியாளர் அவர்களிடத்திலே விண்ணப்பம் கொடுக்கலாம். அந்த விண்ணப்பங்கள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, ஒரு முக்கியமான பிரச்சினையை இங்கே எடுத்துச் சொன்னார்கள். மின்சார வாரியம் Coal India நிறுவனத்திடமிருந்து நிலக்கரி வாங்குகிறது. அதன் தரம் குறைவாக இருக்கிறது. அப்படித் தரம் குறைவாக இருக்கக்கூடிய அந்த நிலக்கரியை வாங்கி, அதன்மூலம் ஏறக்குறைய 318 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கின்றதே, இது நியாயம்தானா என்று கேட்டார். இது ஒரு நியாயமான கேள்வி. ஆனால் அது இந்த ஆட்சியிலே நடைபெறவில்லை. 1991-லிருந்து 1995 வரையிலே அது நடைபெற்றது. அப்போதிருந்த ஆட்சியாளர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வளவு சாம்பல் சத்து இருக்கிறதே, ஏன் அதை நீங்கள் எங்களுக்குத் தள்ளிக் கொடுக்கக் கூடாது என்று கேட்டிருக்கிறார்கள். அப்போது இருந்த மத்திய அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் 318.96 கோடி ரூபாய் எங்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. அதைச் சரி செய்யுங்கள் என்று கேட்டபோது, மத்திய அரசாங்கம், Coal Controllers' Organisation என்ற ஒரு நிறுவனத்தை நிறுவி நாங்கள் அவ்வளவையும் தள்ளுபடி செய்ய முடியாது, 64.6 கோடி ரூபாய்தான் தள்ளுபடி செய்ய முடியும் என்று இப்போது பதில் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதிலே கொண்டு இந்த அரசாங்கம் இப்போது என்ன நடைமுறையைப் பின்பற்றுகிறது என்றால் எந்த அளவுக்குச் சாம்பல் சத்து இருக்கிறதோ அந்த அளவுக்கு நாங்கள் அதற்குப் பணம் கொடுக்க மாட்டோம் என்று கண்டிப்பாகச் சொன்னோம். அதனடிப்படையிலே ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ஒருவரை நடுவராக மத்திய அரசாங்கம் நியமித்து, ஒவ்வொரு மாநிலத்திலேயும் அப்படி சாம்பல் சத்து அதிகமாக

இருக்குமானால் கொடுக்கின்ற நிலக்கரியில், அது எந்த அளவிற்கு என்று கணக்கிட்டு, அவர்தான் ஒரு முடிவெடுக்க வேண்டும். Umpire, அவர் எடுக்கிற முடிவின்படி மின்சார வாரியம் பணத்தைச் செலுத்தலாம் என்று சொன்னதன் பேரிலே மின்சார இலாகா இப்போது Grade slippage என்று சொல்லி ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நிலக்கரி வாங்குகிறோமோ அதில் எவ்வளவு சாம்பல் சத்து இருக்கிறதோ, அதைக் கழித்துக்கொண்டுதான் Coal India-வுக்குப் பணம் செலுத்துகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

மாண்புமிகு உறுப்பினர் இராசேந்திரன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஒரு கருத்தைச் சொன்னார். சென்னையில் இருக்கக்கூடிய Over-head lines-ஐ எல்லாம் எடுத்துவிட்டு ஏன் Under-ground line cables போடக்கூடாது என்று கேட்டார். அதை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், புதிய உறுப்பினர், விசுவநாதன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது, கடந்த ஆண்டு இதே அவையிலே மாண்புமிகு அமைச்சர் 5 ஆயிரம் பேருக்கு, I.T.I. படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்போம் என்று சொன்னாரே கொடுத்துவிட்டாரா என்று ஒரு கேள்வியைக் கேட்டார். 5 ஆயிரம் பேரை எடுக்க வேண்டும் என்பது மின்சார வாரியத்தினுடைய கொள்கை. அதற்கிடையில் காலித் கமிஷன் ஒரு உத்தரவு போட்டது. சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டத் தொழிலாளர்கள் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டும், இத்தனை ஆண்டுகளுக்குள் நிரந்தரப்படுத்த வேண்டும். கடந்த ஆண்டு மே மாதத்திற்குள்ளாக அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று சொன்ன காரணத்தினாலே, அதிலே 7,500 பேர்களை ஏற்கெனவே நிரந்தரம் செய்தோம். அதிலே I.T.I. படித்தவர்களும் இருக்கிறார்கள். ஆனால், எவ்வளவு பேர் இருக்கிறார்கள்; இன்னும் எவ்வளவு பேர் நிரப்பப்பட வேண்டும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து, 5 ஆயிரம் பேரில் 3 ஆயிரம் பேர் ஏற்கெனவே நியமிக்கப்பட்டிருந்தால், மீதி 2 ஆயிரம் பேரை இந்த ஆண்டு நியமிப்போம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே, ஒரு கருத்து மகாராஷ்டிராவிலே டாட்டா நிறுவனம் ஒரு ரூபாய் 10 காசுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து கொடுக்கும்போது, ஏன் தமிழ்நாட்டிலே நீங்கள் Zero Unit-க்கு 2 ரூபாய் 80 காசு கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். இந்தக் கேள்வி நியாயமான கேள்வி. அதற்குத்தான் நான் ஏற்கெனவே சுப்பராயன் அவர்கள் பேசும்போது சொன்னேன். இந்த அரசாங்கமாகப் பார்த்து எந்த மின்சார உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் விலையை நிர்ணயிப்பதில்லை. மத்திய அரசாங்கத்தில் இருக்கக்கூடிய C.E.A. நிறுவனம்தான் இதை நிர்ணயம் செய்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் டாட்டா நிறுவனம் ஒரு ரூபாய் 10 காசுக்குத் தமிழ்நாட்டிற்கு வந்து மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகிறோம் என்று சொன்னால், அவர்களை இரு கை கொண்டு அழைப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், இங்கே வந்தவர்களுக்கு, யார் யாருக்கு எவ்வளவு கொடுப்பது என்பதை, அந்த M.O.U., யார் யாருக்கு Sign செய்தோமோ அவர்களுக்கெல்லாம் P.P.A. ஒப்பந்தம் செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசுதான் கட்டணம் நிர்ணயிக்கிறதே தவிர தமிழக அரசோ அல்லது மின்சார வாரியமோ மின்சார உற்பத்திக்கான கட்டணத்தை நிர்ணயிக்கவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் வல்லரசு அவர்கள் பேசுகின்ற நேரத்திலே பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் பாக்கி வைத்திருக்கிறார்களே, அதைப்பற்றி பட்டியல் தர முடியுமா என்று கேட்டார்கள். பெரிய தொழிலாக இருந்தாலும், சிறிய தொழிலாக இருந்தாலும், மின்சார வாரியம் பில் அனுப்பி இத்தனை நாட்களுக்குள் கட்ட வேண்டும் என்று சொல்லி கட்டாவிட்டால், தயவுதாட்சண்யம் இல்லாமல் துண்டித்துவிடுகிறோம். ஆனால், ஒரே ஒரு நிறுவனம், மால்கோ என்ற நிறுவனம், அவர்களுக்கு ஏற்கெனவே காமராஜ் அவர்கள் இந்த தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்தபோது செய்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், அவர்கள், மின்சாரக் கட்டணம் உயருகின்ற நேரத்திலேயெல்லாம், மின்சார வாரியம் அந்தக் கட்டணததை உயர்த்தி, நீதிமன்றத்திற்குப் போய், பிறகு நீதிமன்றம் கொடுத்த உத்தரவின்பேரிலே அது இப்போது பேச்சுவார்த்தையிலே இருந்துகொண்டிருக்கிறது. அந்த மால்கோ நிறுவனம்தான் ஏறக்குறைய 200 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்குக் கட்டணம் தர வேண்டுமே தவிர, அதுகூட

நீதிமன்றத்திலே அந்தப் பிரச்சினை இருக்கிறதே தவிர, எந்தத் தனியார் தொழிலதிபரிடத்திலேயிருந்தும் மின்சாரக் கட்டணம் வசூலிக்காமல் இந்த வாரியம் செயல்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே முக்கியமான கருத்து ஒன்றைச் சொன்னார்கள். நீங்கள் மின்சாரம் உற்பத்தி செய்கின்றீர்கள். ஆனால், எல்லாவற்றையும் தனியார் துறைக்கே கொடுத்துவிடுகிறீர்களே, பொதுத் துறைக்கே மின்சார உற்பத்தி கிடையாதா என்று கேட்டார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன், ஏற்கெனவே இருந்த அரசாங்கம் செய்த M.O.U. எது, எது இருக்கிறது என்று பார்த்து, அந்த 12 நிறுவனங்களுக்கும் நாங்கள் ஒப்பந்தம் செய்து கொடுத்துவிட்டு, நம்முடைய மின்சார இலாகாவே பொதுத் துறையிலே மின்சார உற்பத்தி செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் விரும்பிய காரணத்தினாலே, வட சென்னையிலே 500 மெகாவாட் திறன்கொண்ட 2 மின்சார உற்பத்தி நிலையங்களும், தூத்துக்குடியிலே 500 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஒரு நிறுவனமும் நிறுவுவதற்கு நாங்கள் ஏற்கெனவே மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறோம். அனுமதி வந்தவுடனே மின்சார இலாகா அந்தப் பணியை மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் ஜீவன்தாரா திட்டத்தின் மூலமாக வெட்டப்பட்ட கிணறுகளுக்கெல்லாம் எப்போது நீங்கள் மின்சாரம் வழங்குவீர்கள் என்று கேட்டார்கள். ஆண்டு ஒன்றுக்கு 1,249 பம்பு செட்டுகள் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கும், 751 பம்பு செட்டுகள் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் அல்லாதவர்களுக்கும், ஆக 2 ஆயிரம் கிணறுகளுக்கு இப்போது நாங்கள் மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதை மேலும் அதிகப்படுத்த முடியுமா என்று மின்சார வாரியமும் அரசாங்கமும் பரிசீலிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். ஏதோ, மின்சார வாரியம் சுற்றுலா இலாகா போல் செயல்படுகிறது; அதனுடைய தலைவர்கள் அடிக்கடி



மாற்றப்படுகிறார்கள்; மூன்று ஆண்டுகளுக்காவது ஒரு தலைவர் நிரந்தரமாக இருந்தால்தான் அந்த இலாகா சிறப்பாகச் செயல்படும் என்று சொன்னார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்கள். இதுவரையில், தமிழக மின்சார வாரியத்தில் எவ்வளவு பேர் மின்சாரம் வேண்டுமென்று விண்ணப்பித்து இருக்கிறார்கள் என்று கேட்டார்கள். அதற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்; 4 இலட்சம் பேர் விண்ணப்பித்து இருக்கிறார்கள்; அவர்களுக்கு நாம் முறைப்படி, seniority-படி சர்வீஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். 4 இலட்சம் பேர் விண்ணப்பித்து இருக்கிறார்கள். 4 இலட்சம் விண்ணப்பங்கள் நிலுவையிலே இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், நம்முடைய உற்பத்தியை ஏறக்குறைய 5,280 மெகாவாட் அளவிற்கு இப்போது உயர்த்தி இருக்கிறோம். ஏற்கெனவே 4,800 மெகாவாட்டிலே இருந்தோம். ஜி.எம்.ஆர். வாசவி பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் 196 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து இப்போது நமக்கு வழங்கிக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே, பேசின் பிரிட்ஜிலே இருக்கக்கூடிய நமக்குச் சொந்தமான மின் நிறுவனம் 120 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திசெய்து கொண்டிருக்கிறது. அதுவும் நமக்கு வந்து கொண்டிருக்கிறது. சாத்தனூரில் நீர்மின் திட்டம் 15 மெகாவாட்டுக்கு திட்டமிடப்பட்டு, 7.5 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்து, அதுவும் நமக்கு இப்போது கிடைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, ஏறக்குறைய 5,215 மெகாவாட் மின்சாரம் இப்போது நமக்கு இருக்கிறது. ஆனால், நம்முடைய தேவை 5,500 மெகா வாட் மின்சாரம்.

கடந்த ஆண்டைப் போன்று, இந்த ஆண்டைப் பொறுத்தவரையில், மின்சார வெட்டு இல்லை. பல பேர் சொன்னார்கள், மின்சார வெட்டு, அறிவிக்கப்படாத மின்சார வெட்டு எல்லாம் இருக்கிறது என்று சொன்னார்கள். மின்சார வெட்டு என்பது வேறு; மின்சாரத் தடை என்பது வேறு. மின்சார வெட்டு என்பது, அதை நாம் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்திலே அறிவித்தோம். நமக்குத் தேவையான மின்சாரம் இல்லாத காரணத்தினாலே 30 சதவீதம் தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டு அறிவித்தோம். 130 குதிரை சக்திக்கு மேலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளுக்கெல்லாம் 30 சதவீதம் மின்சார

வெட்டு என்று அறிவித்தோம். அதை இரண்டு மாதங்களிலே எடுத்துவிட்டோம். அதற்குப் பின்னாலே, இந்த நாள் வரை மின்சார வெட்டு எந்தத் தொழிற்சாலைக்கும் அறிவிக்கப்படவில்லை. ஆனால், மின்சார வெட்டைப் பற்றி பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஞானசேகரனாக இருந்தாலும், யாராக இருந்தாலும் தமிழ்நாட்டைவிட்டு தயவுசெய்து இந்தியாவிலே எந்தப் பகுதிக்கு வேண்டுமானாலும் போங்கள். தமிழ்நாட்டைவிட.....(குறுக்கீடு)

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரத் தடைக்கும் மின்சார வெட்டுக்கும் இதுவரை எதிர்க்கட்சியாகிய எங்களுக்கு விளக்கமே புரியவில்லை. சென்ற முறைகூட, ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இதே பிரச்சினை வந்து, அவர் ஒரு பதில் சொன்னார். எவ்வளவு நேரம் மின்சாரம் வராமல் இருந்தால், அது மின்சாரத் தடை; எவ்வளவு நேரம் மின்சாரம் வராமல் இருந்தால், அது மின்சார வெட்டு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு என்னுடைய பதில் இதுதான். தமிழகத்திலே மின்சாரம் தேவையான அளவிற்கு இல்லை. ஆகவே, இத்தனை சதவீதம் மின்சார வெட்டு அறிவிக்கிறோம் என்று சொன்னால், அது மின்சார வெட்டு. மின்சார தடை என்னவென்று கேட்டால், சில நேரங்களிலே தமிழ்நாடு முழுவதற்கும்—இப்போது சொல்கிறேன், இன்று நம்மிடத்திலே 5,300 மெகாவாட் மின்சாரம் இருக்கிறது. நம்முடைய தேவை 4,900 மெகாவாட், இருந்தாலும், திடீரென்று பக்கத்திலே இருக்கக்கூடிய கர்நாடகாவோ அல்லது ஆந்திராவோ மின்சாரத்தை உறிஞ்சி விடுகிறார்கள்; அப்படி உறிஞ்சி விடுவார்களேயானால், அந்தநேரத்திலே, திடீரென்று தடை ஏற்பட்டுவிடுகிறது. அப்படி தடை ஏற்படுகின்ற நேரத்திலே, 2 மணி நேரம், 1½ மணி நேரம் அதைச் சரி செய்வதற்காக நாம் நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த நேரத்திலே தடை ஏற்பட்டுவிடுகிறது. அதுமட்டுமல்லாமல், சில இடங்களிலே load shadding செய்கிறோம். load shadding எந்தெந்த இடங்களிலே என்று கேட்டால், உதாரணத்திற்குச் சொல்கிறேன். சென்னையிலே இந்து பத்திரிகையை எடுத்துப் பார்த்தால், இந்த area-விலே load shadding செய்கிறோம் என்று அறிவிக்கிறோம்; அப்படி சில இடங்களிலே அறிவித்துவிடுகிறோம். சில இடங்களில் அறிவிக்காமலேயே ஒரு மணி நேரம், 1/2 மணி நேரம் மின்சாரத்





தடை ஏற்பட்டுவிடுகிறது. அது எதனால் என்றால், அந்த இடத்திலே இருக்கக்கூடிய sub station அந்த இடத்திலே இருக்கக்கூடிய டிரான்ஸ்ஃபார்மர் இவற்றைப் பொறுத்துத் தடை ஏற்படுகிறதே தவிர, அங்கேயெல்லாம் தடை ஏற்படுத்த வேண்டும் என்பது அரசாங்கத்தினுடைய நோக்கமல்ல என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

உதாரணத்திற்குச் சொல்கிறேன். மின் வெட்டு நம்முடைய மாநிலத்திலே ஒரே ஓர் ஆண்டுதான் 30 சதவிதம் அறிவித்தோம். ஆந்திராவிலே 1-4-1997-லிருந்து 9-5-1997 வரை 40 சதவீதம் மின்வெட்டு அறிவித்தார்கள். கர்நாடகாவிலே 50 சதவீதம் மின்வெட்டு அறிவித்தார்கள். கேரளாவிலே 1997-ல் 1-4-1997-லிருந்து 8-6-1997 வரையில் முதலிலே 50 சதவீதம் அறிவித்தார்கள். பிறகு 100 சதவீதம் மின் வெட்டு அறிவித்தார்கள். அப்போது அவர்களுக்குப் பற்றாக்குறை அதிகமாக இருந்தது. நேராக தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். நம்முடைய முதலமைச்சரைச் சந்தித்தார்கள். எங்களுக்குத் தெருவிளக்கே எரிய வைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, எப்படியாவது எங்களுடைய மாநிலத்தைக் காப்பாற்றுங்கள் என்று கேட்டவுடனே, தலைவர் அரசியலைப் பார்க்கவில்லை. உடனே எங்களையெல்லாம் அழைத்து, அவர்கள் கேட்கின்ற மின்சாரத்தைக் கொடுங்கள் என்று சொன்னார்கள். நான்கூட அப்போது சொன்னேன், இந்த நேரம்தானே நல்ல நேரம், நாம் தண்ணீரைப் பற்றி பேசலாமா என்று சொன்னேன். நம்முடைய வீட்டைத் தேடி வந்தவர்களிடம் இதையெல்லாம் பேசக் கூடாது, அவர்கள் கேட்பதைக் கொடுங்கள் என்று சொன்னார். உடனே அவர்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்தோம். அதனாலே 100 சதவீதம் மின்சார வெட்டு அறிவித்தவர்கள், படிப்படியாக 75 சதவீதம், 70 சதவீதம், 50 சதவீதம் என்று மின்சாரவெட்டு அறிவித்தார்கள். கடைசியாக 1-9-1997-லிருந்து 31-3-1998 வரையிலே 30 சதவீதம் மின் வெட்டு அங்கேயும் அமலிலே இருந்தது.

அதைப்போல, மின்தடை என்று எடுத்துக்கொண்டால், கர்நாடக மாநிலம்—இதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன்—அங்கே தெளிவாக அறிவித்து விடுகிறார்கள். கிராமப் பகுதிகளிலே தினந்தோறும் 6 மணி நேரம் மின்சாரம் கிடையாது. நகர்ப் பகுதிகளிலே 4 மணி நேரம் மின்சாரம் கிடையாது. அதைப்போல, கேரளாவிலே நகர்ப்புறங்களிலே

தினந்தோறும் 1½ மணி நேரம் மின்சாரம் கிடையாது. அதைப்போல- டெல்லியிலே பகல் நேரத்திலே 4 மணி நேரம் மின்சாரம் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், தலைநகரமாக இருக்கக்கூடிய டெல்லியில் பற்றாக்குறை—டெல்லியிலே மட்டும் சொல்கிறேன்—900 மெகாவாட் பற்றாக்குறை இருக்கிறது. இப்படி இந்தியா பூராவிலும் பற்றாக்குறை இருக்கின்ற நேரத்திலே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே, ஓரளவிற்குத் தமிழ்நாட்டில்தான் மின்சாரத் துறை மிகச் சிறந்த முறையிலே இயங்கிக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு இல்லை. அடுத்த ஆண்டு இருக்குமா என்றால் நான் சொல்வேன். இனி இந்த ஆட்சி இருக்கின்ற வரையிலே, எத்தனை ஆண்டுகள் இருந்தாலும் தொழிற்சாலைகளுக்கு மின்சார வெட்டே இருக்காது என்பதை நான் பகிரங்கமாக அறிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எந்த தைரியத்தில் இதை நான் அறிவிக்கிறேன் என்று சொன்னால், நாம் இப்போது, கிழக்குப் பிராந்தியத்திலேயிருந்து 150 மெகாவாட் மின்சாரம் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறோம். பஞ்சாப் மாநிலத்திலேயிருந்து 100 மெகாவாட் மின்சாரம் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்திருக்கிறோம். கேரளாவிலே ஒரு அனல் மின்நிலையம் வந்துவிட்ட காரணத்தினாலே, அவர்களும் 100 மெகாவாட் நமக்குத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் வாங்கிக்கொள்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம். இவையல்லாமல், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டார்களே, இந்த M.O.U. ஒப்பந்தம் செய்த மின் திட்டங்கள் எல்லாம் எப்போது நடைமுறையில் வந்து உற்பத்தியைத் தொடங்கும் என்று. கோயில்களப்பாலில் 100 மெகாவாட் திட்டம், எரிவாயுவை அடிப்படையாகக் கொண்டது. மின் உற்பத்தி அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள்ளாக 100 மெகாவாட் உற்பத்தியை நமக்குத் தரும். சமயநல்லூரிலே 106 மெகாவாட், சாமல்பட்டியிலே 106 மெகாவாட், பிள்ளைபெருமாள்நல்லூரிலே 330 மெகாவாட், ஆக மொத்தம் 642 மெகாவாட் மின்சாரம் 2000 ஆண்டு டிசம்பருக்குள்ளாக நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினாலே 2001-லேயும் மின்சார வெட்டு இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் இனிமேல் எந்தத் தொழிலதிபர்களும் மின்சார வெட்டு வந்துவிடுமோ





என்று அச்சப்பட வேண்டிய அவசியமில்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே மின் விநியோகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். தெரு விளக்குகள் என்ன ஆயிற்று என்று கேட்டார்கள். 1999-2000-லே நாம் எவ்வளவு குறியீடு வைத்திருக்கிறோம் என்றால், 69,714 தெரு விளக்குகள் பொருத்த வேண்டுமென்று நாம் குறியீடு முடிவு செய்து வைத்திருக்கிறோம். ஒவ்வொரு நாளைக்கும் முதலமைச்சர் என்னையும் பார்த்துக் கேட்பார், நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. கோ.சி. மணியையும் பார்த்துக் கேட்பார். என்ன ஆயிற்று தெரு விளக்குகள் என்று. 1998-99 ஆம் ஆண்டிற்குள் 69,714 தெரு விளக்குகள் அமைக்கத் திட்டமிட்டு, இதில் 31-10-999 வரை 55,772 தெரு விளக்குகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள தெரு விளக்குகள் இந்த ஆண்டின் இறுதிக்குள், அதாவது 31-12-999-க்குள் முடிக்கப்பட்டுவிடும். 1999-2000 ஆண்டிற்குள் மேலும் 30,000 தெரு விளக்குள் அமைக்க ஆவன செய்யப்பட்டு வருகின்றது.

இன்னும் ஒன்று, மேல்நிலை குடிநீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பதிலே முதலமைச்சர் அவர்கள் தினந்தோறும் எங்களை வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். 4,372 கிராமங்களுக்கு மின் இணைப்பு இந்த ஆண்டு கொடுத்துவிட்டோம். இருந்தாலும், 1,017 இடங்களிலே கிணறுகள் வெட்டி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, மின் இணைப்பிற்காகக் காத்துக்கொண்டிருந்தார்கள். அந்தப் பட்டியல் முதலமைச்சருக்குச் சென்றவுடனே, அந்தக் குடிநீர்த் தொட்டிகளுக்கு வேண்டிய மின் இணைப்பினை, 1,017 இடங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள். அதை மின்சார வாரியத்திற்கு உடனடியாக அனுப்பி வைத்தேன். அவர்கள் இந்த மாதத்திற்குள்ளாகவே அந்த 1,017 இடங்களிலேயும் மின் இணைப்பு கொடுத்துவிடுவதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே, நிச்சயம் அதை நாம் செய்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

இந்த ஆண்டு 300 உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று நினைத்தோம். அதிலே 118 தொழிற்சாலைகளுக்கு இதுவரையிலே கொடுத்துவிட்டோம்.

அதைப்போல, 15 ஆயிரம் சிறு தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு கொடுத்தாக வேண்டுமென்று இலக்கு நிர்ணயித்தோம். 7537 தொழிற்சாலைகளுக்குக் கடந்த 31-10-1999 வரை கொடுத்துவிட்டோம்.

அதைப்போல, வீடுகளுக்கு மின் இணைப்புகள். அதைத்தான் இங்கே முதலிலேயே சொன்னேன். ஓர் ஆண்டுக்கு வீடுகளுக்கு மட்டும் எவ்வளவு பேருக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டி இருக்கிறது என்றால், குறைந்தது 4 இலட்சம் பேருக்குக் கொடுக்க வேண்டி இருக்கிறது. இந்த ஆண்டு கொடுத்திருப்பது மட்டும் ஏறக்குறைய 3,73,000 பேருக்கு இந்த அக்டோபர் மாதம் வரையிலே. எனவே, இப்படி ஒவ்வோர் ஆண்டும் 6 இலட்சம் பேர், 7 இலட்சம் பேர் வீடுகளுக்கும் இணைப்பு கேட்கிறார்கள்; விவசாயத்திற்கும் கேட்கிறார்கள், தொழிற்சாலைகளுக்கும் கேட்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மின் விநியோகத்திலே மேலும் புதிய திட்டங்கள் தீட்ட வேண்டுமென்று ஒரு முடிவெடுத்தோம். முதலமைச்சர் சென்னையிலே இருக்கிறார். இங்கே தலைநகர் சென்னையிலேயே சில நேரங்களிலே மின் தடை ஏற்படுகிறது. அதைப் போக்குவதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசித்தபோது, 40, 45 ஆண்டுகளுக்கு முன்னாலே போடப்பட்ட கேபிள்கள், டிரான்ஸ்ஃபார்மர்கள் இவற்றையெல்லாம் மாற்றினால்தான் நல்ல தரமான மின்சாரம் கிடைக்கும் என்று சொன்ன காரணத்தாலே 90 கோடி ரூபாய் செலவிலே 8 புதிய துணை மின்நிலையங்கள் சென்னையில் மட்டும் அமைப்பது, 15 துணை மின்நிலையங்களுடைய அதிகப்படியான திறன் கொண்ட டிரான்ஸ்ஃபார்மர்கள் பொருத்துவது, 1,123 Distribution டிரான்ஸ்ஃபார்மர்கள் பொருத்துவது, 425 கி.மீ.க்கு கேபிள்கள் பொருத்துவது, 1,750 Pillar Box பொருத்துவது போன்ற நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமாக 90 கோடி ரூபாய் திட்டத்திலே வரும் மார்ச் மாதத்திற்குள்ளாக மின்சார இலாகாவிலே குற்றங்களே வராத அளவுக்கு, குறைபாடுகளே இல்லாத அளவுக்கு இப்பொழுது திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதைச் சொன்னவுடனே முதலமைச்சர் அவர்கள் அடுத்த கட்டமாக மற்ற மாநகராட்சிகளிலும் இதைச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் கோவைக்கு சுமார் 50 கோடி ரூபாய் திட்டத்திலேயும், சேலம் மாநகராட்சிக்கு 40 கோடி ரூபாய் திட்டத்திலேயும், மதுரை மாநகராட்சிக்கு 50 கோடி ரூபாய் திட்டத்திலேயும், திருச்சி மாநகராட்சிக்கு 40 கோடி ரூபாய்



திட்டத்திலேயும், நெல்லை மாநகராட்சிக்கு 20 கோடி ரூபாய் திட்டத்திலேயும் ஓராண்டுக்குள்ளாக இந்தத் திட்டங்களை நிறைவேற்ற அரசு முடிவெடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான மின்சாரம் தருவதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடந்த 6 மாத காலத்தில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில் 89 டெக்ஸ்டைல்ஸ் மில்கள் தங்களுடைய மின்சார இணைப்பை surrender செய்திருக்கிறார்கள். ஏறக்குறைய 38 ஆயிரம் K.V.A. மின்சாரத்தை, தங்களுக்கு வேண்டாமென்று சொல்லி உங்களுக்கே திருப்பி தந்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் தரமான மின்சாரத்தை மின்சார வாரியத்தால் அந்தத் தொழிற்சாலைகளுக்கு வழங்க முடியாததுதான். எனவே, தரமான மின்சாரத்தைத் தருவதற்கு இவ்வளவு செலவு செய்தும்கூட பெரிய தொழிற்சாலைகள் ஏன் surrender செய்கிறார்கள்? அதை மின்சார வாரியம் ஆய்வு செய்ததா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான மின்சாரம் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, ஆலை அதிபர்கள் திருப்பித் தந்ததற்குக் காரணம். அந்த ஆலைகள் நசிந்து போயிருக்கின்றன. அவர்களாலே நடத்த முடியவில்லை. அதுதான் முக்கியமான காரணமே தவிர, தரமற்ற மின்சாரம் கிடைக்கிறது என்பது மட்டுமல்ல. அது ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் உண்மையான காரணம் அவர்களாலே நடத்த முடியவில்லை என்பதைத் தெரிவித்துகொள்ள விரும்புகின்றேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து சொல்லப்பட்டிருக்கிற விளக்கம் என்னவென்றால், டீசல் ஜெனரேட்டரிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தைக் காட்டிலும், அரசு வழங்குகின்ற மின்சாரம் விலை கூடுதலாக இருக்கிற காரணத்தால், நாங்கள் அதை வேண்டாம் என்று சொல்லிவிட்டோம் என்பது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாராளமாக அவர்கள் டீசலை வைத்துக்கொண்டே மின்சாரத்தைத் தயார்செய்து கொள்ளலாம். அவர்கள் ஜெனரேட்டரை பயன்படுத்திக்கொள்ளலாம். இப்பொழுது டீசல் விலை உயர்ந்தவுடனே

அந்தத் தொழிலதிபர்கள் எல்லாம், மறுபடியும் டீசல் விலை உயர்ந்துவிட்டது. நாங்கள் உங்களுடைய மின்சாரத்தையே எடுத்துக்கொள்கின்றோம். எனவே, நாங்கள் டீசல் என்ஜினை நிறுத்திவிடுகிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திலே கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன், கோவை மாவட்டத்திலே தரம் சரியாக இருக்கிறது, விலைதான் சரியில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், திரு. அழகிரி வேறு மாதிரிச் சொல்கிறாரே ?

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் பெரிய கட்டுரையே வந்திருக்கிறது. நான் அதை அமைச்சரிடம் கொடுக்கிறேன். அதிலே தரம் சரியில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸை இங்கே ஆதாரமாகக் காட்டுகிறார். அங்கு எனக்கு உறவினர்களே இருக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற காரணம், ஏன் என்னுடைய சம்பந்தியேகூட, ஒரு பஞ்சாலை வைத்துக் கொண்டிருப்பவர்தான். அவர் சொல்கின்ற காரணம், 'எங்களுக்குக் கட்டுப்படி ஆகவில்லை'. (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் சொல்வதைப்போல, எல்லா தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் தெரியும்; தொழிலாளிகளுக்கும் தெரியும். பஞ்சாலைகள் இலாபகரமாக இயங்க முடியவில்லை; அதுதான் உண்மையான காரணம். நேரம் இல்லாத காரணத்தால், விளக்கம் அதிகம் தேவையில்லை.

இந்த அரசாங்கம் துணை மின் நிலையங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று விரும்பியது. இதற்கு முன்பு இருந்த ஆட்சியிலே ஆண்டு ஒன்றுக்கு 40 துணை மின் நிலையங்களைத்தான். கட்டிக் கொண்டிருந்தார்கள். அதனாலே, பல பகுதிகளிலே, கிராமங்களிலே மின்சாரம் சரியாகக் கிடைக்கவில்லை; தரமான மின்சாரம் கிடைக்கவில்லை; எங்கு பார்த்தாலும் பல்புகள் சரியாக எரியவில்லை





என்ற குறை இருந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனேயே நாற்பதை, அறுபதாக உயர்த்துங்கள் என்று சொல்லி, ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 100 கோடி ரூபாயை புதிய துணை மின் நிலையங்களுக்குக் கூடுதலாகச் செலவிடும்படிக் கேட்டார்கள். அதன்படி, இந்த மின்சார வாரியம் செலவு செய்து, புதிய துணை மின் நிலையங்களை ஆண்டொன்றுக்கு அறுபது இடங்களிலே உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின் இழப்பைப் பற்றிச் சொன்னார்கள். இந்தியாவில் சராசரியாக மின் இழப்பு 21 சதவிகிதம். நம்முடைய மாநிலத்திலே மின் இழப்பு 16.9 சதவிகிதம். இன்னும் இரண்டு ஆண்டுக் காலத்திலே 16.9 சதவிகிதம் என்பதை 14 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று, அதற்கான நடவடிக்கைகளிலும் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். விளக்கங்கள் சொல்வதற்கு நேரமில்லை. ஆகவே. இரண்டு ஆண்டுகள் பொறுத்து நிச்சயமாக மின்சார வாரியத்தினுடைய இழப்பை 14 சதவிகிதம் அளவிற்குக் கொண்டு வருவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார சீரமைப்பு மற்றும் கட்டுப்பாடு ஆணையத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். மத்திய அரசாங்கம் ஏற்கெனவே ஒரு முடிவு எடுத்து, இந்தியாவில் ஒரிசா, ஆந்திரம் மற்றும் ஹரியானா போன்ற மாநிலங்களிலே அந்தக் கட்டுப்பாடு ஆணையம் நிர்ணயிக்கப்பட்டு, ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதிலே, நம்மைப் பொறுத்தவரையிலே, நாமும் அந்த ஆணையத்தை உருவாக்கிவிட்டோம். திரு. வெங்கடேசன், ஐ.ஏ.எஸ். என்பவரைத் தலைவராகவும், திரு. ஈ.சி. அருணாசலம் என்ற ஒரு பொறியாளரை உறுப்பினராகவும், திரு. அனுமந்தராவ் என்ற அதிகாரியை உறுப்பினராகவும் கொண்டு அந்த ஆணையத்தை அமைத்துவிட்டோம். ஆனால், திரு. வெங்கடேசன் என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி உடல்நிலை சரியில்லாத காரணத்தினால், அவர் இன்னும் அந்தப் பணியிலே சேரவில்லை. மீதி இரண்டு உறுப்பினர்களும் சேர்ந்திருக்கிறார்கள். அந்த ஆணையம் வெகு விரைவிலே இயங்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

அதோடு, இந்த தமிழ்நாடு மின்சாரச் சீரமைப்பு மற்றும் கட்டுப்பாடு ஆணையம் உருப்படியாகச் செயல்பட முடியுமா என்ற ஒரு சந்தேகம் வந்தது. தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சீரமைப்பதற்கான தேவை பற்றி ஆய்வு செய்வதற்காக Ernest and Young என்ற நிறுவனத்திலே,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 நவம்பர் 22

ஒரு ஆலோசகரிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, மார்ச் மாதத்திற்குள்ளாக அறிக்கை தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஏனென்றால், பல தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அதையெல்லாம் மனதிலே கொண்டு, இந்த ஆணையத்தைச் செயல்பட வைப்பதா அல்லது என்ன செய்வது என்று யோசிப்பதற்கு ஒரு அறிக்கை கேட்டிருக்கிறோம். அந்த அறிக்கை கிடைத்தவுடனே அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, frequency குறைவு ஏற்படுவதாலே ஏற்பட்ட பிரச்சினைகளை எடுத்துச் சொன்னேன். பக்கத்திலே இருக்கிற இரண்டு மாநிலங்களும் நமக்குப் பெரிய தலைவலியாக இருக்கின்றன. நம்மைக் கேட்காமலேயே, நமக்குத் தெரியாமலேயே, திடீர் திடீரென்று மின்சாரத்தை எடுத்துவிடுகிறார்கள். அதுகுறித்து மின்சார வாரியத் தலைவர் டெல்லிக்குச் சென்று, கண்டிப்பாகப் பேசிவிட்டு வந்திருக்கிறார். எங்களுடைய மின்சாரத்தை ஆந்திர மாநிலமோ அல்லது கர்நாடக மாநிலமோ உறிஞ்சுவார்களேயானால், அதனுடைய விளைவுக்கு மத்திய அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று சொன்னதன் பேரிலே, நம்முடைய மத்திய மின் துறை அமைச்சர் அவர்கள், நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அதுமட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சருடைய தலைமையிலே 4ஆம் தேதி அன்று, அவரும் இங்கே வந்து, அதிகாரிகளும் கலந்து கொள்ளும் ஒரு கூட்டத்தைக் கூட்டி, எப்படி இந்த மின்சாரத்தை மற்ற மாநிலங்களிலேயிருந்து எடுத்துக்கொள்வதைத் தடுக்கலாம் என்பது குறித்த பல பிரச்சினைகளை விவாதிக்க இருக்கிறோம். அதிலே இதுவும் ஒரு பிரச்சினையாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, இதுவரையிலே, பல்வேறு வழிகளில் மின்சாரம் உற்பத்தி செய்தோம்; அனல் மின் நிலையம் மூலமாக உற்பத்தி செய்தோம். நீர் மின் நிலையங்களை அமைத்தோம். எரி வாயு மூலமும் மின் திட்டங்கள் தீட்டினோம். காற்றாலைகள் மூலமாக மின்சாரத்தை எடுத்தோம். ஆனால், co-generation கரும்பு ஆலைகளிலேயிருந்து மின்சாரத்தை இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த அரசு, இப்போது, captive power என்று புதிதாக ஒன்றை அறிவித்து, தொழில் அதிபர்கள் யாராவது தாங்களே மின்சாரத்தை உற்பத்தி செய்து, தங்களுக்குத் தேவையான மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மீதி இருப்பதை மின்சார வாரியத்திற்குக் கொடுக்க முன்வந்தால், அதை அனுமதிக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள் அமைச்சரவைக் கூட்டத்தையே கூட்டி ஒப்புதல் தந்திருக்கிறார்கள்.



1999 நவம்பர் 22] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பிற்பகல் 1-20

அதன் மூலம் நமக்கு என்ன இலாபம் என்று கேட்டால், தனியார் அப்படி மின்சாரம் உற்பத்தி செய்து அவர்களுக்குத் தேவையான மின்சாரத்தை எடுத்துக் கொண்டு மிச்சமிருக்கிற மின்சாரத்தை ஒரு யூனிட் ரூ.2.25-க்குத்தான் நமக்கு விற்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதன் மூலம் மின்சா! இலாகாவிற்குக் கூடுதலாக இலாபம்கூட கிடைக்கும். இப்படியும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் எங்கெங்கிருந்தெல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று யோசித்தோம். குப்பைக்கூளங்களிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யலாம் என்று அதற்கு 12 மெகாவாட்டிற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். நம்முடைய சென்னை மாநகராட்சி அன்றாடம் எடுக்கப்படும் கழிவிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய அனுமதி கேட்டார்கள், பெருங்குடியிலே. அதற்கும் அனுமதியைத் தந்திருக்கிறோம். சூரிய வெளிச்சம் நமக்கு ஏராளமாக இருக்கிற காரணத்தினாலே சூரிய வெளிச்சத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் நாம் அனுமதி கொடுத்திருக்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அப்பாவு அவர்கள் பேசுகின்ற நேரத்திலே ஒரு பூதாகரமான செய்தியை இங்கே சொன்னார்கள். தமிழ்நாடே shock அடிக்குமோ; 19,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் போவதாகச் சொல்கிறீர்களே என்னவாகும் என்று கேட்டார்கள். 1994-லே ஒப்பந்தம் செய்யப்பட்ட 12 தொழில் நிறுவனங்கள் ஏற்கெனவே இருந்த ஆட்சியிலே Power Purchase Agreement ஆகாத காரணத்தால், முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே பத்திரிகையாளர்களிடத்திலே சொன்னார்கள். This Government is transparent Government. எந்தத் தொழில் அதிபர் ஆனாலும் எந்தத் தனியார் ஆனாலும் முதலீடு செய்யலாம் என்று சொன்னவுடனே, M.O.U. ஒப்பந்தம் செய்தவர்கள் யார் யார் வேண்டாம் என்று போய்விட்டார்களோ அவர்கள் எல்லாம் மீண்டும் வந்து, நெய்வேலியிலே Zero Unit STCMS நிறுவனம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அணுகினார்கள். அவர்கள், நாங்கள் எல்லாவிதமான ஒப்பந்தமும் கையெழுத்தாகி, நிறுவனம் 3-11-1999

அன்று நிதி இறுதியாக்கம் செய்துவிட்டது. அந்த விழாவிலே நானும் கலந்து கொண்டேன். பிள்ளைபெருமாள்நல்லூர் திட்டத்திற்கு Financial closure செய்து 330 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அவர்களும் முடிவு எடுத்துவிட்டார்கள். வட சென்னை அனல் மின் திட்டம், வீடியோகான் 1050 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு Escrow கொடுக்க வேண்டும். சில நிபந்தனைகளோடு அதை அனுமதித்து இருக்கிறோம். அதைப்போல சமயநல்லூர் மின் திட்டத்தின் நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம் வங்கிதாரர்கள் (SBI) ஆகியோர்களால் 26-10-1999 அன்று வருமான அடமான ஒப்பந்தம் (Escrow) கையெழுத்திடப்பட்டது. நிறுவனம் நிதி இறுதியாக்கம் செய்ய வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் திட்டம் கடந்த ஆட்சியிலிருந்து பலமுறை சொல்லப்பட்டுவிட்டது. ஏற்கெனவே, நீங்கள் அதற்கு initial, P.P.A. போட்டிருக்கிறீர்கள். அதற்கு மூன்றாவது மாதத்திலேயே நீங்கள் Power Purchase Agreement-ல் சுருக்கொப்பம் போட்டும்கூட, அதற்காக ஓர் அரசாணை 12-7-1999-ல் கொடுத்தும்கூட அந்த Power Purchase Agreement போடப்படவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அதைத்தான் சொல்லப் போகிறேன். ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டு வருகிறேன். அதைப்போல, பேசின் பிரிட்ஜ் ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனம் ஏற்கெனவே இயங்கிவிட்டது. வட சென்னை Trisakthi—நிறுவனம் 525 மெகாவாட் உற்பத்திக்கு ஏற்கெனவே அவர்கள் C.E.A. Clearance பெற்றிருக்கிறார்கள். இன்னும் P.P.A. ஆகவில்லை. ஸ்பிக் நிறுவனம் 525 மெகாவாட் அவர்களுக்கு ஏற்கெனவே நாங்கள் இனிஷியல் செய்திருக்கிறோம்,. ஆனால் P.P.A. ஒப்பந்தம் ஆகவில்லை. சென்னை பவர் ஜெனரேஷன் லிமிடெட் 1047 மெகாவாட்டிற்கு இனிஷியல் செய்திருக்கிறோம் ஒப்பந்தம் செய்யவில்லை. கடலூர் பவர் ஜெனரேஷன் கார்ப்பரேஷன் 1320 மெகாவாட்டிற்கு இனிஷியல் செய்திருக்கிறோம், ஒப்பந்தம் செய்யவில்லை. வேம்பார் Gas Power Project 1873 மெகாவாட்டிற்கு இனிஷியல் செய்திருக்கிறோம், ஒப்பந்தம் செய்யவில்லை. திருமுட்டம் 250 மெகாவாட் பழுப்பு நிலக்கரி அனல் மின் திட்டத்திற்கான மின் கொள்முதல் ஒப்பந்தம் இன்னும் சுருக்கொப்பமிடப்படவில்லை. ஏனென்று கேட்டால், இந்தத் தொழில் அதிபர்கள் எல்லாம் எங்களுக்கு Escrow பெற்றுத் தந்தால்தான் நாங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியும் என்று சொல்கிறார்கள். எனவே அதைச் செய்ய முடியவில்லை.



மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் கேட்பதைப் போல ஜெயங்கொண்டம் ரிலையன்ஸ் கம்பெனி open tender மூலமாக வந்து, global tender மூலமாக வந்து, அவர்கள்தான் Lowest—L.1-ஆக இருக்கிற காரணத்தால் அவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டோம். அதற்கு P.P.A. ஒப்பந்தம் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஜூலை மாதத்திலிருந்து அந்த நிறுவனத்தை அழைத்துக் கொண்டிருக்கிறோம். வாருங்கள் ஒப்பந்தம் செய்யுங்கள் என்று, அவர்களும் என்ன சொல்கிறார்கள் என்றால், எங்களுக்கு Escrow பெற்றுத் தாருங்கள். அப்போதுதான் நாங்கள் ஒப்பந்தம் செய்வோம். அது இல்லாவிட்டால் எங்களால் முடியாது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் பரிந்துரை செய்து, மின்சார இலாகாதான் P.P.A செய்வதற்குத் தயாராக இருக்கிறது என்று பரிந்துரை செய்து அனுப்புவார்களேயானால், நாளைக்கே எங்களுடைய தலைவர், மின் வாரியத் தலைவர் செய்வதற்குத் தயாராக இருக்கிறார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் Power Purchase Agreement-க்கு எல்லாம் initial— செய்திருக்கிறோம் என்று கூறுகிறீர்கள். அதை எப்போது conclude செய்யப் போகிறீர்கள். Escrow என்பது எங்களுக்குப் புரியவில்லை. நீங்கள் initial செய்துவிட்டீர்கள் என்று சொன்னால் அதை உடனே conclude செய்து, உடனடியாக Escrow செய்து, உடனடியாக உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி செய்ய வேண்டுமே தவிர, initial என்கிறீர்கள்; Escrow என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், வக்கீலாக இருந்துகொண்டு Escrow என்றால் என்னவென்று தெரியவில்லை என்று சொல்கிறீர்களே, ரொம்ப அவமானமாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** Initial செய்வது என்பது, மத்திய அரசாங்கத்தினுடைய ஒப்புதலுக்குச் செல்லும்போது ஒரு யூனிட் மின்சாரக் கட்டணம் எவ்வளவு என்று நிர்ணயித்து, ஒப்புதல் அளிக்கிறோம்; அப்போது initial செய்கிறோம். பிறகு, அவர்கள் குறைக்கிறார்கள். அதற்குப் பிறகு, Power Purchase Agreement போடவேண்டும். அந்த P.P.A. தான் இப்போது நிலுவையில் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

Escrow என்பது, Power Generation செய்யக்கூடியவர்களுக்கு ஒரு guarantee கேட்கிறார்கள். நாங்கள் மின்சாரத்தை உங்களுக்குக் கொடுத்தால், அந்த மின்சாரத்திற்கான கட்டணத்தை 35 நாட்களுக்குள்ளாகக் கொடுக்க வேண்டும்; அதைக் கொடுப்பீர்களா என்று கேட்கிறார்கள். அதற்கு வங்கிகள்தான் நமக்கு உத்தரவாதம் தரவேண்டும். இதுவரையிலே நமக்கு அனுமதி தந்த 2 ஆயிரம் மெகாவாட்டிற்கான Escrow அனுமதித்திருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர், மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, இன்னும் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு Escrow அனுமதி தாருங்கள் என்று கேட்கிறார்கள். ஏனென்றால், தனியார் மின்சாரம் உற்பத்தி செய்து, நமக்கு மின்சாரத்தையும் கொடுத்துவிட்டு, மின்சாரத்திற்கான கட்டணத்தை நாம் கொடுக்காமல் இருந்தால், அதற்குப் பிறகு அவர்களால், அந்த நிறுவனத்தைச் செயல்படுத்த முடியாது. எனவே, அதற்கான Guarantee-யைத்தான் அவர்கள் கேட்கிறார்கள். அதுதான் Escrow. நாம் அதைக் கொடுப்பதற்கு நம்மிடத்திலே 2 ஆயிரம் மெகாவாட்டிற்குத்தான் இருக்கிறது. இன்னும் 2 ஆயிரம் மெகாவாட்டிற்கு கேட்கிறோம். அதற்கும் 4ஆம் தேதி பேச்சுவார்த்தை நடைபெறவிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதிலே, ரூ. 800, ரூ. 1,800 ஆக்கப்பட்டது பற்றி நம்முடைய உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் சொன்னார்கள் அல்லவா? அதுகுறித்து ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மின் துறை அதிகாரிகளோடு கலந்து பேசி இருக்கிறார்கள். எனவே, இன்றுமுதல் அந்த ரூ. 1,870 என்பதை, ரூ. 1,570 தான் வசூலிக்க வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் ஏராளமான செய்திகள் சொல்ல வேண்டுமென்று இருந்தாலும், நேரம் இல்லாத காரணத்தினால், சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

தொழிற்சங்கத் தலைவர்கள், மின் தொழிலாளர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு..........



**திரு. முகம்மது கோதர் மைதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொஞ்சம் இருங்கள்; உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தொழிலாளர்கள் தங்களுடைய பணிக்காலத்திலே இறந்து விடுவார்களேயானால், அவர்களுடைய குழந்தைகளுக்கு வேலை கொடுக்கும்போது, அவர்களுக்கு உரிய கல்வித் தகுதி இல்லாவிட்டால், அதற்கான exemption கொடுங்களேன் என்று கேட்கிறார்கள். அதுகுறித்து மின்சார வாரியம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் சில தொழிற்சங்கங்கள், T.C.L. ஆக இருக்கக்கூடியவர்கள் நிரந்தரப்படுத்தப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் ஓய்வு பெறுகிற நேரத்திலே, pension-க்கு, T.C.L. ஆக பணியாற்றக்கூடிய காலத்தைக் கணக்கிலே எடுத்துக் கொள்வதில்லை; அதையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று எல்லாக் கட்சிகளின் தொழிற்சங்கங்களும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. நான் முதலமைச்சரிடத்திலேயும் பேசினேன். நிதித் துறைச் செயலாளரிடத்திலேயும் பேசி இருக்கிறேன். மின்வாரியத் தலைவரிடத்திலேயும் பேசி இருக்கிறேன். எனவே, அதையும் இந்த அரசாங்கம் மிக கவனத்தோடு பரிசீலிக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்வாரியத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்ன கருத்துகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லியிருக்கிறேன். முழுமையாகச் சொன்னதாக நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இருந்தாலும், நீங்கள் சொன்ன அந்த விவரங்களையெல்லாம் இங்கே அதிகாரிகள் குறிப்பெடுத்திருக்கிறார்கள். அவ்வாறு குறிப்பெடுக்கப்பட்டு என்னென்ன கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்களோ, அதற்கான பதில்கள், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு 3 மாத காலத்திற்குள்ளாக எது எது நடவடிக்கை எடுக்க முடியும்; எது முடியாது; அதற்கு என்ன காரணம் என்பதை விளக்கமாகப் பதில் அனுப்பும்படி நான் கேட்டுக்கொள்ள இருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1999 நவம்பர் 22

இந்தச் சூழ்நிலைகளுக்கு இடையிலே, மின்சார வாரியத்திலே ஏறக்குறைய ஒரு இலட்சத்து 10 ஆயிரம் தொழிலாளர்கள் இரவு பகலாகப் பணியாற்றுகிறார்கள், ஓரளவுக்குத் திறமையாகவும் பணியாற்றுகிறார்கள். இந்த நிர்வாகத்தை மிகத் திறமையாக நடத்துவதற்கு அதனுடைய வாரியத் தலைவரும், உறுப்பினர்களும்கூடக் காரணமாக இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, நல்ல ஆலோசனைகள் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமானது; விவசாயத்தைப் பற்றியது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே முக்கியமானதுதான், எல்லா உறுப்பினர்களும் பேச வேண்டியதெல்லாம் முக்கியமானதுதான். நீங்கள் பேசுவது மட்டுமல்ல. மின்சாரத் துறை அமைச்சரும், உள்ளாட்சித் துறை அமைச்சரும், விவாதம் நடக்கிறபோது ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவ்வப்போதே பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடைசியாக பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. இப்போது ஒரு மணி நேரம் பேசியாகிவிட்டது., இதற்குப் பிறகும் விளக்கம் கேட்டால் எப்படி? உட்காருங்கள், (குறுக்கீடு) இல்லை.

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-11-1999) செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

80. 1999ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கை வரி மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வரி (தகராறுகளைத் தீர்த்து வைத்தல்) விதிகளை வகுப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 07-06-1999ஆம் நாளிட்ட 131ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1999ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை



1999 நவம்பர் 22]

வரி, கேளிக்கை வரி மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வரி (தகராறுகளைத் தீர்த்து வைத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1999) 16(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)].

81. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 08-06-1999ஆம் நாளிட்ட 135ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

82. வணிக வரிகள் ஆணையாளரை அறிவிக்கையிடப்பட்ட அதிகாரியாகவும், வணிக வரிகள் துணை ஆணையாளர் ஒவ்வொருவரையும் அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளிலுள்ள எந்தவொரு வணிகரை/உரிமையாளரைப் பொறுத்தமட்டில், அதிகாரம் பெற்ற அதிகாரியாகவும் நியமிப்பது குறித்து வணிக வரிகள் துறையின் 16-6-1999ஆம் நாளிட்ட (145ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1999ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி, கேளிக்கை வரி மற்றும் ஆடம்பரப் பொருட்கள் வரி (தகராறுகளைத் தீர்த்து வைத்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 12/1999) 16(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

83. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்ததுகுறித்து வணிக வரிகள் துறையின் 29-06-1999ஆம் நாளிட்ட 155ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

84. சுட்ட களிமண்ணைக் கொண்டு இயந்திரத்தால் செய்யப்பட்ட ஓடுகளை விற்பனை செய்யும் யாதொரு வணிகர் 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில், எட்டு சதவீதத்திலிருந்து நான்கு சதவீதமாகக் குறைப்பதுகுறித்து வணிக வரிகள் துறையின் 04-10-1999-ஆம் நாளிட்ட 211ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1999 நவம்பர் 22

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

27. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று மூன்றாவது அறிக்கை, 1999-2000.

28. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று நான்காவது அறிக்கை, 1999-2000.

29. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஐந்தாவது அறிக்கை, 1999-2000.

30. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஆறாவது அறிக்கை, 1999-2000.

31. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று ஏழாவது அறிக்கை, 1999-2000.

32. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை, 1999-2000.

33. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஆறாவது அறிக்கை, 1999-2000.

34. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று ஏழாவது அறிக்கை, 1999-2000.

35. பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது அறிக்கை, 1999-2000.

36. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினான்காவது அறிக்கை, 1999-2000.

37. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை, 1999-2000.

38. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பதினாறாவது அறிக்கை, 1999-2000.

39. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

221 203
D 31/N99
V211, N99.85.2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.